
Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 58 • 11.09.2016






## ‘புலியென்றார்கள்; கடத்தி சென்று அடித்து கொன்றோம்’

ஈ.பி.டி.பி முன்னாள் உறுப்பினரின் ‘பகீர்’ வாக்குமூலம்

நான் பானுஜன் அல்ல;

## மோனிஷா!


ஒரு திருநங்கையின் கண்ணீர் தொடர்



தூக்குமேடையில் நிற்கும் மட்டக்களப்பு 22



கை இழந்தும் கலங்காதவர் 23



கவனம் கைத்தொலைபேசி காதலர்கள் 28

www.facebook.com/sundaralingamthanigaivasan
டோனியும் இல்லன்டா மேற்கு இந்தியா தோத்து இருக்கும்...
நல்ல காலம் காப்பாத்தினாரு மகராசர். #bravo


www.facebook.com/bibiligan
ஆலய வீதியில் தட்டில் தட்டி பாடி விட்டு தட்டை நீட்டிய பார்வையற்றவரை கண்டும் காணாமல் கடந்து சென்ற பலரை கண்ட பின் தான் புரிந்துகொண்டேன் இங்கு கண் காது போனவன் கனபேர் என... ஓடி போங்கள் உள்ளே கல்லுக்கு அபிசேகம் ஆராத்தியாம்...


www.facebook.com/arun.darsan
#ஆய்வு ஊடகத் தகவல்
பெண்கள் அவ்வளவு சீக்கிரமாக ஆண்களிடம் தன் காதலை முந்திக்கொண்டு சொல்லிவிடுவதில்லை.. அப்படிச் சொல்லிவிடும் பெரும்பாலான பெண்களுக்கு பல்ப்பே ரிப்ளையாக கிடைக்கிறது... "வல்லவிக்கு வல்லவன் இவ் வையகத்தில் உளன்"


www.facebook.com/shoba.sakthi
கழுக்காணிக்கண்ணன்
மு.திருநாவுக்கரசின் அரசியல் ஆய்வுகளைப் படிக்கையில் உ.வே.சா அவர்கள் எழுதிய வியாசத்திலுள்ள சுவையான சம்பவமொன்று எனக்கு ஞாபகம் வரும்.
வித்துவான் தியாகராசா செட்டியாருக்கு, ஒரு வைணவப் புலவர் 'கழுக்காணிக்கண்ணன்' என்ற பதத்திற்கு இப்படிப் பொருள் விளக்கினாராம்: கழுக்காணி என்றால் உலக்கை என்று அர்த்தம். அந்த உலக்கையை வேங்கை மரத்தால் செய்வார்கள்.வேங்கை என்றால் புலி. புலிக்கு புண்டரீகம் என இன்னொரு பெயர் உண்டு. புண்டரீகமென்றால் தாமரை. அதாவது கழுக்காணி உலக்கையாகி உலக்கை வேங்கையாகி வேங்கை புலியாகிப் புலி புண்டரீகமாகிப் புண்டரீகம் தாமரையாகித் தாமரை பத்மாக்ஷன் ஆகியது. அதாவது கழுக்காணிக்கண்ணனென்பது பத்மாக்ஷன் என இன்னொரு நாமம்கொண்ட திருமாலைக் குறிக்கிறதாம்.


www.facebook.com/mynthan
பெண்களுக்கு தாடி பிடிப்பது நமக்கு ஒரு வகையில் Cost Effective விஷயம் என்றாலும்கூட, மறுபக்கம் டெய்லி காலையில் ஷேவ் செய்யும் கொடூரமான,போரிங்கான தொழிலுக்கு இந்த ஜெனரேஷனில் நாம் டாட்டா காட்டியாகிவிட்டது. சில சமயங்களில் தொழில் ரீதியில் சில பெரிய மனுஷங்களை சந்திக்கும் தேவையேற்படின், மீட்டிங்குக்கான ஏற்பாடுகளுக்கு சமாந்தரமாக தாடியை ப்ளான் பண்ணி வளர்ப்பதும் ட்ரிம் செய்வதும் வாடிக்கையாகிவிட்டது.கொஞ்சம் சீரியஸ்னெஸ்,கொஞ்சம் மேச்சூரிட்டி லுக். சிலவருடங்களுக்கு முன்புவரை,விதம் விதமாக முகத்தில் துணியை கட்டிவைத்து வாளால் கண்மூடித்தனமாக கிழித்ததுபோல் கட்டிங் வைத்திருந்த காலம் போய் இப்போது முழுமையான தாடியை நோக்கி இளம் சமுதாயம் முண்டியடிக்கிறது. நன்றி ப்ரேமம்-பெண்கள்.


www.facebook.com/kiruthikan.nadarajah
"வெண்ணிலவே வெண்ணிலவே வானத்த விட்டுட்டு வா...." எனும் உன்னிமேனனின் குரலின் வெளிவந்த சோகப்பாடலையும், குத்துப் பாடலாக மாற்றிய பெருமை சிங்கள மியூசிசன்சையே சாரும். ஹெட் போன் போட்டாலும் அதையும் தாண்டி கேக்குதே.

# க்ளிக் பக்கம்


திருவிழா காலத்தில் ஒரு பொன்மாலை பொழுது நல்லூர் கந்தன்

**என்னைப்பற்றி:** நான் மயூரப்பிரியன். சுயாதீன ஊடகவியலாளராக யாழில் கடமையாற்றுகிறேன். புகைப்படங்கள் எடுப்பதில் நிறைய ஆர்வம் உள்ளது.



படம்: மயூரப்பிரியன்

இடம்: நல்லூர்



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk




அசல் யாழ்ப்பாண சுவை மற்றும் தரம் குன்றாத அனைத்துப்பாரம்பரிய உணவு வகைகளையும் சுவைத்து மகிழ தமிழ் மக்களின் அங்கிகாரம் பெற்ற ஒரேயொரு உணவகம்
AACHE
HOT FOOD RESTAURANT
ஆச்சி
ஹாட் பூட் ரெஸ்ட்ரொரன்ட்
மிகவும் சுத்தமானது அத்தோடு மிக மிக தரமானது, செயற்கை சுவையூட்டிகள் அற்றது, யாழ்ப்பாண பாரம்பரியத்தைக் கொண்டது, குறுகிய காலத்தில் அதிகளவான வாடிக்கையாளரைப் பெற்று யாழ்ப்பாணத்தில் தன்னிகரில்லாது முன்னிலை வகிக்கும் ஒரேயொரு உணவகம்.

புதன், சனி ஞாயிறு போன்ற நாட்களில் மதியம் சுவையான யாழ். ஒடியல் கூழினை சுவைத்து மகிழலாம்...


சகல விதமான வைபவங்களுக்குமான அனைத்து உணவு வகைகளையும் ஓடர் செய்து உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
147, பலாலி வீதி, திருநெல்வேலி.
கிளைகள்
01, நவீன சந்தை, மானிப்பாய்.
102, கண்டி வீதி, சாவகச்சேரி.
கைதடி கிழக்கு, கைதடி.
தொலைபேசி
021 222 5001 | 021 205 7455
HOT LINE 021 222 5010














கொழும்பில் இயங்கி வரும் பிரபல்யமான SB TRAVELS AND TOURS PVT LTD இலக்கம் 324 அலுத்மாவத்தை வீதியிலும் அத்துடன் தனது கிளைகளை கதிரேசன் வீதியிலும் தற்போது யாழ் மண்ணில் இலக்கம் 216 கஸ்தூரியார் வீதியிலும் தனது கிளையை விஸ்தரித்துள்ளது



வானில் பறக்கும் கனவுகளை
SB TRAVELS & TOURS (PVT) LTD.
உடன் உங்கள் கனவுகளை நினைவாக்கிட எமது சேவைகள்...

IATA Accredited Agent

- இங்கு அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டுக்களையும் வீசாக்களையும் மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படுகிறது.
- இந்தியாவுக்கான விசாக்கள் வெகு விரைவிலும் மற்றும் மலேசியா, தாய்லாந்து, டுபாய் ஆகிய நாடுகளுக்குமான வீசாக்கள் செய்து தரப்படும் பயணக்காப்புறுதி பிரயாண திகதி மாற்றம் சுற்றுலா ஒழுங்கமைப்பு Hotel முன் ஏற்பாடுகளும் செய்து தரப்படும்
- ஐரோப்பிய நாடுகளுக்குமான பயணச்சீட்டில் விசேட விலைக்கழிவுகளும் வீசா ஆலோசனைகளும் வழங்கப்படும்
- மேலும் BUDJECT AIRLINES SPICEJET , AIR ASIA, FLY DUBAI, AIRARABIA , ROTANA , ஆகிய விமானங்களில் குறைந்த கட்டணத்தில் செல்வதற்கு இன்றே நாடுங்கள்
- அத்துடன் தற்போது விசேட விலைக்கழிவுகளாக சென்னை 19800 மதுரை 17500 டோகா 16000 துபாய் 15000 சாஜா 13000 ஆகிய குறைந்த கட்டணங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

No. 216, Kasthuriyar Road, Jaffna, Sri Lanka.
0212229555 | 0212228555 | 0766911080 | 0766911081

No. 324, Aluthmawatha Road, Modara, Colombo - 15.
011 254 0208 | 011 254 0111
077 108 3480 | 077 108 3481/82

No. 132, Sri Kathiresan Street, Colombo - 13.
011 233 3322 | 011 233 4470
077 108 3483 | 076 691 1090

E-mail : sbtravels216@yahoo.com | sbtravels132@yahoo.com | sbtravels132@gmail.com

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

செய்யவே கூடாத பாவங்களைக் கூட, அன்றாட வேலையாகச் செய்வது இந்தக் காலத்து இயல்பாகிவிட்டது. உடலுக்குச் சுண்ணாம்புச் சத்து (கல்சியம்) வேண்டும் என்பதற்காக மாடுகளின் வாழும் உரிமையை ஒழித்துக்கட்டுவது அத்தகைய பாவங்களில் ஒன்று. "பாலில் சுண்ணாம்புச் சத்து மிகுதியாக உள்ளது" என்ற அறிவிப்பால், நாம் பெற்றவை சரிசெய்ய இயலாத நோய்கள், இழந்தவையோ மீட்க இயலாத செல்வங்கள்.

கன்றுகளுக்கான பாலைச்சுரண்டாமல், மிகக் குறைவாக மட்டுமே பால் பீய்ச்சுவது தான் நமது மரபு. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னர் பால் அருந்தும் வழக்கம் மிகமிகக் குறைவாக இருந்தது. இப்போதுதான் லீட்டர் கணக்கில் பால் வாங்கும் பழக்கம் உள்ளது. அந்தக் காலத்தில் பாலை விலைக்கு விற்பதே பாவம் எனக் கருதினார்கள். நோயுற்றோருக்கு மருந்தாகவும், தவிர்க்க இயலாத சூழல்களில் தாய்ப்பாலுக்கான மாற்றாகவும் பால் பருக்கப்படுகின்றது.

தயிர், வெண்ணெய், நெய், ஆகிய பால் பொருட்கள் மட்டும் பரவலாகப் பயன்படுத்தப் பட்டன. வெண்மைப்புரட்சி என்ற பெயரில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் நமது மரபில் இருந்த அறக்கொள்கைகளை எல்லாம் வீழ்த்தி விட்டு மாடுகளுக்கு எதிரான எல்லா பாவங்களையும் நியாயப்படுத்திவிட்டது.

"எல்லோருக்கும் பால் உணவு" என்பது அந்தப் புரட்சியின் மந்திரம். அதை உச்சரித்த வித்தகர்கள் பல்வேறு ஆய்வறிக்கைகளைத் தயாரித்து வெளியிட்டார்கள். "ஒட்டுமொத்த சமூகத்திலும் சத்துக் குறைபாடு உள்ளது. எல்லோரும் அதிக அளவில் பால் பருகினால்தான் அந்தக் குறை நீங்கும் என்றும் அந்த அறிக்கைகள் முழங்கின.

நமது சமூகத்தில் இருந்த பெரும்பாலான மாட்டு வகைகள், ஒரு நாளைக்கு 5 லீற்றர் அளவில் மட்டும் பால் சுரக்கும் தன்மை கொண்டவை. அந்தக் காலத்தில் மாடு வளர்ப்போர் அதிகமாக இருந்தனர். பால் சுரப்பு அளவும் தேவைக்கு ஏற்ப இருந்தது. வெண்மைப் புரட்சியின் செயல் திட்டப்படி ஒரு நாளைக்கு 20 லீற்றர் வரை சுரக்கும் மாட்டு வகைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த மாடுகள் நம் ஊரில் உள்ள புற்களையும் புதர்களையும் மட்டும் மேய்ந்தால், நோயுற்றுச் செத்துவிழக்கூடியவை. ஆகவே அவற்றுக்கான தீவன நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அந்தத் தீவனங்களுக்காக மக்காச்சோளம் போன்ற அயல்நாட்டுப் பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டன. காட்டில் கிடைக்கும் புற்களையும் வைக்கோலையும் மேய்ந்து விட்டு அற்புதமான உணவாகிய பாலைச் சுரந்து கொண்டிருந்த நமது பசுக்கள் முற்றிலும் ஒதுக்கித் தள்ளப்பட்டன. முழுக்க முழுக்க நிறுவனங்களின் தயாரிப்புக்களை மட்டுமே உண்டு வாழும் அயல் வகை மாடுகள் போற்றி வளர்க்கப்பட்டன.

"பால் சுரப்பு" என்பது இயற்கையாகச் சுரக்கும் பாலைக் குறிக்கும் சொல். வெண்மைப் புரட்சி என்னும் மாய நிகழ்வுக்குப் பிறகு "பால் உற்பத்தி" என்ற சொல் மிக நேர்த்தியாக நிலை நாட்டப்பட்டது. சீப்பு, உள்ளாடை, குப்பைக் கூடை, போன்றவை உற்பத்தி செய்வதைப் போல பாலும் "உற்பத்தி" செய்யப்பட்டது. எல்லா உயிரினங்களுக்கும் உணவு படைக்கப்படுகின்றது. ஆனால் இவர்களோ பாலை "உற்பத்தி" செய்கிறார்கள்.

இந்தச் சொல் மாற்றம் மிகக் கூர்மையானதுதான். ஏனெனில், இவர்கள் பசு எனும் உயிரினத்திடம் இருந்து பாலைப் பகிர்ந்து கொள்ளவில்லை. பசுவின் உடலில் இருந்து பாலைத் தயாரிக்கின்றார்கள்.

இயற்கையாக பால் சுரப்பதற்கு, பசுவின் மடியைக் கன்று முட்டி மோதி ஊட்ட வேண்டும். பசுக்களைத் தடவிக் கொடுத்து அவற்றோடு பேசிக் கொண்டே கன்றுகளை ஊட்டவைத்து பால் சுரந்தும் பீய்ச்சத் தொடங்குவது நம் மரபு.


இப்போது பால் சுரப்பதற்குக் கன்றுகளே தேவை இல்லை. பசுக்களின் கழுத்தில் ஓர் ஊசியை குத்தினால் பால் சுரக்கின்றது. பாலைக் கறப்பதற்கு மனிதர்கள் தேவை யில்லை. இயந்திரங்களே போதும். பசுவின் கழுத்தில் ஊசி, மடியில் இயந்திரம் இந்தக் காட்சியை கற்பனை செய்து பாருங்கள். குப்பை கூளங்களை உறிஞ்சி எடுக்கும் இயந்திரம் போல, ஓர் உயிரினத்தின் மடியில் இயந்திரம் பாலை உறிஞ்சுகின்றது. இதுதான் பால் உற்பத்தி என்னும் நவீனத்தின் விபரீதச் சொல்லாடலின் உண்மை முகம். உங்கள் மனதுக்கு இது நியாயமாகத் தெரிகிறதா?

எந்தப் பசுவும் இப்போது உடலுறவு கொள்ளுவது இல்லை என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். ஆணும் பெண்ணும் புணர்ச்சி யில் ஈடுபட்டு உயிர்கள் பெருக வேண்டும் என்பது படைப்பு விதி. இரு உயிர்கள் இன்பமாக இருந்தால் அங்கே மேலும் பல உயிர்களை அனுப்பி வைப்பதுதான் படைப்பவரின் குணம். நவீன மேதைகளில் பேராசைச் செயல்களால் மாடுகளின் உடலுறவு கொள்ளும் உரிமை முற்றிலும் மறுக்கப்பட்டுள்ளது.


பசுக்களின் பிறப்புறுப்பில் விந்து ஊசிகளைச் செலுத்துவதுதான் வெண்மைப் புரட்சியின் புதிய தொழில்நுட்பம். வேதிப் பொருட்கள் அடங்கிய தீவனங்கள்தான் இப்போதைய மாடுகளின் உணவு. அவ்வவ் போது செலுத்தப்படும் மருந்து ஊசிகள்தான் அவற்றின் உடல்நலப் பராமரிப்பு. காலையும், மாலையும் கழுத்தில் குத்தப்படும் ஊசிகள்தான் பால் சுரப்புக்கான தூண்டுதல். மடிக்காம்புகளை உறிஞ்சி எடுக்கும் இயந்திரங்கள்தான் இந்தக் காலத்துக் கன்றுக் குட்டிகள். பிறப்பு உறுப்பில் செலுத்தப்படும் விந்து ஊசிகள் தான் காளைகளின் ஆண்குறிகள்.

இவ்வளவுக்கும் பிறகு உற்பத்தி செய்யப் படும் பாலைத்தான் நீங்கள் பருகிக் கொண்டி ருக்கின்றீர்கள் என்பதைத் தெரிந்து கொள் ளுங்கள். இவ்வாறு எல்லாம் உற்பத்தி செய்யப் பட்ட பால் பல நாட்கள் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்டு மேலும் பல வேதிப்பொருட்கள் சேர்க்கப்பட்டு பல்வேறு "கலப்புக்களும் சுத்திகரிப்புக்களும்" செய்யப் பட்டுத்தான் உங்களை வந்தடைகின்றன என்பதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வீதியில் வாழ்ந்த பால்காரர் பாலில் நீர் கலந்தார் என்பதற்காகத்தான், பாக்கெட் பால் வகைகளைப் போற்றி வளர்த்தீர்கள். இப்போது பாலில் நீர் கலப்பது இல்லை. யூரியா உள்ளிட்ட வேதி நஞ்சுகளைத்தான் கலக்கிறார்கள்.



இந்த இடத்தில் நான் கேட்க விரும்பும் கேள்வி என்னவெனில் சுண்ணாம்புச் சத்து நிறைந்த பால் உற்பத்தி பொங்கி வழியும் இந்த நாட்டில் ஏன் எலும்புச்சிதைவு மற்றும் மற்றும் பற்சிதைவு நோயாளிகளின் எண்ணிக்கை பெருகுகிறது?



ஒரே ஒரு தேநீர் வாங்கித் தருபவரைக் கூட நன்றியோடு பார்க்கும் கூலித்தொழிலாளர்கள் தான், மூட்டைகளைச் சுமக்கிறார்கள். சாலைக ளை வெட்டுகிறார்கள். சாக்கடைகளை அள்ளுகிறார்கள். சத்துக்களுக்காக பாலை உறிஞ்சி எடுக்கும் சமூகம் மூட்டுவலியுடனும் பல்வலியுடனும் நாட்களை நகர்த்திவருகிறது.

> பசுக்களின் பிறப்புறுப்பில் விந்து ஊசிகளைச் செலுத்துவதுதான் வெண்மைப் புரட்சியின் புதிய தொழில்நுட்பம். வேதிப் பொருட்கள் அடங்கிய தீவனங்கள்தான் இப்போதைய மாடுகளின் உணவு. அவ்வவ் போது செலுத்தப்படும் மருந்து ஊசிகள்தான் அவற்றின் உடல்நலப் பராமரிப்பு.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது மூடநம்பிக்கை அல்ல உண்மையான அறிவியல். மிகக் குறைவான அளவு பால் அருந்திய காலத்தில் வாழ்ந்த மக்கள், கடுமையான உடல் உழைப்பில் ஈடுபடும் அளவுக்கு வலிமையுடன் இருந்தனர். விடிந்தது முதல் அடைவது வரை பால் பருகும் இந்தக் கால மனிதர்களோ, காலை மாலை நடப்பதைக் கூட பெரும் பயிற்சியாகச் செய்கின்றனர். காரணம் மிக எளிமையானதுதான். வலுவான பசுக்கள் தரும் பால், வலுவான மனிதர்களை உருவாக்கும். எல்லா வகையிலும் துன்பத்தில் உழலும் பசுக்களின் பால், துன்பங்களைத்

தொடர்ச்சி 7-ம் பக்கம்

# ஊழல் விசாரணை அவசியம்!

வடமாகாண அமைச்சுக்களில் மோசடி, துஷ்பிரயோகம் நடந்திருக்கலாமென்றும், அதை முதல்வர் குழு அமைத்து விசாரணை செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது. நீண்ட இழுபறியின் பின்னர் இந்த விவகாரத்தில் ஒரு தீர்வு காணப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபை ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற ரீதியில் அல்லாமல், வேறுவிதத்தில் பிளவுபட்டு இருப்பது ஒன்றும் சிதம்பர இரகசியமல்ல. அதன் காரணத்தை கண்டறிவதற்கு அரசியல் விஞ்ஞானமெல்லாம் கற்றுவரத் தேவையில்லை. மேலோட்டமான அரசியல் அவதானிப்பே போதும். நாங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் போடும் "திருவிளையாடல்கள்" என்னவென்பதை தெரிந்து கொள்ளலாம்.

இந்த ஊழல் குற்றச்சாட்டு விவகாரம் முதலில் விவசாய அமைச்சின் மீதே எழுப்பப்பட்டது. இப்பொழுது எல்லா அமைச்சுக்களின் ஊழல் தொடர்பாகவும் விசாரிப்பதென்ற நிலையை எட்டியுள்ளது.

கடந்த ஒருவருடத்திற்கு மேலாக இந்த ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்தால் மாகாணசபை அதிகம் திண்டாடி வருகிறது. யாரும் யாரிலும் குற்றம்சாட்டி பொழுதுபோக்காக பேசிக்கொண்டிருக்கலாமென்பதுதான் நிலைமை. "அந்த திட்டத்தில் ஊழல் நடந்திருக்கலாம்ஞ் இந்த திட்டத்தில் ஊழல் நடந்திருக்கலாம்" என்பது மாதிரியான ஊகங்களை ஒவ்வொரு அரசியல்வாதியும் கூறுகிறார்கள்.

ஆனால் இதுவரை யாரும், எதற்கும் ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத வரை அனைத்தும் வெறும் குற்றச்சாட்டுக்கள் தான். எதையும் நிரூபிக்காமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பவர் அவதூறு பரப்புபவராகவும் ஆகிவிடலாம். ஊழல்குற்றச்சாட்டு விவகாரத்தில் மக்கள் பிரதிநிதிகளிற்கு உள்ள கடப்பாட்டை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். வெறுமனே குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டிருப்பது சரியல்ல. அதற்கான ஆவணங்களை திரட்டி அமைச்சுக்கள் பற்றிய விசாரணைக்காக உருவாக்கப்படும் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இது அவர்களின் கடமையும் கூட. அப்படி செய்யாதவரை அவர்கள் ஆதாரமில்லாத ஒன்றைப்பற்றிதான் பேசுகிறார்கள் என்பதை கவனத்தில் வைத்திருக்க வேண்டும்.

மேலே சொன்னது, இந்த விவகாரத்தின் ஒரு பக்கம். இன்னொரு அசிங்கமான பக்கமும் உள்ளது. அது நம்மவர்கள் மத்தியில் நிறைந்துள்ள ஊழலின் அசிங்கம் பற்றியது.

ஊழல் அரசதுறைகளில் கோலோச்சிக்கொண்டிருப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. வேலைவாய்ப்புக்கள், ஒப்பந்தங்களில் என்ன நடக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஊழலிற்கு இன, பிரதேச, மொழி வேறுபாடு கிடையாது. தெற்கில் ஊழலிற்கு ஒரு முகம் உள்ளதென்றால், வடக்கு,கிழக்கிலும் அது உள்ளது.

தமிழர்கள் ஆளுகை செய்யும் நிர்வாக அலகுகளில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. கூட்டுறவு சங்கங்கள் தலைநிமிர முடியாமைக்கு அதுதான் காரணம். கூட்டுறவுசபை மீது அதிக ஊழல் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அதன் பொறுப்பிலிருந்த பலரது கைகளில் கறைபடிந்துள்ளது.

யாழ் மாநகரசபை ஊழல் பற்றிய நீண்டநாள் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. தற்போது விசாரணையில் முன்னேற்றமுள்ளதாக கூறப்படுகிறது. நெல்சிப் ஊழல் அண்மையில் விவகாரமாகியது. திணைக்களங்களில் நாகரிக உடையணிந்து, கோட் அணிந்த மலைவிழுங்கிகள் உள்ளனர்.

இது இப்பொழுது அமைச்சுக்களிலும் உள்ளது. அமைச்சர்கள் ஊழல் புரிந்தார்களா இல்லையா என்பதை விசாரணைக்குழு கண்டறியட்டும். ஆனால் அமைச்சுக்களில் ஊழல், துஷ்பிரயோகங்கள் நடந்திருக்கலாமென சந்தேகிக்க வலுவான ஏதுநிலைகள் உள்ளன. ஒவ்வொரு அமைச்சிலும் மலையையே விழுங்கிவிட்டு, அமசடக்கமாக உள்ளவர்கள் பற்றிய ஏராளம் கதைகளை கீழ்மட்ட பணியாளர்கள் சொல்கிறார்கள்.

ஐம்பதாயிரம் ரூபா திட்டத்திற்கு ஐந்து இலட்சம் செலவிட்டு விழா எடுக்கும் அதிபுத்திசாலிகள் அமைச்சுக்களில் உள்ளனர். பசில் ராஜபக்சவையே தூக்கிச்சாப்பிடும் விதமான "மிஸ்ரர் 10 பேசன்"கள் அமைச்சு அலுவலகங்களில் தாராளமாக இருக்கிறார்கள்.

எல்லா அமைச்சுக்களிலும் இதுவரை நடைமுறைப்படுத்திய திட்டங்கள், ஒப்பந்தக்கோரல்கள், திட்ட செயற்பாட்டுமுறை, நிதி சரியாக செலவிடப்பட்டதா என்பதை நுணுக்கமாக விசாரணை செய்ய வேண்டும். வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள் மட்டத்தில் மட்டுமல்லாமல், திணைக்களங்கள், உள்ளூராட்சிசபைகள், கூட்டுறவுசபைகள் மட்டத்தில் கறாரான விசாரணை அவசியம்.

அத்துடன், இந்த இடங்களில் ஊழல், துஷ்பிரயோகம் எதிர்காலத்தில் நடக்காத விதமான செயற்பாட்டு பொறிமுறையொன்று உருவாக்கப்படுவதும் அவசியம்.

நமது அரசுகளும், நிர்வாகங்களும் ஊழலால் ஆனதல்லாமல் இருக்கட்டும்!

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561


ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk

# சொன்னார்கள்



**ரிசாட் பதியுதீன் – அமைச்சர்**
வடக்கு கிழக்கை இணைத்து மக்களின் சந்தோசமான வாழ்க்கையை சீர்குலைக்க தேவையில்லை. கிழக்கிலுள்ள தமிழ் புத்திஜீவிகளும், யதார்த்தமாக சிந்திக்கும் தமிழ் தலைமைகளும் கிழக்கை வடக்குடன் இணைத்து மக்களை அடிமைகளாக்குவதை விரும்பவில்லை. அதனால் வடக்கு, கிழக்கு இணைப்பிற்கு நாங்கள் ஒருபோதும் துணைபோக மாட்டோம்.




**சி.வி.விக்னேஸ்வரன் – வடக்கு முதல்வர்**
ஐ.நா செயலாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதர தாமதமானதால் எல்லா நிகழ்வுகளும் தாமதமாகிவிட்டது. ஒரு மணித்தியாலம் காத்திருந்தோம். அதன்பின் அவரது அலுவலர்கள் வந்து, அவருக்கு கைலாகு மட்டும் கொடுத்து வழியனுப்பிவிடுங்கள் என கேட்டார். அதற்கு மனவருத்தத்தை தெரிவித்தோம். பின்னர் சரி ஆறுநிமிடம் தரலாமென ஆறு நிமிடம் தந்தார்கள்.



**மைத்திரிபால சிறிசேன – ஜனாதிபதி**
பான் கீ மூன் வரும்போது வடக்கில் பெருமெடுப்பில் போராட்டங்கள் நடக்குமென எதிர்பார்த்தேன். நான் எதிர்பார்த்த அளவு அங்கு போராட்டங்கள் நடக்கவில்லை. சின்னசின்ன போராட்டங்களே நடந்தன. ஆனால் அந்த போராட்டம் நடத்தியவர்களின் கோரிக்கையில் நியாயம் உள்ளது.



**ரஞ்சித் றொட்ரிகோ – முன்னாள் தலைவர், இலங்கை கால்பந்து சம்மேளனம்**
கால்பந்தாட்ட சம்மேளனம் தன்னை கைவிட்டுவிட்டதாக ஈ.பி.சன்னா கூறியிருப்பது பிழையானது. அவருக்கு நிறைய வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுத்தோம். அவர் அதனை சரியாக பயன்படுத்தவில்லை. அவர் எப்படி வாழ வேண்டும் என்பதை சம்மேளனம் தீர்மானிக்க முடியாது. அவர்தான் கட்டமைக்க வேண்டும். கால்பந்தின் மூலம் அவர் இலட்சக்கணக்கில் சம்பாதித்தார். அதை சரியான முறையில் பயன்படுத்தவில்லை.



**ஸ்ரீநேசன் – எம்.பி, தமிழ்தேசிய கூட்டமைப்பு**
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தை உருவாக்குவது பற்றி தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் பேசினார்கள். ஆனால் முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன்தான் அதன் உருவாக்கத்தில் பெரும் பங்குவகித்தார். உண்மைகளை மறைக்ககூடாது. அது கசக்குத்தான். அவர் வேறு கட்சியை சேர்ந்தவராக இருந்தாலும் உண்மையை வெளிப்படையாக சொல்ல வேண்டும்.

# எண்ணிக்கை


**142** ஏக்கர் கடந்த ஒருவாரகாலத்தில் கிளிநொச்சியில் படையினரால் விடுவிக்கப்பட்டது.

**1945.2** அமெரிக்க டொலர் வருட நடுப்பகுதி வரையில் சுற்றுலாப்பயணிகளால் இலங்கை ஈட்டியது.

**38,000** முதல் எட்டு மாதங்களில் இலங்கையில் டெங்கு பாதிப்பிற்குள்ளானவர்கள்.

**1,42,489** கிளிநொச்சியின் தற்போதைய மக்கள் தொகைவிடுவிக்கப்படவுள்ளது.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk



# சம்மந்தனின் முயற்சிகள்: முதலடிகள் எதிர்கொள்ளும் சவால்

கருணாகரன்

“நாங்கள் தனிநாட்டையோ தமிழீழத்தையோ கேட்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமதையான அதிகாரத்தையும் உரிமைகளையும் கொண்ட ஆட்சியையே கேட்கிறோம். நாங்கள் எந்த இனங்களுக்கும் எதிரானவர்களில்லை. எங்களை யாரும் எதிரிகளாகப் பார்க்கவும் வேண்டியதில்லை” என்று சம்மந்தன் கூறியிருக்கிறார்.

இப்படிச் சம்மந்தன் கூறியிருப்பது முக்கியமான ஒன்று. மட்டுமல்ல, இதை வர் மாத்தறையில் வைத்துச் சொல்லியிருக்கிறார். அதுவும் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இப்படிச் சிங்கள மையமொன்றில் வைத்து அவர் இதைச்சொல்லியிருக்கிறார். இதுவே எல்லாவற்றையும்விட முக்கியமானது. ஏனென்றால், நல்லிணக்கம் எந்தத் தரப்பிடமிருந்து வரவேண்டுமோ, அந்தத் தரப்பிடம் சென்று, அதற்கான உரையாடலை ஆரம்பித்திருக்கிறார். யாரிடம் உரிய பிரச்சினையை எடுத்துச் செல்ல வேண்டுமோ அவர்களிடமே செல்லவும் சொல்லவும் வேண்டும் என்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி இது எனலாம். அந்த வகையிலேயே இது முக்கியத்தும் வாய்ந்திருக்கிறது.

இதை ஏற்கனவே தமிழ் அரசியற் தரப்புச் செய்திருக்க வேணும். ஆனால், அப்படிச் செய்யப்படவில்லை. பதிலாக அரசாங்கத்தரப்புடன் மட்டுமே எல்லா உரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. அல்லது அரச தரப்புடன் இணைந்து கொண்டு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அதற்கப்பால் வேறு யாருடனும் எத்தகைய உரையாடல்களும் நடக்கவில்லை.

1986, 87 இல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமார ரணதுங்கவின் மக்கள் முன்னணியுடன் புலிகள் மெல்லியதொரு உரையாடலைச் செய்திருந்தனர். ஏனைய இயக்கங்களும் விஜயகுமார ரணதுங்கவுடன் தமிழ்நாட்டில் பேசியிருந்ததையும் இங்கு குறிப்பிட வேணும். இவை அனைத்தும் சிறிய அலைகள் மட்டுமே.

அரசாங்கத்துடன் மட்டும் தமிழ்த்தரப்பு பேசும்போது, எதிர்க்கட்சிகள் அந்தப் பேச்சுகளைக் குழப்பும் விதமாக நடந்து கொள்வது வழமை. இன்னும் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. கட்சிகளுக்கு அப்பால் சிங்களச் சமூகத்திடம் தமிழ்ச்சமூகத்தின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கும் அவர்களுடன் உரையாடுவதற்கும் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அவர்களைத் தூண்டுவதற்கும் உரிய முயற்சிகள் தமிழ்த்தரப்பினால் மேற்கொள்ளப்பட வேணும். அந்தப்பணிகளையே இப்பொழுது சம்மந்தனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முன்னெடுத்துள்ளன. இது வரவேற்கப்பட வேண்டியது. இதன் சாதகங்கள் எப்படி அமையும்? ஏதாவது சாத்தியப்பாடுகள் கிட்டுமா? என்று அவசரப்படும் கேள்விகளுக்கு உடனடிப்பதில்களோ, உத்தரவாதங்களோ இல்லை. ஆனால், இந்த முயற்சிகள் தவிர்க்கப்பட முடியாதவை என்பது மட்டும் உண்மை.

**குறைந்த பட்சம் மீள்குடியேற்றத்தை முழுமைப்படுத்தியிருக்கலாம். படைக்குறைப் பைச் செய்து நிரந்தர முகாம் அமைக்கிற காரியங்களைக் கைவிட்டிருக்கலாம். அரசியற்கைதிகளின் விடுதலையை நம்பிக் கையளிக்கும் வகையில் துரிதப்படுத்தியிருக்க வேண்டும்.**

சம்மந்தனின் இந்த முயற்சி தொடர்பாகவும் அவர் சிங்களச் சமூகத்திடம் தெரிவித்து வரும் தமிழ்த்தரப்பின் நிலைப்பாடு தொடர்பாகவும் பல வாதப்பிரதிவாதங்கள் தமிழ், சிங்களச் சூழலில் உருவாகியுள்ளன. தமிழ்த்தரப்பிலுள்ள தீவிர நிலைப்பட்ட சக்திகள் இது “சரணடைவுவாதம்“ என்று வாதிடுகின்றன. அவை தமிழீழத்தை அல்லது அதற்குச் சமதையான பிரிந்து செல்லக்கூடிய ஒரு அரசியற் தீர்வை மட்டுமே எதிர்பார்த்திருப்பவை. ஆகவே, அவற்றினால், சம்மந்தனின் இந்த நிலைப்பாட்டையும் இந்தக் கூற்றுகளையும் ஏற்றுக்கொள்ளவோ சகித்துக்கொள்ளவோ முடியாது. சம்மந்தனை மட்டுமல்ல, இதைவழிமொழிகின்றஎவரையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

ஆனால், உலக யதார்த்தம் சம்மந்தனின் இன்றைய நிலைப்பாட்டையே அங்கீகரிக்கிறது. இது ஒன்றும் கீழ்ப்படிதலோ விட்டுக் கொடுத்தலோ சரணடைவோ கிடையாது. பதிலாக நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கான நல்லெண்ண முயற்சி. இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், மெய்யாகவே மாண்புடைய ஒரு செயல் எனலாம்.

தமிழ்த்தரப்பு போராட்டத்திலும் போரிலும் தோற்கடிக்கப்பட்டிருக்கும் ஒரு நிலையில், காயங்களாலும் வலிகளாலும் அலைச்சல்களினாலும் வேதனையுற்றுக் கொண்டிருக்கும் வேளையில், வெற்றியடைந்ததாக நெஞ்சை நிமிர்த்திக்கொண்டிருக்கும் சிங்களத்தரப்பிடம் சென்று நல்லிணக்கத்தைப்பற்றிப் பேசுகிறது என்றால், அது சாதாரணமான ஒன்றல்ல. இதற்கு மிகவும் உறுதியான வலிமை, உச்சமான துணிச்சல், மகத்தான சகிப்புணர்வு அவசியம். இதனைச் சம்மந்தன் கடந்து ஆறு ஏழு ஆண்டுகளாக மெல்ல மெல்லச் செய்து வந்திருக்கிறார். இதற்காக அவர் மிகக் கடினமான சவால்களை எதிர்கொண்டுமுள்ளார். குறிப்பாகத் தான் சார்ந்த தமிழ்த்தரப்பிடம் அவர் சந்தித்த, சந்தித்துக்கொண்டிருக்கும் நெருக்கடிகள் அதிகம். அவமானப்படுத்தல்களும் வசைகளும் அதிகம். முதிய வயதில் இப்படியெல்லாம் நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டே இந்த மனிதர் தன்னுடைய காலடிகளை முன்வைத்துக்கொண்டிருக்கிறார்.

உண்மையில் போர் முடிவடைந்த பிறகு உருவாகியிருந்த சூழலில், தமிழ் அரசியலை முன்னெடுப்பது மிகமிகச் சவாலான காரியமாகவே இருந்தது. ஒரு பக்கத்தில் வெற்றியடைந்திருந்த அரசாங்கம். மறுபக்கத்தில் தோற்கடிக்கப்பட்ட தரப்பான தமிழ்ச்சமூகம். இரண்டும் இரண்டு வகையான எதிரும் புதிருமான உளநிலையைக் கொண்டிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமான ஒரு வழிமுறையைக் கண்டு பிடிப்பது என்பது மிக மிகக் கடினம். இருந்தும் சம்மந்தன் தன்னுடைய தெரிவு தொடர்பாக ஒரு தீர்மானத்தை வகுத்துக் கொண்டார். அதன்படி, கட்சிக்குள் தனக்கு நெருக்கடியைத் தந்து கொண்டிருக்கும் தீவிரநிலைப்பாட்டாளர்களை வெட்டியெறிந்தார். இதனால்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோர் வெளியேற்றப்பட்டமை நிகழ்ந்தது. அல்லது அந்தத் தரப்பு வெளியேற வேண்டியிருந்தது. அதுபோல நெருக்கடி கொடுத்த மற்றவர்களையும் வெற்றிகரமாக கையாண்டார்.

ஆனால், கூட்டமைப்புக்குள் இந்தப் பணியைச் செய்திருக்க வேண்டியவர்கள் சுரேசும் சித்தார்த்தனுமே. இருவரும் விடுதலைப் போராட்டப்பாரம் பரியத்திலிருந்து வந்தவர்கள். மட்டுமல்ல சிங்களச் சமூகத்தைப் பற்றிய புரிதலிலும் கடும்போக்கைக் கொண்டிருக்காத பின்னணியையும் உடையவர்கள் இருவரும். ஆனால், இதற்கு மாறாக இப்பொழுது சுரேஸ் கடும்போக்கில் நிற்கிறார். சித்தார்த்தன் இன்னும் வெளிப்படையாக எந்தத்தீர்மானங்களையும் எடுக்காத, வெளிப்படுத்தாத ஒரு போக்கையே கொண்டிருக்கிறார். ஆனால், வயதிலும் அனுபவத்திலும் தொடர்புகளிலும் அதிக சாத்தியங்களைக் கொண்டிருக்கும் சித்தார்த்தன் இந்த முயற்சியில் முன்னிற்க வேண்டியது அவசியம். பின்னின்றால் அரசியலிலும் அவர் பின்வரிசைக்கே தள்ளப்படக்கூடும்.

சம்மந்தன் போருக்குப்பிந்திய தன்னுடைய தீர்மானத்தின்படியும் அசைவுகளின் படியும் அவர் யாழ்ப்பாணத்தில் இலங்கையின் தேசியக் கொடியை ஏந்தியதிலிருந்து சிங்களச் சமூகத்துக்கும் தமிழ்ச்சமூகத்துக்கும் ஒரு தெளிவான சேதியைச் சொல்லிவருகிறார். இந்த நாட்டில் பிரிவினையைப் பற்றிப் பேசாமல், ஒருங்கிணைந்த இலங்கைக்குள் நியாயமான நீதியான தீர்வைப் பெறுவதற்குத் தமிழர்கள் தயார் என்ற சேதியிது.

ஆனால், இதையெல்லாம் சிங்களச் சமூகம் அந்தளவுக்குப் பொருட்படுத்தியிருக்கவில்லை. சிங்கள மக்களிடத்திலே சம்மந்தனின் சேதியை எடுத்துச்செல்வதற்கு கொழும்பின் ஊடகங்களோ, பிற அரசியல் மற்றும் அரசியல் சாராத தரப்புகளோ முயற்சிக்கவில்லை. ஏன் தமிழ்த்தரப்பிலும் போதிய ஊக்கங்கள் கிடைக்கவில்லை. இது ஏமாற்றத்தை அளிக்கும் நடவடிக்கையே. தமிழ்த்தரப்பில்

எதிர்ப்பலைகள் கிளப்பப்பட்டபோது, அதற்கு ஈடாக சிங்களத்தரப்பில் ஆதரவு அலைகள் கிளம்பியிருக்க வேண்டும். ஆனால், இதை தமக்கான அரசியல் முதலீடாக ஆக்க முயற்சித்தார் ரணில் விக்கிரமசிங்க. அதில் அவர் கணிசமான வெற்றியையும் அடைந்தார். எனினும் சம்மந்தன் தொடர்ந்தும் தன்னுடைய நிலைப்பாட்டின்படியே பயணத்தைத் தொடர்ந்தார். ஏனைய தரப்புகள் சம்மந்தனுக்குப் புலி முத்திரை குத்த முயற்சித்தன.

இருந்தும் மகிந்த ராஜபக்ஸவின் ஆட்சியை அகற்றுவதற்கான ஏனைய தரப்பினருடன் இணைந்து செயற்பட்டதன் மூலமாக புதிய அரசாங்கத்துக்குத் தன்னுடைய ஆதரவைத் தெரிவித்து, சிங்களச் சமூகத்திடம் அச்ச உணர்வைக் குறைக்க முயன்றார் சம்மந்தன். அதாவது, நாடு புதிய ஆட்சியொன்றை விரும்பும்போது, அதனுடன் அந்த உணர்வுடன் நாமும் இணைந்து கொள்கிறோம். நாம் புறத்தியில் நிற்கவில்லை என்பதே சம்மந்தனுடைய காட்சிப்படுத்தலாகும். இதைப்போலவே அவர் போர்க்குற்ற விசாரணை தொடர்பான அரசாங்கத்தின் புதிய நிலைப்பாட்டுக்குச் சம்மதம் தெரிவித்திருந்ததும். எந்த நிலையிலும் நாங்கள் சிங்களச்சமூகத்துக்கோ, அரசுக்கோ எதிரானவர்களாக இல்லை. மாறிச்சிந்திக்கும் காலம் போய் விட்டது என்று தெரிவிப்பதற்கான முயற்சிகள் இவை. இந்த முயற்சியை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதற்காகவே அவர் இந்த அரசாங்கத்துக்கு அனைத்து வகையிலும் ஆதரவளித்து வருகிறார். வரவு செலவுத்திட்டத்தில் நிபந்தனையற்ற ஆதரவளித்தது, வற்வரி தீர்மானத்தில் சம்மதம் கொடுத்தது, இலங்கையில் மேற்கொள்ளப்படும் அந்நிய முதலீடுகளைப்பற்றிக் கேள்வி எழுப்பாதிருப்பது என பல இடங்களிலும் பல வகையிலும் சம்மந்தன் விட்டுக்கொடுத்தே வருகிறார். இது கடினமான ஒரு நிலையாகும். இவ்வளவுக்கும் அவர் எதிர் நிலைப்பாடுடைய அரசியல் அரங்கின் தலைவர். மட்டுமல்ல, இலங்கையின் எதிர்க்கட்சித்தலைவரும் கூட.

சம்மந்தனின் இத்தகைய விட்டுக்கொடுப்புகளுக்கு சிறு அளவிலான நல்லெண்ண சமிக்ஞைகளை அரசாங்கம் செய்யவில்லை என்பதே ஏமாற்றமளிக்கும் விசயமாகும். ஆகவேதான், தமிழ் மக்களிடம் சம்மந்தனின் இந்த நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் தவறானவை என்ற ஒரு பார்வை வளர்ந்து வருகிறது. குறிப்பாக, அவர்களுக்கு இது ஒரு குருட்டு நம்பிக்கைபோலத் தெரிகிறது. எதற்காகத் தேவைக்கு அதிகமாக அரசுக்கு ஒத்தூதவேண்டும் என்று எழுந்திருக்கும் கேள்விகள் இந்த அடிப்படையிலானவையே.

சம்மந்தனை அரசாங்கமும் சிங்களச் சமூகமும் பலப்படுத்தியிருக்க வேணும். தமிழ்த்தரப்பின் குறைந்த பட்சக் கோரிக்கைகளை நிறைவேற்றி இதைச் செய்திருக்கலாம். இதற்கு அரசாங்கம் சாட்டுப்போக்



களைச் சொல்ல முடியாது. ஏனென்றால் சம்மந்தனும் தன்னுடைய சகாக்கள் உள்பட புலம்பெயர்ந்த தமிழர் தரப்பு உள்பட பல நெருக்கடிகளின் மத்தியில்தான் தன்னுடைய காலடிகளை முன்னோக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்.

குறைந்த பட்சம் மீள்குடியேற்றத்தை முழுமைப்படுத்தியிருக்கலாம். படைக்குறைப்பைச் செய்து நிரந்தர முகாம் அமைக்கிற காரியங்களைக் கைவிட்டிருக்கலாம். அரசியற்கைதிகளின் விடுதலையை நம்பிக்கையளிக்கும் வகையில் துரிதப்படுத்தியிருக்க வேண்டும். இதுபோலச் செய்யக்கூடிய விசயங்களைச் செய்து நம்பிக்கையை உண்டாக்கி, சம்மந்தனின் அணுகுமுறைக்குப் பலமளித்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவுமே நடக்கவில்லை.

இருந்தும் இவற்றைப்பற்றிச் சர்வதேச சமூகத்துடன் மட்டும் பேசுவதால் பயனில்லை எனத் தீர்மானித்து, சிங்களச்சமூகத்துடன் பேச முனைந்திருக்கிறார் எனக்கொள்ள முடிகிறது.

அப்போது அவர் தெரிவித்தது இதுதான். "வெளிச்சக்திகளிடம் அதாவது சர்வதேச சமூகத்திடம் பல ஆண்டுகளாக இலங்கையின் இனப்பிரச்சினையைப் பற்றிக் கூறப்பட்டு வருகிறது. கொழும்பின் இன ஒடுக்குமுறையைப்பற்றி இனிச் சொல்வதற்கு ஏதுமில்லை என்ற அளவுக்கு புலிகளிலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வரையில், நாடுகடந்த தமிழீழ அரசு உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினரும் இந்தப் பணியைச் செய்திருக்கின்றனர். இன்னும் இந்தப் பணி செய்யப்பட்டே வருகிறது. ஆனால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வெளியுலகப் பங்களிப்பைப் பற்றி எந்தத் தெளிவான சித்திரத்தையும் காண முடியவில்லை.

ஒரு சிறு அசுமாத்தத்தைக்கூட சர்வதேச சமூகம் இந்த விசயத்தில் காட்டவில்லை. என்றாலும் வெளியுலகத்துடனான தொடர்புகளையும் உரையாடல்களையும் தமிழ்த்தரப்பு கைவிட முடியாது. அதேவேளை சர்வதேச சமூகத்தின் செயற்பாட்டு எல்லை, அதனுடைய செயற்படு முறைமை, அதன் குணாம்சம், அதனுடைய நோக்கம் போன்றவற்றை நாம் தெளிவாகப் புரிந்து கொண்டால், நம்முடைய எதிர்பார்ப்புகளை அதற்கமைவாக வடிமைத்துக் கொள்ள முடியும். வெளியாருக்காகக் காத்திருக்கும் சமூகமாக இருக்காமல், சுயமாகச் சிந்திக்கக் கூடிய ஒரு சமூகமாக மாறிவிடலாம். ஆகவேதான் நான் நிலைமைகளைக் கவனமாகக் கையாள வேணும். அரசாங்கத்துக்கு நெருக்கடிகளைக் கொடுக்காமல், தீர்வை எட்டுதற்கு முயற்சிக்க வேணும்" என.

இது கத்திமுனையில் நடப்பதற்குச் சமனான விசயம். தன்னை ஒப்படைத்தே இதைச் செய்து கொண்டிருக்கிறார் சம்மந்தன். கரணம் தப்பினால் மரணம் என்பதற்கு ஒப்பான இந்தக்காரியம் நன்னம்பிக்கைகளைத் தொட வேணும். வரலாற்றில் முதலடிகள் எப்போதும் உச்சமான சவால்களுக்குரியவையே. ●

---

4-ம் பக்கம் தொடர்ச்சி


தான் தங்கியிருக்கும். இதுதான் அறிவியில்.

இந்த அறச் சிந்தனையை நிறுவனங்களால் ஒப்புக்கொள்ள இயலாது. ஏனெனில் பால் எனும் "பொருள்" மீது பல்லாயிரம் கோடிகளைக் கொட்டி தொழில் செய்கின்றன இந்த நிறுவனங்கள். பால் இப்போது உணவு அல்ல. வணிகப்பண்டம். மண்புழுக்களையும் பிள்ளைப் பூச்சிகளையும் கொலை செய்துவிட்டு விவசாயம் செய்தால் உணவு நஞ்சாகும். கோழிகளை துன்புறுத்தினால் இறைச்சி நஞ்சாகும். பசுக்களையும் காளைகளையும் வதைசெய்து பால் கறந்தால் அந்தப் பாலும் நஞ்சே!

மீண்டும் கூறுகிறேன்.. இந்தப் பூமியில் உள்ள எல்லா உயிரினங்களும் கூடிவாழப் படைக்கப்பட்டவை. சக உயிரினங்களை வாட்டி வதைத்து உற்பத்தி செய்யப்படும் ஒரேஒரு பொருள் கூட, மனிதர்களுக்கு நன்மை தராது. மனித உடலில் மிகுதியான சுண்ணாம்புச் சத்து சேர்ந்தால் சிறுநீரகங்கள் சீரழியும் சூழல் உருவாகும். சில மணித்துளிகள் கண்ணை மூடி சிந்தித்துப் பாருங்கள். உங்களைச் சுற்றி எவ்வளவு சிறுநீரக நோயாளிகள் இருக்கின்றார்கள்.

ஆண், பெண் ஆகிய இரு பாலினங்கள் புணர்ச்சியில் ஈடுபடுவதைக்கூட நவீன அறிவியல் தடுக்கும் என்றால், இதற்கான தண்டனையே கிடைக்காது என எல்லோரும் நம்புகிறீர்களா? வினை பலன் என்பது கடவுளின் கணக்குப் புத்தகத்தில் எழுதப்படுவது அல்ல. நமக்கு நாமே எழுதிக் கொள்ளும் விதி. எந்தச் செயல் செய்தாலும் அதற்கான பலனை நாம் அனுபவித்துத்தான் தீர வேண்டும்.

ஓர் உயிரினத்தின் உணவு உண்ணும் உரிமை, உடலுறவு உரிமை, தான் ஈன்ற கன்றுக்கு பால் கொடுக்கும் உரிமையை எல்லாம் மறுப்பது தீவினைகள்தான். இவற்றுக்கான பலன்களையும் இந்தச் சமூகம் அனுபவித்துக் கொண்டுதான் வருகின்றது




என்பது என் கருத்து.


ஆயம் என்ற சொல்லுக்கு கூடி வாழும் இடம் எனப்பொருள். ஆயர் என்றால் கூடி வாழ்வோர் எனப்பொருள். ஆடு மாடுகளின் பட்டியும் அவற்றை மேய்க்கும் மனிதர்களின் குடில்களும் ஒரே வேலிக்குள்தான் இருக்கும். ஆக ஆயம் என்பது ஆடு, மாடு மனிதர் என்ற மூன்று உயிரினங்களையும் சேர்த்துக் குறிக்கும் சொல். நாம் பல்லாயிரம் ஆண்டுகளாக ஆயர்களாக வாழ்ந்துள்ளோம். மாடுகளையும் ஆடுகளையும் நமது குடும்ப உறுப்பினர்களாகத்தான் கருதி வாழ்ந்தோம்.

எருதுகள் பூட்டிய வண்டிகளை முல்லை நிலத்துப் பெண்கள் ஓட்டிச் சென்று, முருதம் மற்றும் நெய்தல் நிலங்களில் வெண்ணெய், தயிர் விற்றதாக சங்கப் பாடல்கள் குறிக்கின்றன. நமது ரத்தத்தில் பால் தொழில் ஊறியுள்ளது. ஆயிரக்கணக்கான மாடுகளை வளர்த்து கன்றுகளுக்குக் கொடுத்து நாமும் பால் பெற்று வாழ்ந்த காலம் தான் வரலாற்றில் நெடியது. இப்போது நாமும் நன்றாக இல்லை. நம் கால்நடைகளும் நன்றாக வாழவில்லை. இந்த நிலையை மாற்ற இயலும். அயல்வகை மாடுகளின் பாலைப் பருகும் வழக்கத்திலிருந்து விடுபடுங்கள். தரமான வெண்ணெய் விற்பனை செய்வோரைத் தேடிக் கண்டறியுங்கள். தனிப்பட்ட முறையில் பால் விற்பவர்களை ஆதரியுங்கள். அவர்கள் தரும் பால் தரம் குறைவானதாக இருந்தால் அவர்களிடம் நேரடியாகப் பேசுங்கள்.

பால் கொள்முதலின் அளவை குறையுங்கள். வீட்டிலேயே தயிருக்கு உறை ஊற்றுங்கள். தனிப்பட்ட முறையில் வெண்ணெய் விற்பனை செய்வோரிடம் வெண்ணெய் வாங்கி வீட்டில் நெய் உருக்கிப் பயன்படுத்துங்கள். இந்த இரு வழக்கங்களையும் நீங்கள் கடைப்பிடித்தால் இந்தச் சூழலில் தலைகீழாக மாற்றம் உருவாகும். தேநீர் போன்ற பானங்களில் பால் சேர்த்துப் பருகுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

அடுத்ததாக நாட்டுப் பசுக்களைப் போற்றிப் பாதுகாக்கத் தொடங்குங்கள். பசுக்களை மட்டுமல்ல நாட்டுக் காளைகளையும் பாதுகாக்க முன்வாருங்கள். முருங்கைக்கீரையையும் காயையும் ரசமாக வைத்து அன்றாடம் பருகினால் கிடைக்கும் சத்துகளுக்கு அளவேயில்லை.

நமது மரபில் எல்லா உணவுகளும் சத்துப் பெட்டகங்கள்தான். உணவுத்துறையில் உள்ள நவீனத் தொழில் நிறுவனங்களின் பிடியில் இருந்து நமது மரபு உணவுப் பழக்கங்களை மீட்டெடுத்தாலே நிம்மதியான வாழ்க்கையை வாழ இயலும்! ●



# கொலை... கொலை... கொலை

## ஈ.பி.டி.பி முன்னாள் உறுப்பினரின் "பகீர்" வாக்குமூலம்

நம்மாழ்வார்

ஈ.பி.டி.பி அமைப்பிலிருந்து விலகிய சுப்பையா பொன்னையா என்பவர் பல பகீர் தகவல்களை வெளியிட்டுள்ளார். சதா என்ற இயக்க பெயரால் அழைப்படும் இவர், 1990 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை ஈ.பி.டி.பி அமைப்பில் அங்கம் வகித்ததாகவும், பின்னர் கட்சியுடன் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து விலகிச் சென்றதாகவும் கூறியுள்ளார். கட்சியின் தீவிர செயற்பாட்டாளராக இருந்து பல உள்வீட்டு தகவல்களை தெரிந்து வைத்திருந்த இவர், தற்போது வெளியிட்டிருப்பதெல்லாம் ஆயிரம் வோல்ட் அதிர்ச்சி தருபவை.

கடந்த மாதம் 29ம் திகதி யாழ்ப்பாணத்தில் சில பத்திரிகையாளர்களை சந்தித்து சில திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார். பின்னர் தீபம் அலுவலகத்திற்கு வந்து இன்னும் அதிக உள்வீட்டு தகவல்களை பேசினார்.

யுத்தகாலத்தில் காணாமல் போனவர்களை கண்டறிய உருவாக்கப்பட்ட பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு வடக்கில் பரவலாக விசாரணைகளை நடத்தியது. அப்பொழுது வைக்கப்பட்ட பிரதான குற்றச்சாட்டுக்களில் ஒன்று ஈ.பி.டி.பி எமது பிள்ளைகளை கடத்தியது, சுட்டுக் கொன்றது என்பது. அந்த குற்றச்சாட்டுகளிற்கு வலுச்சேர்க்கும் விதமான பல்வேறு தகவல்களை சதா வெளியிட்டுள்ளார்.

இதுவரை விடுதலைப்புலிகள் செய்ததாக கூறப்பட்டு வந்த பல்வேறு கொலைகளை ஈ.பி.டி.பியே செய்ததாகவும் கூறியுள்ளார். அது தவிர, ஈ.பி.டி.பிக்குள் நிலவிய அதிர வைக்கும் உட்கட்சி கொலைகள் பற்றிய தகவல்களையும் வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்ட தகவல்களின் சுருக்கம் இவை.

- 1990 இல் இராணுவத்துடன் இணைந்து தீவுப்பகுதிக்குள் நுழைந்தோம். ஊர்காவற்துறையில் எமது முகாம் இருந்தது. இப்பொழுது எமது மாத சம்பளம் 50 ரூபா. குடும்பகாரர்களிற்கு 650 - 750 வரை கொடுக்கப்பட்டது. சில வருடங்களின் பின்னர்தான் தெரியவந்தது, அது இராணுவ சம்பளம்தான் அரசாங்கத்தால் எமக்கு வழங்கப்படுவது. முழுமையான இராணுவ சம்பளம் எமக்கு அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டாலும், வெறும் 50 ரூபாயைத்தான் ஆறேழு வருடங்களாக தந்தார்கள். இதுபற்றி கட்சியிடம் கேட்க முடியாது. இதை கேட்டு முரண்பட்டால் அடுத்தநாள் இருக்க முடியாது.
- தீவுப்பகுதியிலிருந்து தப்பி விடுதலைப்புலிகளிடம் சரணடைய ஆறு உறுப்பினர்கள் விரும்புகிறார்கள் என்ற தகவல் கட்சிக்கு கிடைத்ததும், அவர்களை வெட்டிக் கொன்றார்கள். அதை செய்த, அதற்கு உத்தரவிட்டவர்கள் இப்பொழுது இங்குதான் உள்ளனர்.



**எமது கட்சியின் நீண்டகால உறுப்பினராக கோபு என்பவர் இருந்தார். அவரது மனைவி, மனைவியின் சகோதரர் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு என கூறி கொன்றார்கள். ஈ.பி.டி.பி உறுப்பினர்களான பாண்டியன், கிளி என்பவர்களையும் கொன்றார்கள்.**

- ரெலோவில் இருந்து ஈ.பி.டி.பிக்கு வந்த சூரி என்பவர் கட்சித்தலைமையுடன் முரண்பட்டார் என்பதற்காக கொன்றார்கள். அவர் குடிபோதையில் இருக்கும்போது கொலை செய்து, சாக்கில் கட்டி வெள்ளவத்தை கடற்கரையில் போட்டார்கள். பொலிசார் சிலரை கைது செய்தபோதும், சிலநாட்களில் அனைவரும் வெளியில் வந்துவிட்டனர்.
- கொழும்பு குண்டுவெடிப்பு ஒன்றுடன் தொடர்புபட்டார் என்ற சந்தேகத்தில் மலையக இளைஞன் ஒருவரை கைது செய்து கொண்டு வந்து அடித்து கொன்றார்கள்.
- மகேஸ்வரி வேலாயுதம் கொல்லப்பட்டது, டக்ளஸ் தேவானந்தாவுடனான சொந்த குடும்ப பிரச்சனையால். கொழும்பில் பிரச்சனைபட்டு கொண்டு மகேஸ்வரி பலாலியூடாக சொந்த இடமான நெல்லியடிக்கு வந்த அன்றே கொல்லப்பட்டார். அப்பொழுது நான்தான் யாழ் மாவட்டத்தில் வாகனப்பொறுப்பு, லீவு விடயங்கள், இராணுவபொலிஸ் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல்களை செய்து கொண்டிருந்தேன். மகேஸ்வரி யாழ்ப்பாணம் வந்துவிட்டாராமே என என்னை கேட்டனர். நான் தெரியாதென்றேன். பின்னர் கொல்லப்பட்ட பின்னர்தான் தெரியும். அவரை புலிகள் கொன்றார்கள் என சொல்லப்பட்டது. பின்னர் இராணுவம் கொன்றார்கள் என்றார். ஆனால் கொன்றது இவர்கள்தான்.
- மண்டையன் குழு தலைவன் மாதிரி வெள்ளைவான் குழு தலைவன் எம்முடன் தான் இருந்தார். யாராவது ஒருவரை கொல்ல வேண்டுமென விரும்பினால் உடனே போய் கொல்லுவார்கள். பேரூந்து நிலையத்திற்குள் மிக்சர் கடைக்குள் வைத்து இருவரை கொன்றார்கள்.
- எமது கட்சியின் நீண்டகால உறுப்பினராக கோபு என்பவர் இருந்தார். அவரது மனைவி, மனைவியின் சகோதரர் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு என கூறி கொன்றார்கள். ஈ.பி.டி.பி உறுப்பினர்களான பாண்டியன், கிளி (பல கொலைகளை இவரை பயன்படுத்தியே செய்தார்கள்) என்பவர்களையும் கொன்றார்கள். ஊர்காவற்துறையில் கிளிக்கு மதுபோதையேற்றி கிணற்றிற்குள்

தள்ளிவிழுத்தி கொன்றார்கள்.

- தினமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்த ரமேஸ் (அற்புதன்) தலைமையின் செயற்பாடு சரியில்லையென விமர்சித்து, விலகிப்போக முயன்றபோது, விடுதலைப்புலிகள் கொன்றதாக நாடக மாடி கொன்றார்கள். அந்தகொலையை ஏன் செய்தீர்கள் என பத்மன், சந்திரகுமார் (முன்னாள் கிளிநொச்சி எம்.பி) ஆகியோர் டக்ளஸ் தேவானந்தாவுடன் முரண்பட்டு, கட்சியை விட்டு வெளிநாட்டிற்கு சென்றார்கள். அதுபோல, இதயவீணை வானொலிக்காக இந்தியாவிலிருந்து கே.எஸ்.ராஜாவை மதுவிற்குள் சயனைட் கலந்து ஈ.பி.டி.பிதான் கொன்றது.
- ஊடகவியலாளர் நிமலராஜனை ஈ.பி.டி.பிதான் கொன்றது. நெப்போலின், விஸ்வன், முரளி, பாட்ஷாதான் (இருவரும் இப்பொழுது இல்லை) இதில் சம்பந்தப்பட்டவர்கள். இதில் பிரதானமானவர் நெப்போலியன். இப்பொழுது வெளிநாட்டில் இருக்கிறார். அவர் நெடுந்தீவிலிருந்து படகு மூலம் இந்தியாவிற்கு சென்று, அங்கிருந்துதான் வெளிநாட்டிற்கு சென்றார்.
- நாரந்தனைக்கு பிரசார பணிக்காக சென்ற தமிழ்தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தியது மதனராஜா என்ற ஈ.பி.டி.பி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்தான்.
- ஒவ்வொரு பிரதேசங்களிலும் சந்தேகத் திற்கிடமானவர்களை அடையாளம் காண இராணுவம் உதவிக்கு வந்தது ஈ.பி.டி.பியிடம். ஈ.பி.டி.பியின் வெள்ளை வான் குழு தலைவராக இருந்தது சாள்ஸ். அவர் ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஆட்கள் வைத்திருந்து, தகவல் திரட்டுவார். அவர் உத்தரவிட்டால் அன்று ஒருவர் இல்லாமல் போவார்.

**இ**வர் கூறியிருப்பது புதிய குற்றச்சாட்டுக்கள் கிடையாது. நீண்டகாலமாக பத்திரிகைகள் வழியாக சிலர் கூறிக்கொண்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள்தான். இப்படி குற்றம்சாட்டும் யாரும் ஆதாரங்களை முன்வைப்பதில்லை. எங்கள் மீது குற்றம் இருந்தால் கடந்த அரசுகள் நடவடிக்கை எடுத்திருக்குமே. எங்கள் மீது அவதூறு பரப்ப வேண்டுமென்பதற்காக சிலர் தீட்டிய சதித்திட்டமே இது. இந்த நபர் ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தரே கிடையாது. சாதாரண உறுப்பினராக நீண்டகாலத்தின் இருந்திருக்கலாம். இவ்வளவு காலம் அமைதியாக இருந்துவிட்டு, இப்பொழுது ஏன் பேசுகிறார்? ஈ.பி.டி.பி குற்றமிழைத்தது என்றால் அவர் காவல்த்துறையிடமல்லவா அதை கூற வேண்டும், இப்படி ஊடகங்களின் முன் பேசிக்கொண்டிருந்தால், இதுவரையான அவதூறுகளில் ஒன்றாகத்தானே இதுவும் முடியும். கட்சியின் சில உறுப்பினர்கள் தவறிழைத்திருந்தால் அதை விசாரிக்க தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்கள் எதுவும் வரவில்லை.



- வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி பெருமளவு பணமோசடியில் கட்சி முக்கியஸ்தர்கள் ஈடுபட்டனர். கட்சி உறுப்பினர்களின் பணத்தைகூட எதிர்கட்சி தலைவர் தவராசா மோசடி செய்தார். படகு,வலை பெற்றுத்தருவதாக எங்கள் 25 பேரை நீர்கொழும்பிற்கு அழைத்துசென்றார். எம்மை கையெழுத்து வைக்கவைத்து, அந்தபணத்தை எடுத்துக் கொண்டார். ஒவ்வொருவரின் பெயரிலும் 3 இலட்சத்துக்கும் அதிக பணம். இது நடந்தது 1993/94 இல்.
- 1990களில் தீவுப்பகுதி ஈ.பி.டி.பியின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, கூட்டுறவு சங்கத்தில் அதிக ஆட்தொகை காட்டி பொருட்கள் எடுப்பார்கள். ஊர்காவற் துறையில் பத்தாயிரம் குடும்பம் கணக்கு காட்டுவார்கள். ஆனால் இருந்தது 700 பேர். நெடுந்தீவில் பதினையாயிரம் குடும்பம், நயினாதீவில் . பத்தாயிரம் குடும்பமென கணக்கு காட்டுவார்கள். அங்கிருந்ததெல்லாம் குறைந்தளவான வர்களே. எஞ்சிய பொருட்களை ஈ.பி.டி.பி விற்கும். எனக்கும் ஒருவிற்பனை பகுதி தரப்பட்டிருந்தது. இந்த வியாபாரங்களிற்கு பொறுப்பாக இருந்தவர் ராமேஸ்வரன். இப்பொழுது இந்தியாவில் இருக்கிறார். இவரது தம்பி ராமமூர்த்தி. இவர்கள் ஈ.பி.டி.பிக்கு வரும்போது சொப்பிங்பையில் உடுப்பு கொண்டு வந்தவர்கள். இவர்களுடன் குணசீலன் என்பவர் இருந்தார். அவரது குடும்பமே இப்பொழுது லண்டனில். தீவுப் பகுதியில் உழைத்த, மக்களிடம் இருந்து எடுத்த, ஆடு மாடு விற்ற காசுகள்தான் இது.
- 1993இல் நெடுந்தீவுக்கு அண்மையில் தொழிலுக்கு வந்த இந்திய மீனவர்களை, வேகப்படகில் போன ஈ.பி.டி.பியினர் சத்தவெடி வைத்து மறித்துள்ளனர். அவர்கள் தப்பியோட, ஈ.பி.டி.பியினர் சுட்டனர். அதில் மூவர் கொல்லப்பட்டு விட்டனர். ஈ.பி.டி.பி போய் மீனவர்களை மறிப்பது மீன், பற்றரி, படகு பறிமுதல் செய்ய. அப்படி பறித்த இந்தியமீனவர் படகொன்று மடுமாதா என்ற பெயரில் இப்பொழுதும் நெடுந்தீவுக்கும் ஊர் காவற்துறைக்குமிடையில் ஓடிக் கொண்டிருக்கிறது.
- அரியாலைப்பகுதியில் விடுதலைப் புலிகளின் படகு ஓட்டியாக இருந்த ஒருவர் வசிப்பதாக எமது கட்சிக்காரர் ஒருவர் தகவல் கொண்டு வந்தார். அவரது நடமாட்டத்தை அவதானித்து அவரை ஒருநாள் இரவு கடத்தினார்கள். அந்த சம்பவத்திற்கு என்னையும் அழைத்து சென்றனர். அவரை கொண்டுவந்து இராணுவத்திடம் கொடுத்தார்கள். அவரை தேடி மறுநாள் பெற்றோரும் வந்தார்கள். அன்றோ, மறுநாளோ அவரை விசாரிக்க இராணுவம் அடித்ததில் அ்வர் இறந்துவிட்டார். ஒரு பதுங்கு குழிக்குள் சடலத்தை போட்டு மூடி விட்டார்கள்.

---

# விமானங்களை விட ஆற்றல்மிக்க பறவை



**ப**றவைகள் பறப்பதே ஓர் அதிசயம். அப்படி என்றால், சிறகடித்துக்கொள்ளாமல் கடல்களையே கடக்கிற ‘கப்பல் பறவை’ (frigate birds) அதிசயமே அசந்து போகும் அதிசயம் அல்லவா? ‘கப்பல் கூழைக்கடா’, ‘கடற்கொள்ளைப் பறவை’ போன்ற பெயர் களிலும் அழைக்கப்படும் பறவையைப் பற்றிய வியக்க வைக்கும் புதிய தகவல் களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் ஆய் வாளர்கள்.

உணவின்றி, தண்ணீரின்றி, ஓய்வு உறக்கமின்றி, தரையிறங்காமல் தொடர்ந்து 400 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் பயணிக்கக்கூடி யவை என்று உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். காரணம், இதன் இறகுகள் நீர் ஒட்டும் தன்மையைக் கொண்டவை. எனவே, வாத்து போலத் தண்ணீரில் மிதந்து ஓய்வெடுக்கவோ, முக்குளிப்பான் போலத் தண்ணீரில் மூழ்கி மீனைப் பிடிக்கவோ இதனால் முடியாது.

சாப்பிடாமல் கொள்ளாமல் எப்படி இவ்வளவு தூரம் பறக்கிறது என்கிறீர்களா? அது எங்கே பறக்கிறது? காற்றில் மிதக்கிறது! பெரும்பாலும் இறகை அசைப்பதே இல்லை. அந்த விஷயத்தில் இவர் நம்மூர் பருந்துக் கெல்லாம் அண்ணன்.

மடகாஸ்கர் பகுதியில் வாழும் கப்பல் பறவைகள் சிலவற்றைப் பிடித்து, அதில் உணர்வுக் கருவிகளைப் பொருத்தினார்கள் வெய்மர்ஸ்க்ரிச் தலைமையிலான ஆய்வா ளர்கள். இப்பறவை எப்படி இரை எடுக்கிறது, எவ்வளவு வேகத்தில் பறக்கிறது, எத்தனை முறை இறகை அசைக்கிறது, எவ்வளவு தூரம் செல்கிறது போன்ற விஷயங்கள் மட்டுமின்றி, இதயத்துடிப்பு, இறக்கை அசைப்பு உள்ளிட்டவற்றையும் நுட்பமாக ஆராய்ந்தார்கள்.


வானில் சுமார் 400 முதல் 1,000 மீட்டர் உயரத்தில் உள்ள, மிகமிக அடர்த்தியான மேகக் கூட்டத்துக்குப் பெயர்தான் ‘குமுலஸ்’. விமான ஓட்டிகளுக்கே சவால் தருபவை. பார்ப்பதற்குப் பஞ்சு போலத் தெரிந்தாலும் இந்தவகை மேகத்துக்குள் காற்று மேல் நோக்கிச் சென்றபடி அமளிதுமளியாக இருக்கும். இதற்குள் விமானம் சென்றுவிட்டால், விமானம் திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து ஜிவ்வென்று மேல் நோக்கிச் செல்லும். அடுத்த நொடியே திடுமெனக் கீழே இறங்கும். நான்குவழிச் சாலையில் வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் வாகனம், திடீரென மாட்டுவண்டிப் பாதைக்கு மாறியது போலக் குலுங்கும். இதனால் பொதுவாக ஆபத்து எதுவும் இல்லை என்றாலும், விமானத்தில் பயணம் செய்யும் பாதிப்பேருக்கு வாந்தி மயக்கம்கூட ஏற்படும். பல ஆயிரம் கிலோ எடையுள்ள விமானத்தையே அதிர வைக்கிற இந்த மேகத்துக்குள் புகுந்து நம்மாள் சடுகுடு ஆடுகிறான்.

மேகத்துக்குள் புகுந்து, அங்கே வீசுகிற மேல் நோக்கிய காற்றின் உதவியால் காகிதம் போல மேலெழுந்து செல்கிறது கப்பல் பறவை. பிறகு, கிளைடர் போல லாகவமாக காற்றில் மிதந்தபடி கீழ்நோக்கிவரும். நிலத்துக்கு அருகே வந்த பிறகுதான் சிறகை அசைத்துப் பறக்கும். ஆக, உயரே செல்லவும் நெடுந்தூரம் செல்லவும் எந்தவித ஆற்றலையும் பயன்படுத்தாமல், ஆற்றலைச் சிக்கனப்படுத்துகிறது இந்தப் பறவை.

அதெல்லாம் இருக்கட்டும்ஞ் சோறு தண்ணி இல்லாமல் எப்படி உயிர் வாழ முடியும் என்று நுட்பமாக ஆராய்ந்தார்கள். அப்போது, கடலுக்கு மேலே தாழ்வாகப் பறந்தபடி லாகவமாக மீனைப் பிடித்து உண்பது தெரியவந்தது. வழியில் கடற்பாறை கிடைத்தால் ஓய்வெடுக்கவும் செய்கின்றன. வழியில் உணவோ, ஓய்விடமோ கிடைக்கா விட்டாலும்கூட இவை கவலைப்படுவ தில்லை. இருந்தாலும், கப்பல் பறவை எப்படித் தூங்குகிறது என்பதுதான் இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது.









## படுவான்கரை:

# யானை புகுந்த வெண்கல கடையாகிறதா?

நடேசன் குகதர்சன்

மட்டக்களப்பு மாவட்டமானது வனாந்தரங்களையும், மலைசாரல்களையும், கடல்வெளிகளையும், ஆறுகளையும் கொண்டமைந்த பரந்த பரப்பாக அமைந்து காணப்படுகின்றது.

இம் மாவட்டத்தில் அதிக பிரதேசம் காடும், வயல் வெளிகளும் சார்ந்தது. இங்கு வாழ்கின்றவர்களில் நகர்புறத்தினை அண்டிய மக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்களில் தொழில் புரிபவர்களாகவும், தொழிலதிபர்களாகவும், ஏனைய பிரதேசத்து பெரும்பால்ன மக்கள் விவசாயம், மீன்பிடி, கூலி வேலை செய்பவர்களாகவும் இருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தினை இரண்டு பெரும் பிரிவுகளாக மக்கள் பிரித்து அழைக்கின்றனர். சூரியன் உதிக்கும் பிரதேசத்தினை எழுவான்கரை என்றும், சூரியன் மறையும் பிரதேசத்தினை படுவான்கரை என்றும் மட்டக்களப்பு வாவியை மையமாக கொண்டு இதனை குறிப்பிடுகின்றனர்.

மாவட்டத்தில் வவுணதீவு, பட்டிப்பளை, வெல்லாவெளி, வாகரை, செங்கலடி போன்ற பிரதேசங்கள் கடந்த 30 வருடகால யுத்தத்தின் போது அதிகமாக பாதிக்கப்பட்டதுடன், இங்கு வாழ்ந்த மக்கள் அகதிகளாக்கப்பட்டு பின்னர் குடியமர்த்தப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

யுத்தம் நாட்டில் ஓய்ந்து தங்களது வீடுகளில் இருந்து வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு தலைப்பட்டுள்ள மக்களுக்கு மீண்டும் வனஜீவராஜிகளில் இருந்தும் தம்மை பாதுகாத்து கொள்ள வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக யானையின் தாக்குதலில் இருந்து தம்மையும், உடமைகளையும், உணவுகளையும், தமது விவசாயத்தினையும் பாதுகாக்க வேண்டிய பாரிய சிக்கல்களுக்கு கடந்த 2009ம் ஆண்டில் இருந்து இன்றுவரை எதிர்நோக்கி இருக்கின்றனர்.

இதற்கான தீர்க்கமான எந்த தீர்வுகளும் இன்னும் அரசினால் முன்வைக்கப்படவும் இல்லை. மக்களும் தங்களால் இயன்ற பாங்குகளில் அரசுக்கு தமது பிரச்சினைகளையும் முன்வைத்தும் தீர்வு காணப்படவில்லை குறிப்பாக ஆர்ப்பாட்டங்கள் செய்தும், அபிவிருத்தி கூட்டங்களில் குறிப்பிட்டும், அரசியல்வாதிகளுடன் தெரிவித்தும் இன்னும் தீர்வுப்பெறப்படவில்லை.

நாளுக்கு நாள் யானைகளின் தாக்குதல் அதிகரிக்க, அதிகரிக்க உயிரிழப்புகளும், அங்கங்களின் இழப்புக்களும், சொத்து தேசங்களும் அதிகரித்த நிலையே இருந்து கொண்டிருக்கின்றது. இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 51 பேர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதுடன், அவர்களில் 30 பேர் இறந்திருக்கின்றனர். 21பேர் உடல் பாதிப்புக்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

பயன்தரக் கூடிய மா, பலா, தென்னை போன்ற மரங்கள் அழிக்கப்பட்டுள்ளது. 60 ஏக்கர் வரை வயல் நிலங்கள் அழிக்கப்பட்டுள்ளது. 15க்கு மேற்பட்ட வீடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களுக்கான இழப்பீடு அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதேநேரம் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு இன்னும் இழப்பீடுகள் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அவ்வாறானவர்களுக்கு இழப்பீடுகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நடமாடும் சேவை ஒன்றினை மேற்கொள்வது என அண்மையில் நடைபெற்ற மாவட்ட கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டமையும் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது. காலையில் எழுந்து வெயிலில் நின்று வியர்வை சிந்தி தொழில் ஈடுபட்டு களைப்படைந்து வீட்டிக்கு வருகை தந்தும் வீட்டில் நிம்மதியாக நித்திரை செய்ய முடியாமல் பல்வேறு குடும்பங்கள் தங்களது வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர்.

கூச்சல் சத்தமும், யானையை துரத்துவதற்காக கொழுத்தப்படும் வெடிகளின் ஓசையும் உறங்கும்போதும் காதுகளில் ஒலித்துக் கொண்டு உயிருக்கு அஞ்சி வாழ்கின்றதாக பாதிப்புக்குள்ளாகும் பிரதேசத்து மக்கள் தெரிவிக்கின்றனர். யானையொன்றினால் உயிர்காவு கொள்ளப்படும்போது அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள் வரை அங்கு வந்து பேசுகிறார்கள். சிலநாளில் எல்லோரும் அதை மறந்துவிடுகிறார்கள்.

அரசியல்வாதிகள், அதிகாரிகள் தனித்தனியாக இதுபற்றி பேசுகிறார்கள். ஆனால் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. இவ்வாறு உயிரிழப்புக்களும், பொருட் சேதங்களும் நடக்க இன்னோர் பக்கம்யானையின் உயிரிழப்பும்இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆத்திரமடையும் மக்கள் யானைகளை கொல்ல பலவழிகளிலும் முயற்சிக்கிறார்கள். யானை மனிதன் மோதலை கட்டுப்படுத்த வேண்டியது அரசு.


மட்டக்களப்பு மாவட்டத்தில் வனஜீவராசி திணைக்களத்தினால் யானைகளை கட்டுப்படுத்த முடியாமைக்கான காரணம் அவர்களுக்கான வளங்கள் குறைவாக இருப்பதாகவும் அதனால் தான் இப்பிரச்சினைகளை தீர்க்க முடியாதுள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டதாக அண்மையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கூறினார்.

மேலும் யானைப் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அதிகமாக தேசம் விளைவிக்கும் யானைகளை பிடித்து வேறு இடங்களுக்கு கொண்டு செல்லுதல், யானை வேலிக்கு உள்ளே தங்கியிருக்கின்ற யானைகளை யானை வேலிகளுக்கு வெளியே செல்ல வைத்தல், வேலி இல்லாத இடங்களுக்கு புதிய வேலைகளை அமைத்தல், திருத்த வேண்டிய வேலிகளை திருத்துதல் போன்ற வேலைகளை மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டதாகவும் இன்னும் இவை மேற்கொள்ளவில்லை எனவும் மாகாண சபை உறுப்பினர் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறெனினும் யானையின் தாக்குதலினால் உயிரிழந்தவர்களில் அனேகமானவர்கள் குடும்ப தலைவர்கள். இவர்கள் அன்றாடம் தொழில் செய்து தமது குடும்பத்தினை வழிநடத்தி சென்றவர்கள். இவர்களின் உழைப்பில் தங்கி வாழ்ந்த குடும்பங்கள் இன்று நிர்க்கதியாகி உள்ளனர். அரசினால் வழங்கப்படும் இழப்பீடு உயிரிழந்தவரின் மரணச் செலவுக்கே போதுமானது. வாழ்நாள் பூராக தமது தந்தைகளை இழந்து உதவியின்றி வாழும் பிள்ளைகளின் எதிர்காலம்? கணவனை இழந்து குடும்பத்தை வழி நடத்தும் மனைவியின் எதிர்காலம்? அங்கங்களை இழந்து தவிப்பவர்களின் எதிர்காலம்? அவர்களின் குடும்பங்களின் எதிர்காலம்? போன்ற பல்வேறுபட்டவர்களின் எதிர்காலங்கள் கேள்விக்குறிகளாக மாறியிருக்கின்றது.

ஒருநாள் ஒரு ரூபாயையும், ஒரு உதவியையும் வழங்கி விட்டால் அவர்களின் வாழ்க்கையில் ஒளி கிடைத்து விட்டது என்று எண்ண முடியாது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரூபாயும் கிடைப்பதற்கான வழிவகைகளும் ஏற்படுத்த வேண்டும்.

உயிருக்கு அஞ்சி வாழ்வை கொண்டு செல்லும் மக்களுக்கான தீர்வை இன்னோர் வீட்டில் அழுகுரல் கேட்பதற்கு முன் வெகு விரைவாக கண்டடைய வேண்டும் என்பதும் மக்களின் எதிர்பார்ப்பாகும். ●



## அண்மைய பதிவுகள் சில

கிரான். 19.07.2016. காட்டு யானை தாக்குதலில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார். புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள முறுத்தானை காஞ்சிரங்காடு பகுதியிலுள்ள வயலுக்கு தனது மகனுடன், மோட்டார் சைக்கிளில் சென்றபோது, காட்டுப் பகுதியில் மறைந்திருந்த காட்டுயானை இவர்களை துரத்தி தாக்கியுள்ளது. இதனால் 58 வயதுடைய 6 பிள்ளைகளின் தந்தையான சிவராசா மகேஸ்வரன் என்பர் உயிரிழந்;தார்.

கற்பகேணி வவுணதீவு. 2016.6.01. தனது மாமியின் வீட்டுக்கு சென்று கொண்டிருந்த தந்தை, மகள் ஆகிய இருவர் மீதும் யானை தாக்கியது. இதன் போது 6 வயது சிறுமியான இராசையா ரோஜினி உயிரிழந்தார். தந்தை காயப்பட்டார்.

பாவற்கொடிச்சேனை, கண்ணகிநகர் கிராமங்கள் வவுணதீவு பிரதேச செயலாளர்பிரிவு. 26.04.2016. அதிகாலையில் காட்டு யானை தாக்கியதில் நான்கு வீடுகள் சேதமடைந்தன. வீடுகளில் இருந்த நெல் மூடைகள், அரிசி, மின்சாரப் பொருட்கள், வீட்டுப் பாவனை உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் சேதமாக்கப்பட்டது.

சுணையங்கல் வெல்லாவெளி. 23.09.2015. காட்டு யானை தாக்கி 6 பிள்ளைகளின் தந்தையான சோமசுந்தரம் தருமரெத்தினம் (வயது 59) என்பவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளார். தொழில் நிமித்தமாக மண்டூர் சுணையங்கல் பகுதிக்கு நான்கு பேர் சென்றபோது காட்டுக்குள் மறைந்திருந்த யானை அவர்களைத் துரத்தியதில் மூவர் தப்பி விட்டனர். இவர் யானையின் தாக்குதலால் உயிரிழந்தார்.

சாமந்தியாறு நெல்லிக்காடு. 2015.06.10. அதிகாலை வேளையில் யானை தாக்கி கொக்கட்டிச்சோலையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சற்குணம் இராசதுரை (வயது 62) உயிரிழந்தார். சேனைப்பயிர் செய்கையை மேற்கொண்டிருந்த போதே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தார்.

அண்மையில் சித்தாண்டி சந்தணமடு ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த யானை தாக்கி நான்கு பிள்ளைகளின் தந்தையான குமாரன் யோகநாதன் உயிரிழந்துள்ளார். அதுமட்டுமின்றி செங்கலடி ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்த வண்ணமே உள்ளது.


# நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

✎ மோனிஷா

மோனல். இந்தப்பெயரை சொன்னால் வீட்டில் கொலை ஒன்றுதான் விழாத குறை. மற்றும்படி எல்லாம் நடக்கும். நடந்து விட்டது. உடலில் உள்ள ஆறிப்போன காயங்களின் தழும்புகள் அதற்கு சாட்சி. எனது அடையாளங்களுடன் வாழ கொடுத்த விலைகள் அவை.

உள்ளூர மோனலாகவும் வீட்டில் பானுஜனாகவும் வாழும் இரண்டக வாழ்க்கையொன்றை வாழ்கிறேன். பானுஜன் என பெற்றோர் சூட்டிய பெயரும், உடல் தோற்றமும் வேண்டாத அடையாளமாக மாற, மோனலாக நானே மாறினேன். நீண்ட போராட்டத்தின் பின் எனது அடையாளங்களை கண்டடைந்துள்ளேன்.





ஆம். நானொரு திருநங்கை.

மோனிசா என்று எனக்கு பெயரிட்டுள்ளேன். சுருக்கமாக மோனல் என்கிறார்கள். இன்னும் நிறையப் பெயர்களும் வைத்துள்ளனர். திருநங்கைகள் குறித்து சரியான விழிப்புணர்வு இல்லாமல் இப்போதும் அலி, ஒம்பது மாதிரியான கொச்சை வசனங்கள் பேசிக்கொண்டிருக்கும் குறைச் சமூகத்தில், மோனல்களாக மாறிய பானுஜன்களும், பானுஜன்களாக மாறிய மோனல்களும் எதிர்கொள்ளும் சவால்கள் சாதாரணமானவையல்ல. தமது அடையாளங்களை நிரூபிக்க அவர்கள் குடும்பத்தில் தொடங்கி வசையாக பேசும் அறிமுகமேயில்லாத ஒவ்வொருவருடனும் போராடிக் கொண்டிருக்க வேண்டும்.

வசை, பாலியல் சீண்டல், குடும்பத்திற்குள் தினம்தினம் நடக்கும் அடி, உதை, சித்திரவதைகளை கடந்துதான் திருநங்கைகள் தமது அடையாளங்களை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

ஒவ்வொரு திருநங்கைக்கு பின்னாலும் இரத்தக்கண்ணீர் வடிக்க வைக்கும் ஏராளம் கதைகள் உள்ளன. ஒவ்வொரு திருநங்கையும் வலியும், அவமானமும் நிறைந்த அந்த கதைகளை கடந்துதான் வந்திருக்கிறார்கள். நானும் அதற்கு விதிவிலக்கல்ல.

யாழ்ப்பாணத்தில் மிகச்சாதாரண குடும்பத்தில் பானுஜனாக பிறந்து இன்று மோனலாக மாறியது வரையான காலத்தை... அந்தக் காலம் என்னில் பதித்த ரணமான நினைவுகளை.. எனது அடையாளங்களை நிரூபிக்க நான் கொடுத்த விலைகளை தொடராக இந்தப்பகுதியில் எழுதவிருக்கிறேன்.

1998 இல் நான் பிறந்தேன். எனக்கு பெற்றோர் இட்டபெயர் பானுஜன். சிறுவயதிலிருந்தே நான் மிகுந்த மென்மையாக இருந்ததாக கூறுவார்கள்.

வீட்டுக்கு அண்மையிலிருந்த பாடசாலையில் சேர்க்கப்பட்டேன். பாடசாலை காலத்தில் எனக்கு நிறைய நண்பர்கள். அவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள்தான். பெண்களுடன் பழகுவதே எனக்கு இயல்பாக இருந்தது.

அப்போது யுத்த நெருக்கடி உச்சக் கட்டத்தில் இருந்தது. எனக்கு ஏழு வயதாக இருக்கும்போது எங்கள் குடும்பம் இந்தியாவிற்கு அகதியாக சென்றது. அங்கு பாடசாலைக்கல்வியை தொடர்ந்தேன்.

பாடசாலையில் ஆண்களுக்கு தனியாகவும், பெண்களுக்கு தனியாகவும் இருக்கை போடப்பட்டிருந்தது. ஆனால்என்னால் ஆண்களின் வரிசையில் உட்கார முடியவில்லை. பெண்களின் வரிசைதான் எனது வரிசையென உண்மையாகவே உணர்ந்தேன். ஆனால், சில பெண்கள் சிரித்து சத்தமிட, ஆசிரியர் வந்து எனக்கு தண்டனை தந்தார். அத்துடன், ஆண்கள் வரிசையிலேயே உட்கார வேண்டுமென கடுமையான உத்தரவிட்டார். எனக்குள் என்ன பிரச்சனையென்பதை புரியவும் முடியவில்லை, அதை ஆசிரியருக்கு புரிய வைக்கவும் முடியவில்லை.

நாட்டுநிலைமைகள் ஓரளவு சீராக எனது குடும்பம் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியது. நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் என்னை சேர்த்தார்கள்.

நாளாகநாளாக நானொரு பெண் என்பதை தீவிரமாக உணரவும், நம்பவும் தொடங்கினேன். ஆண் தோற்றமிருந்தாலும், எனது உணர்வுகள் அனைத்தும் பெண்மைதான் என்பதை மெதுமெதுவாக உணரத் தொடங்கினேன். எனது ஒவ்வொரு அசைவிலும் பெண்மை மிகுந்திருப்பதாக நண்பர்கள் கேலி செய்வதை அப்போது சாதாரணமாகத்தான் எடுத்துக் கொண்டேன்.

நாளாகநாளாக பிரச்சனைகள் எழத் தொடங்கின. எல்லாம் எனக்குள்ளான மனப்போராட்டங்கள்தான். ஒரு ஆணாக இருந்தும் மாணவர் வரிசையில் என்னால் உட்கார முடியாமலிருந்தது. மாணவர்களுடன் நெருங்கிப்பழகுவதை, ஒன்றாக உட்கார்வதை என்னால் நினைத்தும் பார்க்க முடியாமல் இருந்தது. ஏதோ நெருப்பின்மேல் உட்கார்வதை போலிருந்தது. அப்படியான சமயங்களில் பதற்றமும், மனப்பயமும் கூடி இயல்பற்ற தன்மையாக இருந்தேன். இதனால், மாணவர் வரிசையிலும் இல்லாமல், மாணவியர் வரிசையிலும்இல்லாமல்இரண்டுவரிசைக்கும் நடுவில் உட்கார தொடங்கினேன்.

ஏழு, எட்டு வயதில் பெண்களிற்கு நடுவில் உட்கார ஆரம்பித்து, நான் யார் என குழம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் பதின்னான்கு, பதினைந்து வயதில் நான் யார் என்பதை கண்டடைய தொடங்கினேன். எது என்னுடைய திசையென்பது புரிய ஆரம்பித்தது.

எங்கள் வகுப்பாசிரியர் ஒருநாள் என்னை தனிமையில் அழைத்து பேசினார். அவரிடம் அனைத்தையும் சொன்னேன். என்னால் ஆண்களுடன் உட்கார, ஒன்றாக பழக முடியாமலுள்ளதை சொன்னேன். எனக்குள்ளிருக்கும் பெண்மையை சொன்னேன். மறுநாள் பெற்றோரை அழைத்து வரச்சொன்னார்.

மறுநாள் பெற்றோர் பாடசாலைக்கு சென்று ஆசிரியரை சந்தித்தனர். அதுதான் பெற்றோருக்கு என்னைப்பற்றி கிடைத்த முதல் தகவல். ஆசிரியர் விடயங்களை கூறி, என் மாற்றத்தை புரிய வைத்து, கவனமாக பார்க்கும்படி ஆலோசனை கூறி அனுப்பியுள்ளார்.

நான் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வர... அன்று ஆரம்பித்தது பிரச்சனை. அப்பா இயலுமானவரை என்னை அடித்தார். சாதாரண விடயங்களிற்கு அடித்தால், பெரிதாக கத்தி ஆர்ப்பாட்டம் செய்திருப்பேன். ஆனால் அப்பா அடித்தது, "எனக்கு"

**எங்கள் வகுப்பாசிரியர் ஒருநாள் என்னை தனிமையில் அழைத்து பேசினார். அவரிடம் அனைத்தையும் சொன்னேன். என்னால் ஆண்களுடன் உட்கார, ஒன்றாக பழக முடியாமலுள்ளதை சொன்னேன். எனக்குள்ளிருக்கும் பெண்மையை சொன்னேன். மறுநாள் பெற்றோரை அழைத்து வரச்சொன்னார்.**

எதிராக. எனது உணர்வு வெளிப்பாடுகளிற்கு எதிராக. பொம்பிளை மாதிரி திரிவியா எனக்கேட்டு அடித்தார். நான் அசையாமல் நின்றேன். அப்போது எனக்கு பதினைந்து வயது.

அதன்பின் பாடசாலைக்குள் விரைவாக கதை பரவியது. எல்லா மாணவர்களும் என்னை இளக்காரமாக பார்க்க தொடங்கினார்கள். "ஏய் அலி" என கூப்பிட்டனர். பானுஜன் என்ற பெயர் மாறி அலியானது. அப்போது பாடசாலையில் இருந்த அதிபர், ஆசிரியர்கள் யாரும் அதை தடுக்கவில்லை. எனக்கு ஆறுதலாக இருக்கவுமில்லை.


## ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர்

"ஆணாக இரு.. ஆணாக இரு" என வீட்டில் அன்றாடம் தொடர்ந்த உடல், உள சித்திரவதைகள், தண்டனைகள், பாடசாலை அவமானங்கள் என சிறிய வயதிலேயே நான் சந்தித்த சவால்கள் அனேகம். இன்னொரு பிஞ்சு அதை எதிர்கொள்ளவும் கூடாது. திருநங்கைகள் கல்வியில், வேலை வாய்ப்பில் உயர்ந்த இடங்களை அடைந்து, தனித்துவமானவர்களாக மிளிர்வதெனில் அவர்களின் இளமைக்காலம், பாடசாலைக் கல்வி சீராக, நெருக்கடியில்லாமல் இருக்க வேண்டும். அதற்கு அரசுகள் திருநங்கைகளை பாதுகாக்க, அவர்களின் உரிமைகளை அங்கீகரிக்கவேண்டும். அவர்களின் தனியடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். சமூகத்தில் வழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

திருநங்கையாக இந்த உலகத்தில் நான் சந்திக்க ஆரம்பித்த பிரச்சனைகள், சவால்கள், அவமானங்கள் அனைத்திற்கும் பிள்ளையார் சுழியிட்டது அந்தப்பாடசாலை வாழ்க்கைதான்.

அப்போது எனக்கு ஏற்பட்ட முதற்காதல், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட விபத்துக்கள், இயல்பான உலகத்தைவிட்டு தள்ளிச்செல்ல வைத்ததெல்லாம் அதன் தொடர்ச்சிதான்.

தொடரும்...




# குழந்தைப் போராளி

இதன் பின்பு மாஹி பாட்டியைத் திட்டிக் கொண்டேயிருந்தாள். அதிசயமாகப் பாட்டியின் மற்றைய கண்ணும் கண்ணீரில் மிதந்தது. பாட்டியின் கண்ணீர் கூட மாஹியின் வசைச் சொற்களிலிருந்து தப்பவில்லை. "நான் வீட்டைவிட்டு ஓடிப்போகப் போகிறேன் என்பதைத் தெரிந்துகொள்! நீ இறந்த பிறகு உன்னைப் புதைப்பதற்குக் கூட யாரும் இருக்கமாட்டார்கள்" எனப் பாட்டியைத் திட்டிய மாஹி அன்றிரவு ஒன்றுமே சாப்பிடாது படுக்கைக்குச் சென்றாள். அடுத்த நாள் காலை அவள் போய்விட்டிருந்தாள். அப்பா மாஹியைத் தேடிக் கண்டு பிடிப்பாரென நானும் தம்பியும் நினத்துக்கொண்டோம். அவர் அப்படிச் செய்யவே இல்லை. நாங்கள் அழுதுகொண்டிருந்தோம். ஒன்றுமே சொல்லாது அப்பா எங்களைக் கடந்து போனார். மாஹி தொலைந்து போனது அவரை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. ஏதோ கோழியொன்று தொலைந்தது மாதிரித்தான் அவர் நடந்து கொண்டார்.

விடுமுறை முடிந்து நகர வீட்டிற்குச் செல்லும் நேரமும் வந்தது. சிரிப்புடனேயே சிற்றன்னை எங்களை வரவேற்றார். அது ஒரு அசாதரணமான காட்சி. தொலைந்து போன எங்கள் சகோதரிக்காக அவர் சிரித்தித்திருக்க வேண்டும். எது எப்படியாயினும் கடைசியில் சிற்றன்னையின் விருப்பப்படியே சம்பவங்கள் நடந்தேறியிருந்தன. எங்களைத் தொலைத்து விடுவதற்கு அவரெடுத்த முயற்சியில் அவர் வெற்றி பெற்றிருந்தார்.

எங்களின் கடைசிப் பிணைப்பான செவிலித் தாயார் மேரியும் வீட்டைவிட்டு போகப் போகிறார் என்பதனையும் கேள்விப்பட்டோம். அவரிடம் எங்களை விட்டுப் போகவேண்டாமென அழுகையுடன் கெஞ்சிக்கூடப் பார்தோம். அவர் எங்களுக்குத் தந்த நேசமும் கருணையும் தாயினுடையதைப் போன்றது என்பது எங்களுக்கு விளங்கியுமிருந்தது. சிற்றன்னையுடன் முரண்பட்டுக் கொண்டுதான் எங்கள் அன்பான மேரி வீட்டைவிட்டு வெளியே போகிறார். காலை உணவு மேசையில் தயாராக இருந்தது. ஆனால் மேரியைக் காணவில்லை. தோட்டத்தில் தேடிப் பார்த்தோம், அவரை எங்குமே காணவில்லை. பாடசாலைக்குச் செல்லும் வழியில் அவர் எங்களுக்குச் செய்தவை பற்றியெல்லாம் நானும் தம்பியும் பேசிக்கொண்டே போனோம். ஒருவேளை பாடசாலை முடிந்ததும் அவரைக் காணக் கூடியதாயிருக்கும் என நினைத்தோம். ஆனால் நாங்கள் அதன் பின்பு எப்போதுமே அவரைக் காணவில்லை.

மேரியின் இழப்பு எனக்குப் பெரியதென்ப தைச் சிற்றன்னையிடம் காட்டிக்கொள்ளாது கவனமாகவே இருந்தேன். நான் உறுதியானவள் போன்றும் மேரியின் வெற்றிடம் எனக்குப் பொருட்டேயில்லை என்பது போலவும் நாடகமாடினேன். பிரச்சினைகளில் அமிழ்ந்து விடாது தப்பி வாழ்வதற்கு உணர்வுகளை மழுங்கடிக்க வேண்டியிருந்தது. எனது பிற்கால வாழ்க்கையில் அதுவே வழமையாகவும் விட்டுவிடமுடியாத பழக்காமாகவும் மாறியிருந்தது.

### முதலாவது தப்பித்தல் முயற்சி

எனது நிலைமை மேலும் மேலும் மோச மாகிக்கொண்டே போனது. சிற்றன்னையின் குற்றச்சாட்டுகள் ஓயந்தபாடில்லை. அப்பா வின் சித்திரவதைகள் நான் அங்கயீன மானவளாகப் போய்விடுனோ என அஞ்சுமளவுக்கு மோசமாகத் தொடர்ந்தன. நிலைமை இவ்வாறாகிப் போனதால் நாட்களைக் கவனமாக ஓட்டுவது மட்டுமின்றி, எனது மனதைத் திடமாக வைத்துக்கொள்ளவும் நான் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. நாளாக நாளாகச் சிற்றன்னையின் வெறுப்புவளர்ந்துகொண்டே போயிற்று. எனது தம்பியைப் பொறுத்த வரையில் என்னுடன் ஒப்பிடுகையில் அவனின் நிலைமை நன்றாகவேயிருந்தது.

ஒருநாள் நான் எனது புத்தகப் பையைத் தொலைத்துவிட்டேன். மதிய உணவுக்காக வீட்டுக்குச் சென்றிருந்தபோது அதைப் பாடசாலையிலேயே விட்டுவிட்டுச் சென்றி ருந்தேன். திரும்பி வந்ததும் குழப்பத்துடன் அங்குமிங்கும் அதைத் தேடினேன். புத்தகப் பை கிடைக்கவேயில்லை. பயம் என்னைக் கவ்விக் கொண்டது. புத்தகப் பையின்றி வீடு சென்றால் என்ன நடக்குமென்பது எனக்குத் தெரியும். மற்ற மாணவர்களெல்லோரும் வீடு சென்றுவிடப் பயப்பிராந்தியுடன் அழுது கொண்டே பாடசாலையிலிருந்து வெளியே வந்தேன். அழுகை எனக்கு உதவப் போவதில்லை. வீடு செல்லத் துணிவில்லாமல் அங்கேயே நின்றேன்.

மாலையாகியிருந்தது, வீட்டில் என்ன நடக்குமென்பதை மனக்கண்ணில் பார்த்துக் கொண்டேன். திடீரென எனது சினேகிதி ரெகேமாவின் ஞாபகம் வந்தது. அவள் தனது சித்தப்பாவின் வீட்டில் தங்கிப் படித்து வந்தாள். நான் அவளைத் தேடிப் போய்க்கொண்டிருக்கையில் வழியிலேயே அவளைச் சந்தித்தேன். அவளிடம் எனக்கு உதவி செய்யுமாறு கெஞ்சினேன். அவளென்னை வாழைத்தோட்டத்தினுள் ஒழிந்திருக்குமாறும், வாய்ப்பு வரும் போது என்னைத் தனது அறையினுள் கூட்டிச் செல்வதாகவும் சொன்னாள். நான் நீண்டநேரமாக வாழைத்தோட்டத்தினுள் ஒழிந்திருந்தேன். இறுதியாக அவள் வந்து தனது அறைக்கு என்னைக் கடத்திச் சென்றாள். அவளது அறை ஆட்டுப் பட்டியை ஒட்டியிருந்தது. அவளால் சிறிது உணவையும் தேடிக்கொள்ள முடிந்திருந்தது. நாங்கள் சாப்பிடத் தொடங்கும் போது அவளின் சித்தப்பா அவளைக் கூப்பிட்டார். அவள் தான் திரும்பி வரும் வரை சாப்பிட வேண்டாமெனக் கூறி விட்டுச் சென்றாள். அவர்களின் வீட்டிற்குத் திடீர் விருந்தினர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் ரெகேமாவின் அறையில் அன்றிரவு தூங்கப் போகின்றார்கள். எனவே ரெகேமா என்னை ஆட்டுப் பட்டிக்கு மாற்றினாள். அதிகாலையில் மற்றவர்கள் தூக்கத்திலிருந்து விழிப்பதற்கு முன்னதாகவே ரெகேமா ஆட்டுப் பட்டிக்கு வந்து என்னை எழுப்பிவிட்டாள். பதற்றத்துடன் எழுந்த நான் அவளை மிகவும் நேசிப்பதாகச் சொன்னேன்.

(தொடரும்)



# அந்தநாள் நினைவு

இசை அமைப்பாளர் இளையராஜா ஒரு படத்தில் நடிக்க இருந்தார். இதற்கு அவர் ஒப்புக் கொண்டும் இருந்தார். கடைசி நேரத்தில் அந்தப் படம் கைவிடப்பட்டது.

ஒரு கொலையை அடிப்படையாக வைத்து ஹாலிவுட்டில் நிறைய படங்கள் வந்து கொண்டிருந்த நேரம். அதைப்போன்ற ஒரு படத்தை தமிழில் தயாரிக்க நினைத்தார் பஞ்சு அருணாச்சலம். தமிழ்நாட்டில் நடந்த ஒரு பிரபலமான கொலை வழக்கை மையமாக வைத்து படம் எடுக்க தீர்மானித்தார். இந்து நேசன் பத்திரிக்கை ஆசிரியர் லட்சுமி காந்தன் கொலை வழக்கு இப்போதும் பிரபலம். இந்த வழக்கில் தியாகராஜ பாகவதரும், என்.எஸ்.கிருஷ்ணனும் சிறைக்கு சென்று வந்தார்கள். இந்த வழக்கை படமாக எடுக்கலாம் என்று தீர்மானித்தார் பஞ்சு அருணாசச்சலம்.

ஆனால் அந்த வழக்கை அப்படியே சினிமாவாக எடுப்பதில் நடைமுறை சிக்கல் இருந்தது. இதனால் புதுமையாக ஒன்றை யோசித்தார் பஞ்சு அருணாசலம். அதாவது தற்போது பிரபலமாக உள்ள சினிமா பிரமுகர்கள் பற்றி ஒரு பத்திரிகையாளர் தவறாக எழுதிக் கொண்டிருக்கிறார். அவரை ஒரு நிகழ்ச்சியில் சந்திக்கும் அந்த பிரபலங்கள் தொடர்ந்து இப்படி எழுதினால் உன்னை கொன்று விடுவோம் என்று மிரட்டுகிறார்கள். மறுநாள் அந்த பத்திரிக்கையாளர் கொலை செய்யப்படுகிறார். பிரபலங்கள் கைது செய்யப்படுகிறார்கள். அவர்கள் எப்படி அந்த கொலைப்பழியில் இருந்து மீள்கிறார்கள் என்பது கதை.

இதில் அந்த கதையில் வரும் பிரபலங்களாக நிஜ பிரபலங்களையே நடிக்க வைக்க முடிவு செய்யப் பட்டது. இயக்குனர் மகேந்திரன், இசை அமைப்பாளர் இளையராஜா, தயாரிப்பாளர் பஞ்சு அருணாசலம் அவர்களே அந்த நிஜ பிரபலங்கள். மூவரும் அவரவர் கேரக்டர்களில் நடிக்க முடிவானது. இதற்கான போட்டோ ஷூட் நடத்தப்பட்டு விளம்பரமும் வெளியிடப்பட்டது. ஆனால் இசை அமைப்பில் இளையராஜா பிசியாகிவிட்டதால் அவரால் நடிக்க முடியவில்லை. அதோடு பலரும் இது ரொம்ப ரிஸ்க்கான வேலை என்றதால் அந்தப் படத்தை கைவிட்டார் பஞ்சு அருணாசலம். இந்த படம் தயாராகி இருந்தால் தமிழ் சினிமாவின் முக்கியமான படமாகி இருக்கும்.

# அசைவ உணவுப் பிரியர்!


ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** நன்றாக ரசித்து சாப்பிடுவார். அவருக்கு உள்ள சிறப்பு, மற்றவர்களும் வயிறார சாப்பிட வேண்டும் என்று விரும்புவார். தான் என்ன சாப்பிடுகிறாரோ அதே உணவு அதே தரத்தில் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைப்பார். அவர் தனித்து சாப்பிட்ட நேரங்கள் மிக அபூர்வம். எப்போதும் குறைந்தது 10 பேராவது தன்னுடன் சேர்ந்து சாப்பிட்டால்தான் எம்.ஜி.ஆருக்கு திருப்தி.


எம்.ஜி.ஆர். என்றாலே எல்லாவற்றிலும் முதலாவதுதானே. சமீபத்தில் கூட அவர் படித்த கும்பகோணம் ஆனையடி பள்ளி தமிழ்நாட்டிலேயே முதலாவதாக ஐ.எஸ்.ஓ தரச்சான்றிதழ் பெற்ற பள்ளி என்ற சிறப்பை பெற்றுள்ளது.

கும்பகோணம் ஆனையடி பள்ளியில் 2ம் வகுப்புக்கு மேல் படிக்க முடியாமல் வறுமை அவரை நாடகத்தில் தள்ளியது. பிள்ளைகளை பிரிய நேர்ந்தாலும் அங்கே போனாலாவது தன் இரண்டு பிள்ளைகளும் (எம்.ஜி.ஆரும் அவரது அண்ணன் சக்ரபாணியும்) வயிறார சாப்பிடுவார்களே என்ற எண்ணத்தில் இருவரையும் நாடக கம்பெனியில் சேர்க்க கனத்த இதயத்துடன் அனுமதி அளித்தார் எம்.ஜி.ஆரின் தாயார் சத்யா அம்மையார்.

அங்கும் சில நேரங்களில் மூன்று வேளைகள் சாப்பாடு கிடைக்காது. நாடக கம்பெனிகளை சொல்லியும் குற்றம் இல்லை. கிடைக்கும் வருமானத்தை வைத்து அனைவருக்கும் சோறுபோட வேண்டிய நிலை. எனவே, குறிப்பிட்ட நாளில் நாடகத்தில் நடிப்பவர்களுக்கு மட்டுமே சாப்பாடு என்ற விதிமுறை. இப்படியே சுழற்சி முறையில் நடிகர்களுக்கு சாப்பாடு.



சத்துணவு சாப்பிடும் குழந்தைக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். பரிமாறுகிறார்.



மனைவி ஜானகி அம்மையாருடன் எம்.ஜி.ஆர்.

இது தெரியாத சிறுவன் எம்.ஜி.ஆர்., ஒருநாள் மதிய சாப்பாட்டுக்காக பசியோடு மற்ற நடிகர்களுடன் பந்தியில் அமர்ந்தார். நாடக கம்பெனி மேலாளர் இதை கவனித்துவிட்டு “இன்றைய நாடகத்தில் நீ இல்லை. உனக்கு சாப்பாடு கிடையாது” என்று சிறுவனாக இருந்த எம்.ஜி.ஆரை எழுப்பி கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துச் சென்று சாப்பாட்டு கூடத்துக்கு வெளியே விட்டு வந்தார்.

அன்று பசியுடன் அழுத கொடுமையான அனுபவங்கள்தான் சிறுவர், சிறுமிகள், பள்ளிப் பிள்ளைகள் வயிறார சத்தான உணவுகள் சாப்பிட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி சத்துணவுத் திட்டம் என்ற ஐ.நா.சபை பாராட்டும் திட்டத்தை கொண்டுவர எம்.ஜி.ஆருக்கு உந்து சக்தியாக விளங்கியது.

இளம் வயதில் கிடைத்த அனுபவங்களால், சாப்பாடு விஷயத்தில் யாராவது பாரபட்சம் காட்டினால் எம்.ஜி.ஆருக்கு கடும் கோபம் வரும். படப்பிடிப்புகளின்போது படத்தை தயாரிக்கும் கம்பெனி சார்பில் யூனிட்டில் உள்ள எல்லாருக்கும் சாப்பாடு வழங்கப்படும். சில பட கம்பெனிகளில் பட்ஜெட் கருதி, படத்தின் கதாநாயகன், நாயகி, டைரக்டர் போன்றவர்களுக்கு உயர்தரமான சாப்பாடும் தொழிலாளர்களுக்கு சுமாரான சாப்பாடும் போடப்படும். தான் நடிக்கும் படங்களில் தொழிலாளர்களுக்கும் தரமான சாப்பாடு போடப்படுவதை எம்.ஜி.ஆர். உறுதி செய்து கொள்வார்.

‘உழைக்கும் கரங்கள்’ படத்தில் எம்.ஜி.ஆர். நடித்துக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆருக்கு தினமும் வகை வகையான அசைவ சாப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டது. படத்தில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு சுமாரான சாப்பாடு போடப்பட்டது. அவர்களுக்கு சாப்பாட்டில் முட்டை மட்டுமே வழங்கப்பட்டது. பொறுத்துப் பார்த்த தொழிலாளர்கள் ஒருநாள் படப்பிடிப்பு இடைவேளையில் ஓய்வாக அமர்ந்திருந்த எம்.ஜி.ஆரிடமே தயங்கித் தயங்கி தங்கள் குறையை தெரிவித்தனர். விஷயத்தை அறிந்து கொண்ட எம்.ஜி.ஆரின் சிவந்த முகம், கோபத்தில் மேலும் குங்கும நிறமானது. “நீங்கள் போய் வேலையை பாருங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்” என்று கூறி தொழிலாளர்களை அனுப்பி விட்டார்.

மறுநாள் மதிய உணவு இடைவேளையின் போது தொழிலாளர்கள் வரிசையில் எம்.ஜி.ஆர். சாப்பிட அமர்ந்து விட்டார். சாப்பாடு பரிமாறுபவர்கள் கதிகலங்கிப் போய்விட்டார்கள். “அண்ணே, உங்களுக்கு சாப்பாடு உள்ளே இருக்கு..” என்று மென்று முழுங்கி தெரிவித்தனர்.

“பரவாயில்லை, இருக்கட்டும். எங்கே உட்கார்ந்து சாப்பிட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதானே? பசிக்கிறது. சீக்கிரம் சாப்பாடு கொண்டு வாங்க” என்று எம்.ஜி.ஆர் பதிலளித்தார்.

வேறு வழியில்லாமல் அவருக்கும் அங்கேயே சாப்பாடு பரிமாறப்பட்டது. முட்டையைத் தவிர வேறு அசைவ வகைகள் எதுவும் வரவில்லை. “ஏன் அசைவ உணவுகள் வரவில்லை. எடுத்து வந்து பரிமாறுங்கள்” என்றார் எம்.ஜி.ஆர்.

“உங்கள் அறைக்கு போய் எடுத்து வருகிறோம்”... பரிமாறியவர்களின் பவ்யமான பதில்.

“ஏன்? தொழிலாளர்களுக்கு உள்ளது என்ன ஆச்சு?”... எம்.ஜி.ஆரின் கேள்வியில் கூர்மை ஏறியது.

“இவங்களுக்கு வெறும் முட்டை மட்டும்தான் போடச் சொல்லியிருக்காங்க”... இந்த பதிலுக் காக காத்திருந்த எம்.ஜி.ஆர். கோபத்தின் உச்சிக்கே சென்றார்.

“தயாரிப்பு நிர்வாகி எங்கே? ஏன் இப்படி சாப்பாட்டிலே பாகுபாடு செய்யறீங்க? தொழிலாளர்கள்தான் அதிகம் உழைக்கிறார்கள். அவங்க தான் நல்லா சாப்பிடணும். அவங்களுக்கு வெறும் முட்டை; எனக்கு மட்டும் காடை, கவுதாரியா? அவங்களுக்கும் தினமும் அசைவ சாப்பாடு கொடுங்க. கம்பெனியால முடியலைன்னா அதுக்கான செலவை என் கணக்கிலே வச்சுக்குங்க. சம்பளத்திலே கழிச்சுக்கிறேன்” என்று எம்.ஜி.ஆர். பொரிந்து தள்ளிவிட்டார்.

மறுநாள் முதல் தொழிலாளர்கள் அனைவருக்கும் எம்.ஜி.ஆர். சாப்பிடும் அதே வகை வகையான அசைவ சாப்பாடுகள்தான்.

எம்.ஜி.ஆருக்கு 1971ம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த நடிகருக்கான ‘பாரத்’ விருது கிடைக்கக் காரணமாக இருந்த ‘ரிக் ஷாக்காரன்’ படத்தில் ஒரு காட்சி. சக ரிக் ஷா தொழிலாளி ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாமல் ரிக் ஷா ஓட்ட முடியாத நிலை. அதனால், அன்று அவரது குடும்பத்துக்கு வருமானம் இல்லை. அதனால் சாப்பாடும் இல்லை. மதியம் அங்கு வரும் சாப்பாட்டுக்கார அம்மாவான பத்மினியிடம் இருக்கும் மொத்த சாப்பாட்டையும் எம்.ஜி.ஆர். வாங்கி, தான் கூட சாப்பிடாமல் நோயுற்ற தொழிலாளியின் வீட்டில் எல்லாரும் சாப்பிடக் கொடுத்தனுப்புவார்.

எம்.ஜி.ஆர். சாப்பிடாதது பற்றி ஒரு தொழிலாளி வருத்தப்பட, இன்னொரு தொழிலாளி “மத்தவங்க வயிறு நிறைஞ்சாத்தான் இவருக்கு (எம்.ஜி.ஆருக்கு) மனசு நிறைஞ்சுடுமே” என்பார்.

அதற்கு பதிலளிக்கும் எம்.ஜி.ஆர்., “மனுஷங்க வாழ்த்தறதை நம்ப முடியறதில்ல. ஆனால், வயிறு வாழ்த்தினால் நம்பலாம்பா” என்று கூறுவார்.

எவ்வளவு நிதர்சனமான வார்த்தைகள். இன்றும் பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் வயிறுகள் எம்.ஜி.ஆரை தினமும் வாழ்த்திக் கொண்டுதான் இருக்கின்றன.

அசைவ உணவுகளை எம்.ஜி.ஆர். விரும்பி சாப்பிடுவார். இறால் குழம்பு மிகவும் இஷ்டம். சாப்பாட்டில் தினமும் கட்டாயம் ஏதாவது கீரை இருக்க வேண்டும். இனிப்பு வகைகளில் பாஸந்தி அவருக்கு பிடிக்கும். முந்திரி பகோடா அவரது ‘ஃபேவரைட்’. இதை எல்லாம் சாப்பிட்டாலும் தினமும் தவறாமல் சோற்றில் தண்ணீர் ஊற்றிவைத்திருந்து நீராகாரம் பருகுவார். கேட்டால், “உடல் உஷ்ணத்தை இது தணிக்கும் என்பதோடு, நான் பழசை மறக்காமல் இருக்க” என்று அடக்கமாக பதிலளிப்பார். **தொடரும்...**



சென்னை திருவேற்காடு கருமாரி அம்மன் கோயிலில் நடந்த திருமண விழாவில் மக்களோடு அமர்ந்து சாப்பிடுகிறார் முதல்வர் எம்.ஜி.ஆர்.




‘ரிக்ஷாக்காரன்’ படத்தில் ரிக் ஷா போட்டியில் வெற்றி பெற்ற எம்.ஜி.ஆருக்கு ஆரத்தி.



# பன்சேனை பாரி வித்தியாலயத்தை திரும்பிப் பார்ப்பார்களா?





வள்ளல்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட கிராமங்களை உள்ளடக்கியது. அதிகாரிகளும் அதிகம் திரும்பிப்பார்ப்பதில்லை. இங்குள்ள பாடசாலைகள் வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருகின்றன. இதற்கு மண்முனை மேற்கு கோட்டத்திற்குட்பட்ட பன்சேனை பாரி வித்தியாலயமும் சான்று.

மட்டக்களப்பு நகரிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது பன்சேனை கிராமம். காடுகள், வயல்வெளி, குளங்களால் நிறைந்தது. ஆங்காங்குதான் மக்கள் குடியிருப்புக்கள் உள்ளன. கிராமமக்கள் அதிகம் கூலித் தொழிலையே நம்பியுள்ளனர்.

இங்குதான் பன்சேனை பாரி வித்தியாலயம் அமைந்துள்ளது. 1982ம் ஆண்டு யூன் மாதம் மூன்றாம் திகதி இந்த பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 350க்கு மேற்பட்ட மாணவர்களையும் 16ஆசிரியர்களையும் கொண்டுள்ளது. தரம் 1தொடக்கம் தரம் 11வரையான வகுப்புக்கள் உள்ளன.

பன்சேனை, பனையறுப்பான், சில்லிக் கொடியாறு, காலபோட்டமடு, நல்லதண்ணீரோடை, நெடுஞ்சேனை, இரும்பண்டகுளம், அடைச்சல், வாதக்கல்மடு, கண்டியநாறு போன்ற சுற்றயல் கிராமங்களின் மாணவர்கள் இந்தப்பாடசாலைக்கு வருகிறார்கள். இவர்களில் பலர் 5 கிலோமீற்றருக்கு அதிக தூரம் நடந்தே வருகிறார்கள்.

பாடசாலை எதிர்கொள்ளும் பிரதான சவாலே ஆசிரியர் பற்றாக்குறைதான். அடுத்து வளப்பற்றாக்குறையும் பிரச்சனையாக உள்ளது. அதுதவிர, மாணவர்கள் பாதுகாப்பற்ற காட்டுப்பாதையினூடாக பல கிலோமீற்றர் பயணிக்க வேண்டியிருப்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். நெடுஞ்சேனை, கண்டியநாறு, நல்லதண்ணீரோடை, வாதக்கல்மடு, அடைச்சல் போன்ற இடங்களில் இருந்து வரும் மாணவர்களே ஆபத்தான பாதைகளை பாவிக்க வேண்டிய நிலையுள்ளது. ஆபத்தான பாதையை மாணவர்கள் தொடர்ந்து பாவிப்பதை பெற்றோர் விரும்புவதில்லை. அதனால் சிறிதுகாலத்திலேயே பாடசாலையிலிருந்து இடைநிறுத்தி விடுகிறார்கள். குறிப்பாக பெண் பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைவிலக்கப்பட்டு, திருமணம் செய்விக்கப்படுகிறார்கள்.

ஆறுகளை கடந்தும் மாணவர்கள் பாடசாலைக்கு வர வேண்டியுள்ளது. ஆறுகளை கடந்து வர வேண்டிய மாணவர்கள் மழைக் காலங்களில் பாடசாலைக்கே வருவதில்லை. நீண்டதூரங்களில் இருந்து காட்டு பகுதியால் பயணம் செய்யும் மாணவர்கள் ஓட்டமும், நடையுமாக ஆபத்தான பாதைகளை கடப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தப்பகுதிகளிலுள்ள பாதைகள் அதிகம் காட்டுயானைகள் நடமாடும் பகுதிகளாக உள்ளது. பாடசாலை மட்டுமல்ல இந்த கிராமமே எதிர்கொள்ளும் இன்னொரு சவால் குடிநீர் தட்டுப்பாடு. கோடைகாலங்களில் குடிநீருக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இந்தப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அனைவருமே கூலித்தொழில் செய்வர்கள். வறுமையான சூழல், பிள்ளைகளும் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றமை, பெண்பிள்ளைகளிற்கு விரைவாக திருமணம் செய்து வைப்பதும் கல்விச்செயற்பாட்டிற்கு பெரும் தடைக்கல்லாக உள்ளது.

வளப்பற்றாக்குறைகளுடன் உள்ள இந்தப்பாடசாலை சோர்ந்துவிடாமல் போராடிக்கொண்டிருக்கிறது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நீண்டகாலமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடையாத நிலை தொடர்ந்தது. 2015இல்த்தான் இந்தகுறை தீர்ந்தது.

17வயது பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கிழக்கு மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

பன்சேனை பாரி வித்தியாலயம் வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுடன் இயங்கிக்கொண்டிருக்கிறது. போக்குவரத்து, பாதை, ஆளணி, வளம், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கவனம் எடுப்பார்களா?





▶ மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஓட்டமாவடி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் விழிப்புணர்வு வீதி நாடகம் நடாத்தப்பட்டது. மட்டக்களப்பு மனிதம் கலைக் குழுவினால் வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை, மாவடிச்சேனை போன்ற இடங்களில் வீதி நாடகம் நடித்துக் காணப்பட்டது.



## அமீர் அலி பாய்ச்சல்!

கல்குடா தொகுதி முஸ்லீம் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியை சீரழிப்பதற்கு கிழக்கு மாகாண முதல்வர் முற்படுகிறார் என குற்றம்சாட்டியுள்ளார் கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி. வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலைக்கு ஒலிபெருக்கி சாதனங்களை அண்மையில் கையளித்த நிகழ்வில் இதனை தெரிவித்தார்.

"ஓட்டமாவடி கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலையில் உயர்தர ஆசிரியர் ஒருவர் அதிபர், வலயக்கல்வி பணிப்பாளரின் அனுமதியின்றி, பதில் ஆசிரியர் நியமிக்கப்படாமல் கிழக்கு முதல்வரின் சிபாரிசுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பதில் கடமைக்கு ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படாமல் இடமாற்றம் வழங்கினால் மாணவர்கள் எப்படி கல்வி கற்பது? அடுத்த ஆண்டு பரீட்சை எழுதும் மாணவர்களின் நிலை என்ன? உங்களுக்கு தேவையானவர்கள் என்றால் மாணவர்களின் எதிர்காலம் பற்றி சிநதிக்காமல் எதுவும் செய்வீர்களா? இது மாணவர்களிற்கு செய்யும் துரோகம்" என்றார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக்கல்வி அலுவலக உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.கே.றஹ்மான், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திசங்கத்தவர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மீண்டும் வருமா மாநகரசபை மண்டபம்?



கல்முனை நகர மண்டபம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர். தனியார் நிறுவனமொன்றின் களஞ்சியசாலையாக பாவிக்கப்படும் நகர மண்டபத்தை புனரமைப்பு செய்வதற்கு பெருமளவு பணம் தேவைப்படும் என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம்.மன்சூரினால் கல்முனை நகர மண்டப திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அமைச்சர் எம்.எச்.எம்.அஷ்ரப்பினால் முழுமையாக்கப்பட்டது கல்முனை நகர மண்டபம். கடந்த பல வருடங்களாக பொதுமக்களின் பல்வேறு தேவைகளிற்கு கல்முனை நகர மண்டபம் பயன்பட்டு வந்தது.

முன்னாள் மாநகர முதல்வர் நிஷாம் காரியப்பரின் காலத்தில், நகர மண்டபத்தால் போதிய வருமானம் கிட்டவில்லையென கூறி அது தனியார் நிறுவனமொன்றின் களஞ்சியசாலையாக குத்தகை அடிப்படையில் மாற்றப்பட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியிருந்தது.

வரும் டிசம்பர் மாதம் குத்தகை காலம் நிறைவடையவுள்ள நிலையில் களஞ்சியசாலையாக பாவிக்கப்படும் மண்டபத்தின் உள்தோற்ற புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. மண்டபம் மிக மோசமான நிலையில் உள்ளதை புகைப்படங்கள் வெளிப்படுத்துகின்றன. மண்டபத்தை புனரமைக்க பெருந்தொகை நிதி தேவைப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

டிசம்பர் மாதம் குத்தகை நிறைவடையும் நிலையில், அதனை புதுப்பிக்காமல் பழைய நகர மண்டபமாக மாற்ற மாநகர நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேசமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வெளிமாவட்டங்களிற்கு கால்நடை கொண்டு செல்லலாம்



புனித ஹஜ்ஜுப் பெருநாளையொட்டி உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்று வதற்காக கிழக்கு மாகாணத்திலிருந்து கால்நடைகளை வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்வதில் எந்தத்தடைகளு மில்லை என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ் சுபையிர் தெரிவித் துள்ளார்.

உழ்ஹிய்யா கடமையினை நிறைவேற்றுவோர் ஏனையோரின் உணர்வுகளை தூண்டாத வகையில் தங்களது கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். கிழக்கு மாகாணத்திலிருந்து உழ்ஹிய்யா கடமைக்காக கால்நடைகளை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களப் பணிப்பாளரை தொடர்புகொண்ட போது அவர் மேற்படி உறுதிமொழி வழங்கியதாகவும் மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார். உழ்ஹிய்யா கடமைக்காக பசு மாடுகளையும், நோயுள்ள மாடுகளையும் கொண்டு செல்ல முடியாது எனவும், அதற்குத் தகுதியானவற்றை உரிய ஆவணங்களுடன் கொண்டு செல்ல எந்தத்தடையும் இல்லையெனவும் பணிப்பாளர் தெரிவித்ததாகவும் கூறினார்.



## முதலிடம் பிடித்த மாணவிகள்

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் கொழும்பில் நடத்தப்பட்ட விவிலிய வினாவிடை போட்டியில் பெரிய க்ல்லாறு அருளானந்தர் ஆலயத்திலிருந்து பங்குபற்றிய மாணவர்கள் முதலிடத்தை பெற்றுள்ளனர். கீழ்ப்பிரிவில் கலந்து கொண்ட மாணவர்களே முதலிடத்தை பிடித்துக் கொண்டனர். இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு டச்பார் புனித இன்னாசியார் மறைக்கல்வி நிலைய மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

## வடக்கில் அப்படி; கிழக்கில் இப்படி!



தன்மீது இணையத்தளங்கள் சில அவதூறுகளை பரப்பி வருவதாக குற்றம்சாட்டியுள்ளார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா). அரசியல்வாதியொருவரை முன்னிலைப்படுத்துவதற்காக, அவரது சார்பான இணையமொன்றை இந்த அவதூறை முன்னின்று பரப்புவதாகவும் கூறியுள்ளார்.

வெல்லாவெளி பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட பெரிய போரதீவு பாலர் பாடசாலை சுற்றுமதிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

"ஆரையம்பதியில் விடுதலைப்புலிகளின் பெண் உறுப்பினர் ஒருவரின் கொலை மற்றும் அதனுடன் இணைந்த சம்பவங்களை வைத்து என்மீது அவதூறுகளை பரப்பி வருகிறார்கள். அந்தக்காலப்பகுதியில் எமது இயக்கம் சார்பாக அந்தப்பகுதி பொறுப்பாளராக நான் இருந்ததை வைத்து இந்தக்குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. கடந்த காலங்களில் எல்லா இயக்கங்களுமே சகோதர படுகொலையில் ஈடுபட்டன. மாத்தையா கொல்லப்பட்டார். உமாமகேஸ்வரன் கொல்லப்பட்டார். ஆலாலசுந்தரம், தர்மலிங்கம், யோகேஸ்வரன், அல்பிரட் துரையப்பா போன்றவர்கள் கொல்லப்பட்டனர்.

இயக்கங்களிற்கிடையிலான மோதலின் பின்னர்தான் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் இயக்கங்களை அழைத்து தமிழ்தேசிய கூட்டமைப்பை ஆரம்பித்தார். அனைவரும் பிழை விட்டோம், இனி ஒன்றாக மக்களின் விடுதலைக்காக செயற்படுவோம் என்றுதான் கூறினார். இன்றுவரை அது தொடர்கிறது. ஆயுத இயக்கங்களின் தலைவர்கள் வடக்கில் வாழ்கிறார்கள். அங்குள்ள ஊடகங்கள் அவர்களை விமர்சிப்பதில்லை. காரணம், அவர்களிற்கு பிரச்சனை தெளிவாக தெரியும்.

பட்டிருப்பு தொகுதியிலுள்ள சில அரசியல்வாதிகளை முன்னிறுத்த வேண்டுமென்பதற்காக என்மீது இந்த விசமத்தமான பிரச்சாரம் முன்னெடுக்கப்படுகிறது" என்றார்.

## காத்தான்குடி சர்ச்சைக்கு தீர்வு



காத்தான்குடி ரெலிகொம் வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் பணிபுரிந்த சிறுவன் ஒருவன் தொடர்பில் எழுந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. சிறுவன் மீது அசிற் வீசப்பட்டதா அல்லது மின்சார தாக்குதல் நடந்ததா என நீடித்த குழப்பத்திற்கு வைத்திய பரிசோதனை முடிவுகள் முற்றுப்புள்ளியிட்டுள்ளன. சிறுவன் மின்சார தாக்குதலிற்கே உள்ளானதாக நோய் நிர்ணய அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுவன் மீது அசிற் வீசப்பட்டிருக்கலாமென்ற குற்றச்சாட்டை சிலர் முன்வைத்ததை தொடர்ந்து சர்ச்சை கிளம்பியது. தனது தலையில் யாரோ பொல்லால் தாக்கியதாக சிறுவனும் வைத்தியசாலையில் தெரிவித்திருந்தான். இது சர்ச்சையை இன்னும் அதிகமாக்கியது.

கடந்த சில தினங்களாக சர்ச்சை நீடித்த நிலையில் வைத்தி பரிசோதனை முடிவுகள், மின்சாரத் தாக்குதலிற்கே சிறுவன் உள்ளானதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# டூரிங் டாக்கீஸ்




## தள்ளாடிய அருண் விஜய்

அருண் விஜய் மதுபோதையில் வாகனம் செலுத்தி பொலிஸ் வாகனத்தில் மோதிய விவகாரம் சமூகவலைத்தளங்களில் பரபரப்பாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. சினிமாவில் முன்னுதாரண கருத்துக்களை கூறும் நடிகர்கள், நிஜத்தில் அப்படி நடந்து கொள்வதில்லையென்ற முணுமுணுப்பு மீண்டும் எழுந்துள்ளது. ஏற்கனவே ஐஸ்வர்யா என்ற தொழிலதிபர் மகள் காரால் மோதி தொழிலாளியொருவர் கொல்லப்பட்ட பரபரப்பு அடங்குவதற்கு முன், அருண் விஜய் விவகாரம் எழுந்துள்ளது. மதுபோதையில் தள்ளாடிய அருண் விஜயை அவரது தந்தை விஜயகுமார்தான் காவல்நிலையத்திற்கு சென்று பிணையில் விடுவித்து சென்றிருக்கிறார்.



## விஷால் அணியும் ஊழலா?

நடிகர் சங்கத்திற்கு புத்துயிர் அளிக்கப் போகிறோம் என பிரமாண்ட பிரச்சாரத்துடன் விசால் அணி களமிறங்கி வெற்றி பெற்றது. தேர்தல் முடிந்து ஒரு ஆண்டு முடிவதற்குள் விஷால், நாசர் மீது பயங்கர குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார் நடிகரும், பத்திரிகையாளருமான வாரகி. முன்னைய நிர்வாகத்தைவிட தற்போதைய நிர்வாகத்தில் இரண்டு மடங்கு ஊழல் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இது பற்றி விசாரிக்க நேரில் வருமாறு நடிகர் சங்கம் நோட்டீஸ் அனுப்பியபோது, அவர் அங்கு சென்றிருக்கிறார். ஆனால் நடிகர் சங்கத்திலிருந்து யாரும் வந்திருக்கவில்லை. நட்சத்திர கிரிக்கெட் நடத்த சன் ரிவி 13 கோடி கொடுத்ததாகவும், இப்பொழுது 7 கோடிக்குத்தான் கணக்கு காட்டுவதாகவும், 3 கோடி கிரிக்கெட்டிற்கு செலவானதாகவும், மீதி 3 கோடிக்கு என்ன நடந்ததென்றும்தான் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.



## சமந்தா தத்துவம்

தன்னைப்பற்றி அடிக்கடி கிசுகிசுக்கள் வருவது வருத்தப்பட வைத்துள்ளதாக சமந்தா சொல்லியிருக்கிறார். நாட்டில் எவ்வளவோ நல்லவைகள் நடக்க, மற்றவர்களின் சொந்த வாழ்க்கைக்குள் எட்டிப்பார்ப்பது என்ன பழக்கம் என்றும் கடிந்துள்ளார். தெலுங்குப்படமொன்றில் "நல்ல விசயங்களை எப்பொழுதும் பேசிக்கொண்டே இருக்க வேண்டும்" என சத்யராஜ் வசனம் பேசியதாகவும், அது தனக்கு மிகப்பிடித்தமான வசனம் என்றும் கூறியுள்ளார். மற்றவர்களை பற்றி பேசி, குறை சொல்லிக்கொண்டிருப்பவர்களை தனக்கு பிடிப்பதில்லை என்றும், நல்ல விசயங்களை பேசுவதன் மூலம் சமூகத்திலுள்ளவர்களும் நல்லவிதமாக நடப்பார்கள் என்றும் கூறியுள்ளார்.

## ஏடாகூட எமி

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். எமி ஜக்சன் விடயத்தில் அது நடந்திருக்கிறது. தமிழ் சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்னர் இங்கிலாந்தில் மொடலிங் செய்து கொண்டிருந்தவர் எமி. அப்பொழுது ஏடாகூட படங்கள் ஏராளமாக எடுத்தார். நீச்சலுடை, அரைநிர்வாண படங்களை அடிக்கடி எடுத்து சமூகவலைத்தளங்களில் பகிர்ந்து ரசிகர்களை உசுப்பேற்றிக் கொண்டிருந்தார். தமிழ் சினிமாவில் நடிக்க வந்தபின், ஏடாகூட படங்களை எடுக்க வேண்டாம் என இயக்குனர்கள் கண்டிப்பு உத்தரவு பிறப்பித்திருந்தனர். எமியும் அதை பின்பற்றி வந்தார். சமீபத்தில் அவரது பிறந்தநாள் கொண்டாட்டம். இங்கிலாந்திற்கே பறந்து விட்டார். நண்பர்களுடன் ஆட்டம், பாட்டம் கொண்டாட்டமாக இருந்தார். பின்னர் பண்ணை வீடொன்றில் மேலாடை இல்லாமல் அரைநிர்வாண படங்களை எடுத்து சமூகவலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார். இதை பார்த்து இயக்குனர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள்.



## இசைக்கு ஆடும் இனியா

இந்தியாவின் 70வது சுதந்திரதினத்தை முன்னிட்டு “எனது இந்தியா“ என்ற இசை அல்பத்தை வெளியிட்டுள்ளார் இசையமைப்பாளர் கணேஷ் பிரசாத். மனோ, நித்திய ஶ்ரீ உள்ளிட்ட பலர் பாடியுள்ளனர். இந்த அல்பத்தில் நடிகை இனியாவும் ஆடியுள்ளார். சினிமாவில் வாய்ப்புக்கள் கிடைக்காமல் போனதும் எந்த வாய்ப்பு கிடைத்தாலும் விடுவதில்லையென்ற முடிவை இனியா எடுத்துள்ளார். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கடை திறப்பு விழாவிற்கு வந்து போயுள்ளார். இந்தநிலையில் இசைஅல்பங்களிலும் ஆடத் தொடங்கியுள்ளார். இது அவருக்கு மூன்றாவது அல்பம்.




## தளபதி ஆகும் விஜய்

விஜய்யின் 60வது படத்தை பரதன் இயக்கி வருகிறார். இதில் விஜய்க்கு இரண்டு வேடம். ஆரம்பத்தில் “எங்கவீட்டு பிள்ளை“ என படத்திற்கு தலைப்பட்டிருந்தார்கள். படத்தலைப்பு அறிவிப்பை மர்மமாக வைத்திருந்த நிலையில், எப்படியோ அது வெளியில் கசிந்துவிட்டது. அதற்கு எம்.ஜி.ஆர் ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவிக்க, தலைப்பை மாற்ற முடிவு செய்தனர். பட தலைப்பு குறித்து பல தகவல்கள் அண்மைநாட்களாக இணையங்களில் பரவிவந்து கொண்டிருக்கின்றன. இந்தநிலையில் விஜய் தனக்கு பிடித்த பெயர் ஒன்றை இயக்குனருக்கு சிபார்சு செய்துள்ளார். அதுவும் ரஜினி படப்பெயர்தான். மணிரத்னம் இயக்கத்தில் சக்கைபோடு போட்ட “தளபதிதான் பெயர். படத்தின் கதைப்படி தளபதி பொருத்தமாக இருக்குமென விஜய் சிபார்சு செய்துள்ளாராம்.



## குளித்தார் ஆனந்தி!

கவர்ச்சிக்கு கட்டுப்பாடு போட்டுவந்த ஆனந்தி அதை தளர்த்தி விட்டார் என்பதுதான் செய்தி. விமலுடன் “மன்னர் வகையறா“ படத்தில் ஆனந்தி நடிக்கிறார். ஏற்கனவே கவர்ச்சி விவகாரத்தில் ஆனந்தி கறார் என பெயர் எடுத்தவர். அப்படி இப்படி நடிக்கவே மாட்டார். இந்தப்படத்தில் சற்று கவர்ச்சியிருக்குமாம். அதுவும் பம்புசெட் ஒன்றில் குளியல்போடும் காட்சியாம். நான் மெல்லிதாக இருப்பதால் கவர்ச்சி நன்றாக வராதென ஆனந்தி மழுப்ப, சற்று எடை கூட்டுங்கள் என கூட்ட வைத்து அந்த காட்சியில் நடிக்க சம்மதிக்க வைத்து விட்டனர். ஒரேயொரு நிபந்தனை மட்டும்தான் போட்டாராம். படப்பிடிப்பை நிறையப்பேர் பார்க்க கூடாது. இதெல்லாம் மேற்றரா, படத்தை நிறையப்பேர் பார்த்தால் சரியென பாதுகாப்பான படப்பிடிப்பை நடத்தி விட்டார்களாம்.



# கிரெடிட் கார்ட் பயன்படுத்துபவர்கள் கட்டாயம் தவர்க்க வேண்டிய தவறுகள்

ரூபா சிவரூபன்

கிரெடிட் கார்ட் இன்று அனைவருக்கும் மிகச் சுலபமாக கிடைக்கக்கூடிய விஷயமாக மாறிவிட்டது. கிரெடிட் கார்ட் வைத்திருப்பது கௌரவமாகவும் மாறிவிட்டது. ஆனால், இதனை வாங்கிவிட்டு சரியாகப் பயன்படுத்தத் தெரியாமல் பலரும் மாட்டிக்கொண்டு விழிக்கிறார்கள்.

கிரெடிட் கார்ட் வைத்திருப்பவர்கள் கட்டாயம் தவிர்க்க வேண்டிய 10 தவறுகள் இதோ...

**1. அளவுக்கு மீறி செலவழிக்காதீர்கள்**

நமது சேமிப்பில் இல்லாத அளவு தொகையைத் தாண்டி செலவு செய்யதான் கிரெடிட் கார்ட். இப்படி ஒரு வசதி கிடைப்பதினாலேயே அதிக தொகையை செலவழிக்கலாம் என்று நினைக்காதீர்கள். உங்கள் தேவைக்கேற்ப, உங்களால் திரும்பக் கட்ட முடிகிற அளவுக்கான பணத்தை மட்டுமே கிரெடிட் கார்ட் மூலம் எடுத்துப் பயன்படுத்துங்கள். உதாரணமாக, உங்களுக்கு ரூ.50,000 கிரெடிட் லிமிட் இருந்தால், இவ்வளவு பணத்தையும் எடுத்துச் செலவு செய்ய வேண்டும் என்பதில்லை. உங்கள் தேவை ரூ.10,000 என்றால் அதற்கு மட்டும் செலவு செய்யுங்கள்.

**2.கிரெடிட் கார்ட் பில் கட்டுவதை தள்ளிப் போடாதீர்கள்**

கிரெடிட் கார்ட் மூலம் செலவு செய்ததற்கான பில்ல்லை அதன் காலாவதி திகதிக்குள் செலுத்த வேண்டும். இல்லை எனில், அதிக வட்டி செலுத்த வேண்டியிருக்கும். இந்த வட்டிக்தொகையை ஓர் ஆண்டு முழுவதும் என எடுத்துக்கொண்டால் மிகஅதிக தொகையாகிவிடும். இதனால் உங்களது சிபில் ஸ்கோர் பாதிக்கப்பட்டு, உங்களால் வங்கிகளில் கடன் பெற முடியாத நிலை ஏற்படக் கூடும்.

**3. தவணைத் திகதி மற்றும் வட்டியில்லாக் காலம்**

உங்களுடைய தவணைத் திகதி மற்றும் வட்டியில்லாக் காலம் எப்போது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். உதாரணமாக, ஒரு கிரெடிட் கார்ட்க்கு வட்டியில்லாக் காலம் என்பது 55 நாட்கள் எனக் கொண்டால், ஒருவர் 1ம் திகதி வாங்கும் பொருளுக்கு அடுத்த மாதம் 24ம் திகதி வரை வட்டியில்லாக் காலம் இருக்கும். ஆனால், அவரே ஒரு பொருளை 15ம் திகதி வாங்குகிறார் என்றால் அவருக்கு 40 நாட்கள்தான் வட்டியில்லாக் காலம் கிடைக்கும். கிரெடிட் கார்ட்களுக்கான வட்டியில்லாக் காலம் என்பது பணம் செலுத்தும் நாள், நீங்கள் பொருள் வாங்கிய திகதி ஆகியவற்றைப் பொறுத்து மாறும். இதனைச் சரியாக புரிந்து கொள்ளாமல் போனால், தேவை இல்லாமல் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும்.

**4. கிரெடிட் கார்ட் மூலம் பணம் எடுக்காதீர்கள்**

வங்கிகள் உங்களது பரிவர்த்தணை அளவைக் கூட்ட உங்களுக்கு கூடுதல் வசதிகளை அளிக்கும். கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி பணம் எடுக்கும் வசதி தரப்பட்டிருக்கும். இந்த வசதியை தேவையில்லாமல் பயன்படுத்தாதீர்கள். இதனால் உங்கள் வட்டியில்லாக் காலமும் பாதிப் படையும். சில நேரங்களில் உங்களுக்கு இது தேவையற்றசுமையாக மாறும். கிரெடிட் கார்டில் பணம் எடுத்த அடுத்த நொடியில் இருந்தே வட்டி கணக்கிடப்படுவது துவங்கி விடும் என்பதை மறக்கக் கூடாது.

**5. பல கிரெடிட் கார்ட்கள் வேண்டாம்**

உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரே கிரெடிட் கார்டை மட்டும் வாங்கிக் கொள்ளுங்கள். ஒன்றுக்கும் மேற்பட்ட கிரெடிட் கார்ட்களை வாங்கித் தேவையற்ற சிக்கலில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இதற்கான தவணைத் திகதி, பில் கட்டணம் என பல விஷயங்களில் சிக்கித் தேவையில்லாத கடன் சுமையில் மாட்டிக்கொள்ளும் நிலை உருவாகும்.

**6. நண்பர்கள், உறவினர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள்**

உங்களிடம் கிரெடிட் கார்ட் உள்ளது என்றால் உங்கள் கிரெடிட் கார்ட் மூலம் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம் என்று நினைக்கும் உங்கள் நண்பர்கள், உறவினர்களிடம் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள். ஒருவேளை அவர்கள் உங்களது கிரெடிட் லிமிட் முழுவதுக்கும் பொருளை வாங்கிவிட்டால்நீங்கள் பயன்படுத்தமுடியாத சூழல் ஏற்படும். தவிர, அவர்கள் பணத்தைத் திரும்பச் செலுத்த தாமதப்படுத்தினால் அது உங்களுக்கு கூடுதல் சுமையாக மாறும்.

**7. இம்பல்ஸ் பேர்ச்சேஸ்களை தவிருங்கள்**

ஷொப்பிங் மோல் போகும்போது அல்லது ஏதாவது பெரிய பேர்ச்சேஸ் செய்யும்போது 'நம்மிடம்தான் கிரெடிட் கார்ட் உள்ளதே' என்று பொருட்களை வாங்கிக் குவிக்க வேண்டாம். இல்லையெனில் 1,000 ரூபாய்க்கு செய்ய வேண்டிய செலவுகளை உங்களது இம்பல்ஸ் காரணமாக 1,500 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கும். அதனால் உங்கள் பேர்சேஸை இம்பல்ஸாக அதிகரிக்காதீர்கள்.

**8. ஓஃபர்களுக்கு தலை சாய்க்காதீர்கள்**

ரூ. 10,000க்கு மேல் பேர்ச்சேஸ் செய்தால் ஓஃபர் என பல ஓஃபர்களை ஒன்லைன் நிறுவனங்கள் அளிக்கும். அதனையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு உங்களது பேர்ச்சேஸ் அளவைக் கூட்டாதீர்கள். உதாரணமாக, நீங்கள் வாங்க வேண்டிய பொருள் 8,000 ரூபாய்க்குத்தான் என்றால் 10,000 ரூபாய் ஓஃபருக்காக ஆசைப்பட்டு மேலும் 2,000 ரூபாயைச் செலவழிக்காதீர்கள். கூடுதலாக நீங்கள் செலவு செய்வதால், நீங்கள் கூடுதலாக வட்டி கட்ட வேண்டியிருக்கும். அதனால் ஓஃபர்களில் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி உங்கள் பணத்தை வீணாக்காதீர்கள்.

**9. தினசரி செலவுகளுக்கு பயன்படுத்தாதீர்கள்**

கிரெடிட் கார்ட்களை சரியான செலவுகளுக்கு மட்டும் பயன்படுத்துங்கள். தினசரி செலவுகளுக்குப் பயன்படுத்த துவங்காதீர்கள். அது அதிகப் படியான




செலவுகளையும், சிறு சிறு செலவுகளாக சேர்ந்து, மிகப் பெரிய தொகையை உங்கள் கணக்கிலும் எடுத்துக் கொண்டு விடும்.

**10. விதிமுறை, நிபந்தனைகளை கட்டாயம் படியுங்கள்**

கிரெடிட் கார்ட்க்கான விதிமுறைகள், நிபந்தனைகளை கட்டாயம் படியுங்கள். உங்கள் கார்ட்க்கு உள்ள சலுகைகள் பற்றி தெரியாமல் அதில் எக்கச்சக்கமாக பொருட்களை வாங்கிக் குவித்து விட்டால், பின்னர் தவணைத் தொகை செலுத்தும்போது விழி பிதுங்கி நிற்பீர்கள்.

சுருக்கமாக, உங்கள் கிரெடிட் கார்ட் பில் உங்களை பயமுறுத்துகிற மாதிரி இல்லாமல் இருந்தாலே போதும்!





▶ மட்டக்களப்பு கரவெட்டி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய புனராவர்த்தன சப்புரோக்சண அஷ்டபந்தன பஞ்சகுண்டபஷ மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி விஞ்ஞாபணததை முன்னிட்டு அம்பாளுக்கு எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

# சுயசார்பு பொருளியல் பண்பாட்டைத் தக்கவைத்தலுக்கான வாகரை மக்களின் போராட்டம்

களப்புமகன்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இறால் பண்ணைக்கு எதிராக பிரதேச மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிடுவது சிறிய அளவிலாவது உலகத்திற்கு முன் வந்து கொண்டிருக்கிறது. இறால் பண்ணை தமது வாழ்வாதாரத்தை முற்றாக அழித்து, தம்மை நடுத்தெருவில் நிறுத்திவிடும் என்று மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

களப்பையும், களப்பை அண்டிய பிரதேசத்தையும் மையமாக வைத்து கட்டியெழுப்பப்பட்டுள்ள தமது பாரம்பரிய வாழ்வாதாரம் அழிக்கப்பட்டால், அடுத்து நாங்கள் என்ன செய்வதென்பதே வாகரை மக்களின் கேள்வி. அதற்கு அரசிடமோ, அதிகாரிகளிடமோ, அரசியல்வாதிகளிடமோ, திட்டத்தை நடைமுறைப்படுத்தும் தனியார் நிறுவனத்திடமோ பதிலில்லை. வேலைவாய்ப்பு என்ற பதில் ஒரு சுயசமாதானம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இயற்கையான நிலத்தில், பாரம்பரியமுறையில் தொழில் செய்து, சுயசார்பு பொருளாதாரத்தை கட்டியெழுப்பியுள்ள மக்களிடம் சென்று, இந்த பகுதியில் வேறு தொழில் தொடங்கவுள்ளோம், உங்களிற்கும் வேலைவாய்ப்பு தருகிறோம் என்று கூறுவது மாபெரும் அநீதி.

பெருநிறுவனங்களின் அசுர வளர்ச்சியை பாதுகாத்து, மக்களை பொருளாதார அடிமைகளாக்கும்பொருளாதாரத்தைஎப்படி அழைப்பது? இதனை ஊக்கப்படுத்துவது யார்? பின்னணியில் இருப்பவர்கள் யார்?

பிரதேசமக்களின் விருப்பத்திற்கு மாறாக, அவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்க துடிக்கும் இறால் பண்ணை திட்டத்தின் பின்னணியில் இருப்பது அரசியல்வாதிகளா? ஏன் நமது தமிழ்தேசிய அரசியல்வாதிகள் இதையொரு மாபெரும் மனிதாபிமான பிரச்சனையாக கருத்தில் எடுக்கவில்லை?

### வாகரைப் பிரதேசமும் அதன் சிறப்பம்சங்களும்

கிழக்குமாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குத் திசையில் உயிர்ப்பல் வகைமைகளுடன் கூடிய காட்டு வளங்களையும், நீண்ட கடல் வளத்தையும், சதுப்புநிலக் கண்டல்காடுகளையும் கொண்ட இயற்கையானதும் பரந்ததுமான நிலப்பரப்பாக வாகரைப் பிரதேசம் விளங்குகின்றது.

இலங்கையின் வரலற்றுப்போக்கில் இடம் பெற்ற மனிதசமூகங்களின் உருவாக்கம், வளர்ச்சிமற்றும் குடிப்பரம்பலுக்கமைய வாகரைப் பிரதேசத்தில் உருவான சமூகங்கள் அனைத்தும் இப்பிரதேசத்தில் இயற்கையின் சமநிலைகளைக் குழப்பாமல் அதன் தன்மைகளுக்கேற்ற விதமாகத் தமது வாழ்வியல் நடைமுறைகளை வகுத்துத் தமது பண்பாடுகளைக் கட்டமைத்து வாழ்ந்து வந்துள்ளமையினை அறிந்துகொள்ள முடிகின்றது. இயற்கைதரும் வளங்களை நிலைத்து நிற்கும் தன்மையுடன் தமது வாழ்வுக்கான ஆதாரங்களாக்கிக் கொள்ளும் பொருளியல் பண்பாட்டினை வாகரையின் பெரும்பாலான மக்கள் காலங்காலமாகக் கடைப்பிடித்து வருகின்றார்கள்.

அதாவது வாகரைக் கண்டல் நிலங்களில் உற்பத்தியாகும் இறாலையும் நண்டையும் பூண்டோடுஅழிக்காமல் அவற்றின் நிலைபேற்றை உறுதிப்படுத்தும் வகையிலான மீன்பிடி தொழில்நுட்பத்தையும் பொறிமுறைகளையுமே பயன்படுத்தி வருகின்றார்கள். காடுகளில் தேனீக்களை அழிக்காமல் தேன் எடுக்கும் நுட்பங்களைக் கடைப்பிடிக்கின்றார்கள், ஒவ்வொரு வருடமும் காட்டுப்பழங்கள் கிடைக்கும் விதத்தில் பழம் பறிக்கும் வித்தைகளைக் கண்டுவைத்துள்ளார்கள்.

இதன் காரணமாகவேதான் வருடந்தோறும் தடையில்லாமல் பருவகாலங்களில் விதம் விதமான பூக்களிலிருந்து வரும் வாகரை தேனையும், இறால், நண்டு, மீன்களையும், காட்டுப்பழ வகைகளையும் பெறக்கூடியதாக இருக்கின்றது. இவை மனித உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்காத பருவகாலங்களில்



கிடைக்கும் நஞ்சற்ற உணவு வகைகளாகவும் (மருந்தாகவும்) இருக்கின்றன.

இயற்கையுடன் ஒன்றித்த வகையில் வாகரைப்பிரதேச மக்கள் பொருளாதாரப் பொறிமுறைமைகளையும், தொழில்நுட்பங்களையும் வகுத்து அதனைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிப்பதனால் அவர்கள் சுயசார்பான பொருளாதாரப் பலங்கொண்ட மனிதர்களாக வாழ்கிறார்கள்.

சுயசார்பான பொருளியல் பண்பாட்டின் பலத்தால்தான் இங்குவாழும் தமிழர்கள் வருடாவருடம் கதிரவெளியில் வதனமார் சடங்கையும், பால்சேனையில் பெரிய சாமியின் சடங்குவிழாவினையும், அம்பந்தனா வெளியில் புலிக்கூத்தையும், வாகரையில் வடமோடிக்கூத்தினையும் சமூகவிழாக்களாகக் கொண்டாடுகிறார்கள்.

மக்களின் வாழ்க்கை, தொழில்முறை, வாழ்வாதாரமுறை, பண்பாடு எதையும் கவனத்தில் கொள்ளாமல் இறால்பண்ணை திட்டம் ஆரம்பிக்கப்படுவதை அவர்கள் தெளிவாக எதிர்க்கிறார்கள்.

சுயசார்பை இல்லாதொழிக்கும் நவீன பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் :

இன்றைய நவீன உலகில் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் மிகப் பெரும்பாலானவை சுயசார்பான வாழ்வியலை, சுயசார்பான பொருளாதாரப் பண்பாடுகளை இல்லாதொழிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. உலகமயமாக்கலில் சிறுசமூகங்களின் பொருளாதார அடையாளங்கள் கரைந்து கொண்டு செல்கிறது.

வேலைவாய்ப்பு, அதிகவருமானம், மிகையான அபிவிருத்தி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பெரியதிட்டங்களிற்காக விலை கொடுத்தவர்கள் திட்டபிரதேசத்து மக்கள். திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும் பிரதேசத்து மக்கள் அந்நிலத்திற்குச் சொந்தமில்லாதவர்களாகவும், கையேந்தும் மனிதர்களாகவும் மாறியுள்ளனர்.

இத்தகைய மெகா திட்டங்களில் உழைப்பவர், விவசாயிகளிடமிருந்த நிலம் பெரு முதலாளிகளிடம் கைமாறிய துயரமே நடக்கிறது. பொதுமக்களின் சொத்துக்கள் தனிநபர்களின் சொத்துக்களாக மாறி விடுகின்றன. இந்தியாவில் நர்மதை ஆற்றை நம்பிவாழும் மக்களுக்காகப் போராடும்செயற்பாட்டாளர் அருந்ததிராய் கூறியுள்ள கூற்று இச்சந்தர்ப்பத்தில் கவனிக்கத் தக்கதாகவுள்ளது. "இந்தியக் குடிமக்களின் பசியையும் பட்டினியையும் நர்மதா அணைக் கட்டு போக்கிடுமென அரை நூற்றாண்டுக்கு மேலாக நம்பிக் கொண்டோம். ஆனால் நடந்தது என்னவோ எதிர் நிலைதான்"என்கிறார்.

அமெரிக்க அரசின் பொருளாதார நிபுணராக செயலாற்றிய 'ஜோன்பேகின்ஸ்' என்பவர் எழுதியுள்ள (தமிழிலும் வந்துள்ள) 'ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்' நூலில் உலகிலுள்ள சுயசார்பான பொருளியல் பண்பாடுகள் எவ்வாறு அதிக வேலைவாய்ப்பு, அதிகவருமானம் எனும் பெரிய அபிவிருத்தித்திட்டங்கள் மூலமாக இல்லாதொழிக்கப்படுகின்றன என்பதை பதிவுசெய்துள்ளார்.

பெரிய விவசாய அபிவிருத்தி திட்டங்களால் இயற்கைச்சூழலை பெரிதும் மாசடைய வைத்துவிட்டது. பெரும் பணச்செலவுடன் ஆரம்பிக்கப்படும் திட்டங்களில் இலாப நோக்கமே முதன்மையானது. மரபணுமாற்றம், மிதமிஞ்சிய இரசாயனப் பாவனை என்பன தங்குதடையின்றி பயன்படுத்தப்படும். இப்படி விளைவது இயற்கையான விளைச்சல் அல்ல.

இருபதாம் நூற்றாண்டை இரசாயனப் புரட்சி நூற்றாண்டாக விஞ்ஞானிகள் வாழ்த்தலாம். ஆனால் இதில் மகிழ்ச்சியடைய ஒன்றுமேயில்லை. போர்க்காலத்தில் அமோனிய விசவாயுவால் மனிதர்கள் கணப்பொழுதில் இறந்தார்கள். அமைதிக் காலத்திலும் அமோனியத்துடன் வேறுபல விசங்களும் சேர்ந்து விவசாயத்தில் அறுவடைக்கு முன்பும் அறுவடைக்குப் பின்னர் உணவிலும் கலந்து மனிதர்களை நிரந்தர நோயாளர்களாக்கிவிட்டது. விசம் வென்று வருகிறது. மனிதர் தோற்றுவிட்டனர் என்று இயற்கை விஞ்ஞானி ஆர்.எஸ். நாராயணன் ஆதங்கப்பட்டது இதனைத்தான்.


விவசாய, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த உலகளாவிய படிப்பினைகளுடன் வாகரைப் மக்களின் இறால் பண்ணைக்கு எதிரான போராட்டத்தையும் அணுக வேண்டும்.

உண்மையான தேசவிடுதலை என்பது, தேசத்தில் வாழும் மனிதர்களின் சுயசார்பான பொருளியல் பண்பாட்டின் நிலையான இருப்பினூடாகவேதான் சாத்தியமாக முடியும். வாகரை மக்களின் இறால் பண்ணைக்கு எதிரான போராட்டம் என்பது தமிழ்தேசிய விடுதலைக்கு வளம் சேர்க்கும், வலுவூட்டும் ஒருமக்கள் போராட்டமாகவே வெளித்தெரிகின்றது. இத்தகைய புரிதல் நமது தமிழ் தலைமைகளிடத்தில் இல்லையென்றால் நாம் தேசியவிடுதலைப் போராட்டத்தில் தோற்றுக் கொண்டிருக்கின்றோம் என்றுதான் அர்த்தங் கொள்ளவேண்டும். ●





▶ கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரி உயர்தர உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் கல்வி பயிலும் ஏ,எம், முஹம்மட் சவ்பாத் என்ற மாணவன் சூரிய சக்தி மூலம் இயங்கக்கூடிய இரசாயன விசிறல் இயந்திரமொன்றை கண்டுபிடித்துள்ளார். கழிவு பொருட்களை கொண்டே இதனை தயாரித்துள்ளார்.



# விரதங்களும் அவற்றின் பலன்களும்

இந்துக்களின் வாழ்வில் விரதங்கள் தவிர்க்க முடியாதவை. மனதையும், உடலையும் ஒருநிலைப்படுத்தி நல்லவற்றை நினைத்து. நல்லவற்றை செய்து இறைவனை வேண்டும் விரதங்களிற்கு உரிய பலன் கிட்டுமென்பது இந்துக்களின் நம்பிக்கை. அப்படியான சில விரதங்களும், அவற்றின் பலன்களும் இதோ.

**சோமவார விரதம்:**

**நாள்:** கார்த்திகை மாத திங்கள்கிழமைகள்

**தெய்வம்:** சிவபெருமான்

**விரதமுறை:** இரவு மட்டும் சாப்பிட வேண்டும். முடியாதவர்கள் மட்டும் காலையிலும் சாப்பிடலாம்.

**பலன்:** திருமணமாகாதவர்களுக்கு தகுந்த வாழ்க்கை துணை, திருமணமானவர்களுக்கு தகுந்த வாழ்க்கை

**சிறப்பு தகவல்:** கணவன், மனைவி இருவரும் இணைந்து சிவாலயம் சென்று வருவது மிகவும் நல்லது.

**பிரதோஷம்:**

**நாள்:** தேய்பிறை, வளர்பிறை திரயோதசி திதிகள்.

**தெய்வம்:** சிவபெருமான், நந்திதேவர்

**விரதமுறை:** சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் ஏதாவது ஒன்றில் வரும் சனிப் பிரதோஷம் முதலாக தொடங்கி வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிக்க வேண்டும். பகலில் சாப்பிடக்கூடாது. மாலை 4.30 மணிக்கு நீராடி, சிவாலயம் சென்று வணங்கி, பிரதோஷ காலம் கழிந்தபிறகு சிவனடியார்களுடன் இணைந்து சாப்பிட வேண்டும்.

**பலன்:** கடன், வறுமை, நோய், அகால மரணம், பயம், அவமானம் ஏற்படுதல், மரண வேதனை ஆகியவற்றிலிருந்து விடுதலை, பாவங்கள் நீங்குதல்.

**சிறப்பு தகவல்:** பிரதோஷ நேரத்தில் சாப்பிடுதல், தூங்குதல், குளித்தல், எண்ணெய் தேய்த்தல், விஷ்ணு தரிசனம் செய்தல், பயணம் புறப்படுதல், மந்திர ஜபம் செய்தல், படித்தல் ஆகியவை கூடாது.

**சித்ரா பவுர்ணமி விரதம்:**

**நாள்:** சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம்

**தெய்வம்:** சித்திரகுப்தர்

**விரதமுறை:** இந்நாளில் இரவில் மட்டும் சாப்பிட வேண்டும். காலையில் பிதுர் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

**பலன்:** மறைந்த முன்னோர் பாவம் நீங்கி பிறப்பற்ற நிலையை எய்துவர்.

**தை அமாவாசை விரதம்:**

**நாள்:** தை அமாவாசை

**தெய்வம்:** சிவபெருமான்

**விரதமுறை:** காலையில் சாப்பிடாமல் முன்னோருக்கு தர்ப்பணம் செய்தல்

**பலன்:** முன்னோர்களுக்கு முக்தி, குடும்ப அபிவிருத்தி

**சிறப்பு தகவல்:** பிற அமாவாசைகளில் தர்ப்பணம் செய்ய முடியாதவர்கள், இன்று அவசியம் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

**கந்தசஷ்டி விரதம்:**

**நாள்:** ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரை 6 நாட்கள்

**தெய்வம்:** சுப்பிரமணியர்

**விரதமுறை:** முதல் 5 நாட்கள் ஒருபொழுது சாப்பாடு. கடைசிநாள் முழுமையாக பட்டினி, சூரசம்ஹாரம் முடிந்தபிறகு வாழைப்பழம், சிறிதளவு மிளகு சாப்பிட்ட பின், மாம்பழச்சாறு, பால், பானகம் இவற்றில் ஏதாவது ஒன்று அருந்துதல்.

பலன் : குழந்தைப்பேறு

**தைப்பூச விரதம்:**

**நாள்:** தை மாத பூச நட்சத்திரம்

**தெய்வம்:** சிவபெருமான்

**விரதமுறை:** காலையில் மட்டும் சாப்பிடக்கூடாது.

**பலன்:** திருமண யோகம்

**சிவராத்திரி விரதம்:**

**நாள்:** மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி திதி

**தெய்வம்:** சிவன்

**விரதமுறை:** மூன்று வேளையும் சாப்பிடாமல் இருப்பது நல்லது. தண்ணீர் அல்லது பால் குடிப்பது மத்திமம். முடியாதவர்கள் பழம் சாப்பிடலாம். உடல் நிலை சரியில்லாதவர்கள் மட்டும் இட்லி முதலான சாத்வீக உணவு வகைகளை சாப்பிடலாம். இரவில் சிவாலயத்தில் தங்கி நான்கு ஜாம பூஜையிலும் பங்கேற்க வேண்டும்.

**பலன்:** நிம்மதியான இறுதிக்காலம்

**திருவாதிரை விரதம்:**

**நாள்:** மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரம்

**தெய்வம்:** நடராஜர்

**விரதமுறை:** பிரசாதக்களி மட்டும் சாப்பிடலாம்.

**பலன்:** நடனக்கலையில் சிறக்கலாம்

**சிறப்பு தகவல்:** காலை 4.30க்கு நடராஜர் திருநடன தீபாராதனையை தரிசித்தல்.

**கேதார விரதம்:**

**நாள்:** புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி முதல் தேய்பிறை சதுர்த்தசி வரை 21 நாட்கள் அல்லது தேய்பிறை பிரதமை முதல் சதுர்த்தசி வரை 14 நாட்கள் அல்லது தேய்பிறை அஷ்டமி முதல் சதுர்த்தசி வரையான 7நாட்கள். இதுவும் முடியாதவர்கள் தேய்பிறை சதுர்த்தசி நாள் மட்டும்.

**தெய்வம்:** கேதாரநாதர்

**விரதமுறை:** ஆண்கள் 21 இழையால் ஆகிய காப்பை வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொள்ள வேண்டும். முதல் 20 நாள் ஒருபொழுது உணவு, கடைசி நாள் முழுவதும் உபவாசம் உடல்நிலை சரியில்லாதவர்கள் உப்பில்லாத உணவு சாப்பிடலாம்.

**பலன்:** தம்பதிகள் நீண்டநாள் வாழ்வர்

**விநாயகர் சஷ்டி விரதம்:**

**நாள்:** கார்த்திகை மாதம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டி வரை 21 நாட்கள்

**தெய்வம்:** விநாயகர்

**விரதமுறை:** ஆண்கள் 21 இழையால் ஆகிய காப்பை வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொள்ள வேண்டும். முதல் 20 நாளும் ஒருபொழுது மட்டும் சாப்பிட்டு கடைசிநாள் முழுமையாக பட்டினி இருக்க வேண்டும்.

**பலன்:** சிறந்த வாழ்க்கைதுணை, புத்திசாலியான புத்திரர்கள் பிறத்தல்.

**முருகன் சுக்ரவார விரதம்:**

**நாள்:** ஐப்பசி மாதம் முதல் வெள்ளி துவங்கி மூன்று ஆண்டுகள் வரை அனுஷ்டிக்க வேண்டும்.

**தெய்வம்:** சுப்ரமணியர்

**விரதமுறை:** பகலில் ஒருபொழுது உணவு, இரவில் பழம் மட்டும் சாப்பிட வேண்டும்.

**பலன்:** துன்பம் செய்தவருக்கும் நன்மை செய்யும் மனம் கிடைக்கும்.

**கிருத்திகை விரதம்:**

**நாள்:** கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் தொடங்கி, ஒவ்வொரு மாதம் கார்த்திகை நட்சத்திரத்திலும் அனுஷ்டிப்பது. தொடர்ந்து 12 ஆண்டுகள் அனுஷ்டிக்க வேண்டும்.

**தெய்வம்:** சுப்பிரமணியர்

**விரதமுறை :** பகலில் பட்டினி கிடந்து இரவில் பழம், இட்லி சாப்பிடலாம்

**பலன்:** 16 செல்வமும் கிடைத்தல்

**நவராத்திரி விரதம்:**

**நாள்:** புரட்டாசி மாத வளர்பிறை பிரதமை முதல் நவமி திதி வரை

**தெய்வம்:** பார்வதிதேவி

**விரதமுறை:** முதல் 8 நாள் பழம், இட்லி உள்ளிட்ட சாத்வீக உணவு சாப்பிடலாம்.

**பலன் :** அனைத்து விதமான சுகங்களும் கிடைக்கும்

## விரதத்தின் போது பலகாரங்கள் சாப்பிடலாமா?

விரத காலத்தில், வெறும் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் இருப்பதே உயர்வானது. அப்படி இருக்க இயலாதவர்கள் பாலும் பழமும் அருந்தலாம். சமஸ்கிருதத்தில் "ஃபல்" என்றால் பழம் என்று பொருள்படும். "ஆஹார்" என்பது ஆகாரம் அல்லது உணவு என்பதாகும். "ஃபல் + ஆஹார்" = பலஹார் என்று ஆகிறது. பழத்தை உணவாகக் கொள்வதே பலகாரம் என்பதாயிற்று. இதற்குப் பதிலாக சோறு தவிர்த்த பலவித ஆகாரங்களைச் சாப்பிடுவது தான் "பலகாரம்' என்ற சொல்லின் பொருளாக இக்காலத்தில் கருதப்படுகிறது. இது தவறு. இது உண்மையான விரதம் ஆகாது. ஜீரண உறுப்புகளுக்கு ஓய்வு கொடுத்து, உடலைப் புதுப்பிப்பதே இறை விரதத்தின் நோக்கமாகும். எனவே சிற்றுண்டிகளைச் சாப்பிட்டு விரதம் இருப்பதை விட, பழங்களையும் பாலையும் மட்டும் அருந்தி இறைவனை நினைத்து விரதம் இருப்பதே சிறந்த விரதம் ஆகும்.

# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 3



குப்பிளான் ஐ.சண்முகன்

நானும் மனைவியும் படகுப் பயணத்திற்குப் பிறகு, மறுகரையில் (பூநகரிக்கரை) தொடர்ந்த பயணத்திற்கான வாகனத்திற்காகக் காத்திருந்த நேரம் கூட்டம் அதிகமானதால் அன்று நீண்ட நேரம் காத்திருக்க நேர்ந்தது. கிளாலியிலும் நீண்ட வரிசையில் நின்று படகேறியதும் ஞாபகத்திற்கு வந்தது. தோளில் சிறிய கைப்பையை கொளுவிக் கொண்டும், கையில் பெரிய 'வாய்க்'கைத் தூக்கிக் கொண்டும், நீண்ட நேரம் நின்றதால் உடம்பெல்லாம் வலித்தது. ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்ட சிறிது ஆசுவாசப்படுத்தலாம் என்று உட்கார்ந்தோம். பசித்தது. கைப்பையை திறந்த போது இருவருக்கும் ஒன்றாகவே பொதி செய்து கொண்டு வந்த "பெரிய" உணவுப் பார்சலைக் காணவில்லை. பசி பறந்திட பதற்றத்துடன் மற்றைய 'வாய்க்'குகளையும் திறந்து கிளறினோம். பெறுமதியானது எல்லாம் வைத்தது வைத்தபடி பத்திரமாக இருக்க உணவுப் பார்சல் மட்டுமே கையாடப்பட்டிருந்தது.

பதட்டம் மறைய பசி வயிற்றை முடுக்கியது. நல்லெண்ணையில் பெரித்த வெங்காயப் பொரியல் போட்டுக் கட்டப்பட்ட இடியப்பப் பார்சல் நினைவில் வந்து வந்து வாயூற வைத்தது. தொடர்ந்த பயணம் முழுவதும் இடையிடையே நினைவில் வந்து மறைந்தது. இதன் பிறகு எத்தனையோ வகை வகையான சுவையான உணவுகளை உட்கொண்ட போதிலும் இன்று வரையும் மறக்க முடியாத அவ் அவ் பொழுதுகளில் நினைவில் வருகின்ற கையாடப்பட்ட இடியப்பப் பார்சலின் நினைவு.

இந்தக் கதையை சொல்கின்ற போதில் நினைவிற்கு வருகின்ற இன்னொரு கதையையும் சொல்லத்தான் வேண்டும். இருபத்தைந்து முப்பது வருடங்களுக்கு முன்பு நானும் எனது நண்பரொருவரும் கொழும்பில் சிறிய அறையொன்றில் குடித்தனம் செய்தோம். குடித்தனம் என்றால் தயவு செய்து வேறொன்றையும் யோசித்து விடாதீர்கள். (இந்தக் காலத்தில் இதையும் சொல்லிவிட வேண்டியிருக்கின்றது.) நாங்களாகவே சமைத்துச் சாப்பிட்டு உத்தியோகத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தோம். மாதத்திற்கு ஒரு முறை ஊரிலிருந்து கொழும்பிற்கு "லொறி" வருகின்ற போதுகளில் நண்பனுக்கு மணக்க மணக்க பொரியல் வகைகள் வரும். அவனும் அவனுடைய இரண்டொரு நண்பர் குழாமும் சேர்ந்து, அறையில் (நான் பார்த்துக் கொண்டிருக்க) சப்புக் கொட்டி சாப்பிடுவார்கள். தாவர பட்சினியான நான் மணம் தாங்க முடியாமல் அருவருப்பால் முகத்தைச் சுழிக்கக் கூடும். அதனை நண்பனுடைய நண்பன் அவதானித்திருக்கவும் கூடும். அவன் என்னைப் பார்த்துச் சொன்னான். "நீ மனிசராய் பிறந்து என்னத்தை அனுபவிக்கின்றாய்? நாக்கில் தண்ணீர் வர, கண்ணில் சாடையாய் கண்ணீர் வர இந்த ருசிகளை எல்லாம் அனுபவிக்கத் தெரியாத நீ மனுசனாய் பிறந்து எந்த பிரியோசனமும் இல்லை."

இப்போது எங்கோ தொலைதூர வெளி நாட்டில் பணிபுரிகின்ற எனது நண்பன் ஊருக்கு வந்த போது கதையோடு கதையாக என்னைப் பற்றி இவ்வாறு பிரகடனம் செய்த அவனது மற்ற நண்பனைப் பற்றி விசாரித்தேன்.

'வெளிநாட்டில் எங்கோ "தக்காளிப்பழம்" வெட்டுறானாம்.'

பொருத்தமான தொழிலென்று மனதில் நினைத்துக் கொண்டேன்.

* * *

தொடர்ந்த பயணத்தில் மாங்குளத்திலோ, புளியங்குளத்திலோ பிரதான சாலையிலிருந்து சற்று உள்ளே தள்ளி காட்டின் நடுவில் அமைக்கப்பட்டிருந்த இரவுத் தரிப்பிடத்தில் தங்கி ஆசுவாசப்படுத்தி அங்கிருந்த உணவுச் சாலையில் பனிசும் தேனீரும் அருந்தும் மட்டும் வயிறு முருகிக் கொண்டேயிருந்தது.

ஒருவாறு வவுனியா நகரிற்கான இராணுவ செக்பொயின்றை வந்தடைந்தாயிற்று. இடையில் எங்கேயே இரு பகுதியினருக்குமிடையிலான செக்பொயின்றிற்கிடையில் டபிளாயும், றிபிளாயும் பொரிசுகளுடன் சைக்கிள்களில் பயணித்த ஞாபகமுண்டு. பயண ஆரம்பத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள்களிலும் பார்க்க பயங்கரமான திகிலான சைக்கிள் பயணங்கள் இவை.

நெளிந்து வளைந்த காட்டுப் பாதையில் கையிலும், தலையிலும் பொதிகளைச் சமந்து கொண்டு (இளம் வயதில் ஊரில் நார்க்கடகத்தில்தலையில் தோட்டத்திற்கு எரு சுமந்த மாதிரி) மழை பெய்த சேற்றில் கால்கள் புதையப் புதைய நடந்து மரவேரில் தடக்கி நிதானித்து நிமிர்ந்த போது தூரத்தில் கையில் துப்பாக்கியுடன் தெரிந்த இராணுவ வீரன். திடீரெனக் கவிந்த அமைதியில் ஒருவர் பின் ஒருவராக பவ்வியமாக நடந்து சென்று மாமூலான உடல் பொதிப் பரிசோதனைக்குப் பிறகு அப்பால் நின்ற அதிகாரியில் ஏதோவொரு விசாரணைக்குப் பிறகு ஒரு மைதானத்திற்குள் பிரவேசம்.


நூற்றுக்கணக்கான சனங்கள் கூடியிருந்த மைதானத்தில் ஆங்காங்கே கையில் கொட்டன் கொட்டன்களுடன் பாதுகாப்புத் தரப்பினர் ஏதோதோ கேட்டுக் கைகளை உயர்த்தி சத்தமாகக் கதைத்த எங்கள் தாய்க்குலத்தவர் இரண்டொருவருக்கு கொட்டனடி விழுந்ததையும் கண்டேன். ஒருவாறு சில யுத்திகளைக் கையாண்டு வவுனியா நகருக்கு நுழைவதற்காக "பாஸை" பெற்றுக் கொண்டு வெளியேற முடிந்தது.

வவுனியாவில் நண்பனின் வீட்டில் இரண்டு மூன்று நாட்கள் தங்கி பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து அலுவல்கள் பார்த்து கொழும்பில் இரண்டு. மாதம் தங்குவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டு புகையிரதத்தில் கொழும்பு போய்ச் சேர்ந்தோம். கொழும்பில் இரண்டு மாதத்திற்குள் முடியுமென நினைத்திருந்த வேலை முடியாமல் மேலும் நாட்கள் இழுபட்டது. கொழும்பில் தரிப்பதற்காக தரப்பட்ட பாஸில் இரண்டை எதுவித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் மூன்றாக வாசிக்க முடியச்செய்த கடவுளுக்கு நன்றி.


**பிற் குறிப்பு:** இந்த சொல்லப்பட்ட கதைக்குள் சொல்லப்படாத சேதிகள் ஏராளம். அவற்றுள் சிலவற்றையாவது சுருக்கமாகச் சொல் சொல் என மனது அடித்துக் கொள்கின்றது.

01. யாழ்ப்பாணத்து மோட்டார் சைக்கிள் எல்லாம் மண்ணெண்ணையில் ஓடுதாம். எனக்கு ஒன்றை பெற்றுத் தர உதவி செய்ய முடியுமா? எனக் கேட்ட இராணுவ வீரன்.
02. வவுனியாவில் எழுந்தமானமாகத் தேர்ந்தெடுத்த யாழ்ப்பாணத்துப் பயணிகளை மறித்து, உள்ளூர் நிலவரங்களை விசாரித்தறிய முற்பட்ட மாற்றுக் குழுவினர். அவர்களிடம் அகப்பட்டு முழுசிக் கொண்டிருந்த எனது மனைவி சமயோசிதமாக அவர்களுடன் உரையாடி மீண்ட சாகசம். (சாகசம் என்று சொல்லலாமா?)
03. பயணங்களில் பொதிப் பரிசோதனையில் அங்குமிங்குமாக அலைந்த போது மாறி எடுத்துச் செல்லப்பட்ட பொதிகள். ஒருமுறை எனது பொதியும் அவ்வாறு மாறிய போது கலைத்துப் பிடித்த நினைவுகள். உதவி செய்த எனது பழைய மாணவன்.
04. கொழும்பிலிருந்து ஊருக்கு திரும்பிவந்த பயணமொன்றில் மழை பெய்து கொண்டிருந்த அதிகாலைப் பொழுது. மோட்டார் சைக்கிள் பயணத்தில் தூங்கி விழுந்து மோட்டார் சைக்கிள் ஓட்டியிடம் சரியாக ஏச்சு வாங்கிய பரிதாபகரமான அனுபவம்
05. கடற்பயண நடுவழியில் எத்தகைய பயங்கர காற்றுக்கும் மழைக்கும் அணையாது எரியும் அதிசயமான பெருஞ்சுடர் விளக்கு.
06. பயணப்பாதைதடையால்கிளிநொச்சியில் பராமரிப்பற்ற கோயிலிலும் அதன் பரந்த அரசமர நிழலிலும் கழிந்த இரவுப்பொழுது. தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் கைவிடப்பட்டவர்களாய் நகரில் அலைந்த நினைவுகள்.
07. பூநகரிக் கரையில் படகில் ஏறுவதற்காக பயணச்சீட்டைப் பெறுவதற்காகக் காத்திருந்த சலிப்பூட்டும் தருணங்கள்.
08. பயணிகளின் பொதிகளின் பருமனுக்கு ஏற்ப உத்தேசமாக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள். பண நோட்டுக்கள் உரச் சாக்குகளிலும் வேறு பைகளிலும் அடைத்து அடைத்து சேகரிக்கப்பட்ட காட்சிகள்.

(தொடரும்)







▶ கனகராயன் குளத்தில் இந்து ஆலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த புத்தர்சிலை மர்ம நபர்களால் சேதமாக்கப்பட்டிருந்தது. தற்போது இராணுவத்தால் புனரமைக்கப்பட்டு பலத்த காவலிடப்பட்டுள்ளது.



# தூக்குமேடையில் நிற்கும் மட்டக்களப்பு

✎ நிலாவினி

மட்டக்களப்பில் அண்மைய வருடங்களில் அதிக கொலை, தற்கொலை சம்பவங்கள் பதிவாகி வருவது பெரும் அச்சத்தை கிளப்பியுள்ளது. யுத்தத்தின் பின்னான காலத்தில் சடுதியாக அதிகரித்துள்ள இந்த போக்கிற்கு என்ன காரணம்? இதனை எப்படி தடுக்கலாம்? இந்த இரண்டு கேள்விகளிற்கும் அவசரமாக விடை கண்டுபிடிப்பது அவசியமானது.

யுத்தத்தின் பின்னான காலத்தில் உளநெருக்கடிகள் காரணமாக கொலை, தற்கொலை அதிகமாக காணப்படும், நாளடைவில் எல்லாம் சரியாகிவிடும் என்பதை போன்ற கருத்துக்களும் வராமலில்லை. ஆனால், இந்தப்பதிலை கேட்டு கடந்து செல்லும் விவகாரமல்ல இது. இவற்றிற்கான காரணங்களை கண்டறிந்து, தடுப்பு நடவடிக்கைகளை அவசரமாக ஆரம்பிக்க வேண்டும்.

கொலை, தற்கொலை விவகாரத்தில் பெண்கள்தான் அதிகமாக சம்பந்தப்படுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பெண்களிற்கு எதிரான வன்முறைகளின் வளர்ச்சிதான் இந்த அனர்த்தங்கள் என நம்பும் விதமான சம்பவங்கள் இவை.

யுத்தகாலத்து உளநெருக்கீடு, வாழ்க்கை சவால்கள் சாதாரண மனநிலையிலிருந்து மனிதர்களை பிறழ வைக்கலாம். மன அழுத்தம், குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, பொருளாதார சிக்கல் போன்றன ஒருவரை தற்கொலைக்கு தூண்டலாமென்பது பொதுவான ஆய்வு முடிவுகள்.

பிரெஞ்சு சமூகவியலாளர் எமிலி டர்க்கைம் 19ஆம் நூற்றாண்டில், தற்கொலைக்கான கலாச்சார, சமூகவியல் காரணங்களை முதலில் ஆய்வுசெய்தார். அவர் அதை மூன்றுவகையாகப் பிரித்தார். சமூகரீதியாகத் தனிமைப்படுத்தப்படும் நபர் தனது ஈகோவை நிலைநாட்ட மேற்கொள்வது முதல்முறை. இரண்டாவது பொதுநலநோக்கில் தற்கொலை செய்வது. அது போர்களில் வீரர்கள் நாட்டுக்காக உயிர்துறப்பதற்கு ஒப்பானது. நெறிபிறழாமல் நல்ல முறையில் நடக்கும் ஒரு மனிதரின் வாழ்வில் ஏற்படும் தாறுமாறான குளறுபடிகளால் ஏற்படும் சீர்குலைவால் செய்துகொள்ளும் தற்கொலை மூன்றாவது வகை எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்கொலை செய்யும் முடிவை எடுப்பவர்கள் தங்கள் தற்கொலை மூலம் பழிவாங்கல், வலியிலிருந்து தப்பிப்பது, மீட்பு, தியாகம்போன்றவிடயங்கள் நிறைவேறுவதாக நம்புவதாகத் தற்காலச் சமூக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். நாம் வாழும் கலாச்சாரச் சூழலுடன் தொடர்புடைய உயிரியல், மரபியல் மற்றும் சமூகக் காரணிகள் தாம் இந்தக் கற்பனைகளை விளைவிக்கின்றன.

உலக சுகாதார அமையம் வெளியிட்டிருந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பான அறிக்கையொன்றில் உலகின் 172 நாடுகளில் தற்கொலை செய்து கொள்வோர் பட்டியலில் இலங்கை நான்காவது இடத்தில் இருப்பதாக வெளியிட்டிருந்தது. மேலும் சர்வதேச ரீதியாக ஒரு இலட்சம் பேருக்கு 11.4 பேரே தற்கொலை செய்து கொள்வதுடன், இலங்கையில் ஒரு இலட்சம் பேருக்கு 28.8 தற்கொலை மரணங்கள் இலங்கையில் சம்பவித்திருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வருடாந்தம் உலகில் சராசரியாக 8 இலட்சத்துக்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்கின்றனர். பதிவாளர் நாயகத்தின் அலுவலகப் புள்ளிவிபரத்தின் பிரகாரம் 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்த போது தற்கொலை வீதம் 1 இலட்சம் பேருக்கு 9 பேராக இருந்தது. 1970 களில் இத்தொகை 1 இலட்சம் பேருக்கு 19 ஆக அதிகரித்தது. 1980 களின் நடுப்பகுதியில் 1 இலட்சம் பேருக்கு 33 பேராக அதிகரித்திருந்தது. அதன் பின்னர் இந்தப் போக்கே தொடர்ந்து இருந்து வருகிறது.

மனித வாழ்க்கை ஒரு வரமென்பதை ஒவ்வொரு மனிதர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த செய்தியை ஒவ்வொரு மனிதனின் காதருகேயும் எடுத்து செல்ல வேண்டியது அரசு, அதிகாரிகள், தொண்டு நிறுவனங்களின் பணி. வருடாவருடம் தற்கொலை, கொலை புள்ளிவிபரங்களை வெளியிட்டுக் கொண்டிருப்பதல்ல அவர்கள் பணி.

யுத்தத்தின் பின்னான உளநெருக்கீடுகளிலிருந்து சேதாரமில்லாமல் சமூகத்தை மீட்டெடுப்பது அவசியமான பணி. ●

## 2015ம் ஆண்டின் பின்னான கொலை சம்பவங்கள் சில

2015. மே. மண்டூர் 1 ஆம் பிரிவில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து 43வயதினையுடைய சமூகசேவை உத்தியோத்தர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

2015. ஒகஸ்ட். பிள்ளையாரடியைச் சேர்ந்த 24வயதினை உடைய பெண் கொலைசெய்யப்பட்டார்.

2015. ஒகஸ்ட். வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள வம்மியடி ஊற்று 40ஆம் கட்டைக் கிராமத்தில் கோடரியால் கொத்தப்பட்டு 17வயதினையுடைய சிறுவன் கொலை செய்யப்பட்டான்.

2016. மே. களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுதாவளைக் கிராமத்தில் 46வயதினையுடைய ஒரு ஆண் அடித்துக் கொலைசெய்யப்பட்டார்.

2016. யூலை. வெல்லவெளிப் பொலிஸ் பிரிவிலுள்ள காக்காச்சிவட்டையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் அதிகாலை ஒரு மணியளவில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் எல்லோர் மனதையும் உலுக்கியிருந்தது. இதில் 24வயது இளம் தாய் 18மாதங்களே கொண்ட பச்சிளம் குழந்தை 56வயதினையுடைய முதியவர் என மூன்றுபேர் கொல்லப்பட்டனர்.

## 2015ம் ஆண்டின் பின்னான தற்கொலைகள் சில

2015 ஒக்டோபர். செங்கலடி ரமேஸ்புரத்தில் இரண்டு வயது குழந்தையின் தாய் ஒருவர் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார்.

2015.ஒகஸ்ட். கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோயில் வீதி ,சிவத்த போக்கடியை சேர்ந்த இருபது வயதுடைய தர்மலிங்கம் ஜனனி என்ற இளம் தாய் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

2016 பெப்ரவரி. திருப்பெருந்துறையில் 17வயதுடைய சிறுவன் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டான்.

2016.மே. களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழுகாமத்தில் 47வயதினையுடைய ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

2016 யூன். ஏறாவூர்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சந்திவெளி காட்டுப் பகுதிக்குள் இருந்து 25வயதான குடும்ப பெண் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டது.

2016 யூன். ஜெயந்திபுரம் விஜயபுரம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

2016.யூலை. கல்லடி பழைய பாலத்தில் இருந்து சுமார் 19 வயதுடைய இளைஞன் ஒருவர் ஆற்றில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்.





▶ ஒட்டமாவடி கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலளர் பிரிவில் செம்மண்ணோடை எம்.பி.சி.எஸ். வீதியில்புதிதாக கட்டப்பட்டு பூரணப்படுத்தப்படாத வீடு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.


# கை இழந்தும் கலங்காதவர்


முபாரக்

சாதாரண மனிதர்களை விடவும் உடற் குறைபாடுகளை உடையவர்கள் அதிசயிக்கும் வகையில் திறமைசாலிகளாக இருப்புதை நாம் அறிவோம்.அது அவர்களின் குறைகளை மறைப்பதற்காக இறைவன் அவர்களுக்குக் கொடுத்த பிரத்தியேக அருளாகும்.

உடலில் சிறிது குறைபாடு ஏற்பட்டுள்ள எத்தனையோ பேர் அதைக் காரணமாக் கொண்டு பிச்சையெடுத்து சோம்பறித்தனமாக வாழ்வதை நாம் காண்கிறோம்.ஆனால்,சிலர் அந்தக் குறைபாடுகளை வெற்றிகொண்டு தன் மானத்தோடு உழைத்து வாழ்கின்றனர். தமக்கு குறைகள் இருப்பதையே அவர்கள் மறந்துவிடுகின்றனர்.சாதாரண மனிதர் களை விடவும் அசாதாரண திறமை படைத்த







வர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.

அவ்வாறான ஒரு மனிதரை நாம் மட்டக்களப்பு மாவட்டம் புன்னைக்குடா கடற்கரையில் சந்தித்தோம்.அவர் இரண்டு கைகளையும் இழந்த 38 வயது நிரம்பிய மீனவர்.சாதாரண மனிதரை விடவும் மிகவும் திறமைசாலியான இவரைப் பற்றிக் கேள்விப்பட்டதும் அங்கு சென்று அவரைச் சந்தித்து உரையாடினோம்.

அவர் வழங்கிய சுவாரசியமான அதிசய மிக்க தகவல்களை நாம் எமது வாசகர்களுக்கு வழங்குகின்றோம்.

**கேள்வி; உங்களைப் பற்றியும் உங்களுக்கு இந்த அனர்த்தம் ஏற்பட்டமை பற்றியும் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?**

**பதில் :** எனது பெயர் விநாயகமூர்த்தி லோகேஸ்வரன்.வயது 38.நான் ஒரு மீனவன். எனது சொந்த இடம் கழுவாங்கேணி.எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.இந்தப் புன்னைக்குடா கடலில்தான் நான் தொழில் புரிந்து வருகின்றேன்.

1995 ஆம் ஆண்டு மீன் பிடிக்காகப் படகில் சென்றுகொண்டிருந்தபோது மர்மப் பொருளொன்று மிதந்து வந்தது.அதை நான் எடுத்ததும் அது வெடித்துச் சிதறியது. அதனுடன் சேர்ந்து எனது கைகளும் பறந்துவிட்டன.அது கன்னி வெட்டியெனப் பிறகு அறிந்தேன்.

அன்று முதல் இன்று வரை இரண்டு கைகளும் இல்லாமலேயே நான் வாழ்ந்து வருகிறேன்.இருந்தும்,எனது வேலைகளை நானே செய்து வருகிறேன்.பிறரின் உதவியை நாடவில்லை.

**கே:நீங்கள் இரண்டு கைகளையும் இழந்துள்ளபோதிலும்,கைகள் உள்ளவர் களை விடவும் மிகவும் திறமையாகச் செயலாற்றுவதாகக் கேள்விப்பட்டோம். அது பற்றிக் கூறமுடியுமா?**

ப:உண்மைதான்.மற்றவர்கள் பார்வையில் தான் நான் கைகள் இழந்தவன்.எனது பார்வை யில் அப்படி இல்லை.எனக்கு கைகள் இல்லை என்பதை நான் உணர்ந்ததே இல்லை.இரு கைகளும் உள்ளவர்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் நான் செய்கிறேன்.இன்னும் சொல்லப் போனால் அவர்களை விடவும் அதிகமாகவே செய்கிறேன் என்று சொல்லலாம்.

என்னால் மோட்டார் சைக்கிள் ஓட்ட முடியும்.படகைச் செலுத்த முடியும்.ஆடைகள் உடுத்த முடியும்.பாரம் தூக்க முடியும். வாயின் உதவியால் எழுத முடியும்.உணவு உண்ணமுடியும்.

நான்ஒருமீன்வாடியில்வேலைசெய்கிறேன். அங்குள்ள அனைத்து வேலைகளையும் நானே செய்கிறேன்.சுருக்கமாகச் சொல்லப் போனால் அந்த முதலாளி அவரது வேலைகள் அனைத்தையும் என்னிடமே ஒப்படைத்துள்ளார்.பதில் முதலாளி போலவே நான் செயற்படுகிறேன்.

கைகள் இல்லாவிட்டாலும் மிகவும் திறமையாககைகள் உள்ளவர்களை விடவும் நேர்த்தியாக என்னால் வேலை செய்ய முடியும் என்பதால்தான் அவர் முழுப் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

லொறிகளுக்கு மீன் பெட்டிகளை ஏற்றுவது,அவற்றில் இருந்து இறக்குவது, கணக்குகள் பார்ப்பது,வங்கிகளுக்குச் சென்று பணம் வைப்பில் வைப்பது,எடுப்பது என இந்தத் தொழிலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து வேலைகளையும் நானே செய்கிறேன்.

கே:உங்களுக்கு இப்படியொரு நிலைமை ஏற்பட்டமைக்காக நீங்கள் வருந்துவதுண்டா?

ஆரம்பத்தில் அந்த வருத்தம் இருந்தது.பிறகு கைகள் உள்ளவர்களைப்போல் என்னால் வேலை செய்யக்கூடிய ஆற்றல் வந்ததும் நான் வருந்துவதில்லை.இரண்டு கைகளும் இருப்பது போன்றே நான் உணர்கிறேன்.

என்னால் சுமார் 80 வீதமான பணிகளைச் செய்ய முடிகின்றது.ஆதலால் எனக்கு எதுவித வருத்தமும் இல்லை.


**கே:அந்த விபத்தின் பின்னர் உங்களின் தொழிலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா அல்லது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?**

ப:எனது தொழிலை இது பாதிக்கவில்லை. ஆனால்,முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது என்றே சொல்ல வேண்டும்.என்னிடம் மீனவத் தொழில் அனுபவம் நிறையவே இருப்பதால் பணம் இருந்தால் என்னால் இத்தொழிலில் முன்னேற முடியும்.ஒரு முதலாளியாக மாற முடியும்.

எனக்குத் தேவையாக இருப்பது மீன் ஏற்றக்கூடிய ஒரு வாகனம்தான்.அதை வாங்குவதற்கு யாராவது உதவி செய்தால் கைகள் இல்லாத நிலையிலும் என்னால் முன்னேற முடியும்.சாதித்துக் காட்ட முடியும். உடற்குறைபாடுகள் முன்னேற்றத்துக்குத் தடை இல்லை என்பதை என்னால் நிரூபிக்க முடியும்.

புலம்பெயர்ந்த தமிழர்களிடம் இருந்தோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தோ இந்த உதவியை நான் நாடி நிற்கின்றேன்.நல்லுள்ளம் படைத்தவர்கள் எனது முன்னேற்றத்துக்கு உதவ முன்வர வேண்டும்.

கைகள் இல்லை என்பதற்காக பிச்சை எடுத்து பிழைப்பு நடத்தமாட்டேன்.கைகள் இல்லாமலும் சாதிக்கமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டுவேன்.அதற்காக இந்த உதவிகள் எனக்குத் தேவைப்படுகின்றன. என்கிறார்.



▶ கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த வாரம் வெகு சிறப்பாக நடந்தது.



▶ மது மற்றும் புகைத்தல் பொருட்கள் மீதான அதிகரிக்கப்பட்ட வரியை உடனடியாக நடைமுறைப்படுத்தக் கோரி யாழ்ப்பாணம் ரு சங்கானை பஸ் தரிப்பிடத்தில் கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது.




பி.சியா

எங்கள் கல்வி நிலையத்திற்கு வாருங்கள். உங்கள் பிள்ளைகளை சரளமாக ஆங்கிலம் பேச வைக்கிறோம்... 9 ஏ எடுக்க வைக்கிறோம்... புலமைப்பரிசிலில் சித்திபெற வைக்கிறோம் என ஏராளம் விளம்பரங்களை அன்றாடம் பார்க்க கிடைக்கிறது. இப்படியான நிறுவனங்களில்த்தான் தமது பிள்ளைகளை படிப்பிக்க பெரும்பாலான பெற்றோர் விரும்புகிறார்கள். பரீட்சை பெறுபேறுகளால் பெருமையடைந்த காலம் போய், பிள்ளைகள் கல்விகற்கும் இடங்களால் பெற்றோர் பெருமைப்பட்டுக் கொள்ளும் காலம் உருவாகியுள்ளது.

நமதுநாடு பெருமைப்பட்ட விடயங்களில் முதன்மையானது இலவச கல்வி. ஆசியாவில் கல்வியறிவு வீதம் அதிகமுள்ள நாடுகளில் நமது நாடும் முன்வரிசையில் இருக்க இலவச கல்வியும் ஒரு காரணம். கல்வி பணம்படைத்தவர்களின் உரிமையல்லத்தானே.

ஆனால் இன்று கல்வி விரைவாக தனியார்மயமாகிக் கொண்டிருக்கிறது. பாடசாலைக்கு வெளியில் மிகப்பெரும் விலையில் கல்வி விற்கப்படுகிறது. அதை வாங்க எல்லோரும் போட்டிபோடுகிறோம்.

கல்வியையும் பெண்களையும் இணைத்து மிகப்பெரும் பொருளாதார சந்தை உருவாகியுள்ளது. வடக்கு கிழக்கு எங்கும் இது பொதுவாகிவிட்டபோதும் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பெருநகரங்களில்த்தான் இதன் அசலான முகத்தை காண முடியும்.

இரண்டு, மூன்று வயது குழந்தைகளின் கல்வி நிலையங்கள் தொடக்கம் உயர்தரம் கற்பிக்கும் தனியார்கல்வி நிலையங்கள் வரையும் தாராளமாக உருவாகிவிட்டன. இரண்டு வயதில் குழந்தைகளை போட்டிக் களத்திற்குள் பெற்றோர் தள்ளிவிடுகிறார்கள்.

இந்த இடத்தில் தவிர்க்கவியலாமல் ஒரு உண்மையை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். குழந்தைகளின் தலையில் மாபெரும் சுமையை ஏற்றுவதில் பெண்களிற்கு உள்ள பங்கு. முன்னர்தான் குழந்தைகளை கல்விநிலையங்களிற்கு அனுப்பிவிட்டு, வீட்டிலிருந்து பெண்கள் பெருமை பேசினார்கள். இப்பொழுது கல்விநிலைய வாசலிற்கு பேச்சிடத்தை மாற்றிவிட்டனர். பிள்ளைகளின் பெறுபேற்றில், கல்வி கற்குமிடத்தில் பெருமைபேசிக்கொள்வதில் ஒப்பீட்டளவில் பெண்கள்தான் முன்னணியில் நிற்கிறார்கள்.

**புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள பிள்ளையை காலையிலிருந்து இரவு வரை ஒவ்வொரு ரியூசனாக ஏற்றியிறக்கினார். ஒரு கட்டத்தில் பிள்ளையுடன் ஓடித்திரிவதா, வீட்டு வேலைகள் செய்வதா, உழைக்கும் வழியை பார்ப்பதா என்ற தடுமாற்றம் ஏற்பட்டது.**

முன்பள்ளிகள் தொடங்கி உயர்தர கல்வி நிலையங்கள் வரை ஒரு அவதானத்தை செலுத்துங்கள். பிள்ளைகளிற்காக காத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை எவ்வளவென்பது புரியும்.

குழந்தைகளை போல இப்பொழுது பெண்களின் உலகமும் நேரநெருக்கடியாகிவிட்டது. அதிகாலையில் எழுந்து பிள்ளையை படிக்க வைத்து, குளிக்க வார்த்து தயாராக்கி, உணவு சமைத்து, கல்விநிலையத்தில் கொண்டுபோய் இறக்கி, மீண்டும் ஏற்றிவந்து, மீண்டும் உடைமாற்றி, அடுத்த கல்விநிலையம்...

இப்படியே இயந்திரமாக இயங்குகிறார்கள் பெண்கள். கணவன்மார் அலுவலகத்திற்கு அல்லது வெளிநாட்டுக்கு சென்றுவிட, பெண்கள் பிள்ளைகளின் படிப்புடன் ஓடித்திரிகிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்களிடம் மோட்டார்சைக்கிள் உள்ளது.

முன்னொரு காலத்தில் அனைத்து முன்பள்ளிகளும் இலவசமாக இயங்கின. இப்பொழுதும் முன்பள்ளிகளில் ஒருபகுதி இலவசமாக இயங்குகின்றனதான். ஆனால் அதிக பணம் கறக்கும் முன்பள்ளிகள்தான் பிரபல்யமானவையாகவும், அதிகம் பேர் பிள்ளைகளை சேர்க்கும் இடங்களாகவும் உள்ளன. சாதாரணமாக இப்படியான இடங்களில் 15,000 20,000 வரை அட்மிசன் பணம் அறவிடப்படுகிறது.

வசதிபடைத்தவர்கள் இப்படியான செலவுகளை தாராளமாக செய்யலாம். அவர்களை பார்த்து வாழ முயலும் ஏழைகளின் நிலை?

அவர்கள் என்ன விலை கொடுத்தாவது அந்த பந்தயத்தில் இறங்குகிறார்கள். அவர்களிற்காகவே இருக்கிறது லோன் சிஸ்டங்கள். வங்கிகளும், நிதி நிறுவனங்களும் கொடுக்கும் லோன்களில் எதற்காக பெண்களிற்கானவைதான் அதிகமாக உள்ளது. 30,000 - 500,000 வரை நிதி நிறுவனங்கள் லோன் கொடுக்கின்றன. ஒவ்வொரு வாரமும் பணம் கட்டும் நடைமுறைதான் பெரும்பாலான லோன்கள். இவை கண்ணுக்கு தெரியாமல் பெண்களை சுரண்டுகின்றன. நிதி நிறுவனங்களில் லோன் வாங்கும் ஒருவர் மெதுமெதுவாக 28 வீத வட்டியை செலுத்துகிறார்கள். சமூகத்தில் உள்ள இன்னொருவரை பார்த்து அவதிக்குள்ளாகும் பெண்கள் பலர்.

அவர்களில் ஒருவரை அண்மையில் சந்தித்தேன். உடுவிலில் உள்ள பாடசாலையொன்றில் தனது பிள்ளையை சேர்க்க அவர் விரும்பினார். அங்கு சேர்ப்பதெனில் குறைந்தது 15,000 அட்மிசன் தேவை. பாடசாலையில் சேர்ந்த பின்னரும் மாதாமாதம் அங்கு செலவுதான். கணவனை இழந்த அவர் இந்த விசப் பரீட்சையில் இறங்கினார்.

கிழமை லோன், மாத லோன் என 50,000 வரை கடன் பெற்றார். பிள்ளையை கல்வி நிலையங்களிற்கு ஏற்றியிறக்க ஒரு மோட்டார்சைக்கிள் தேவையென நினைத்து, நகைகளை அடைவு வைத்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள பிள்ளையை காலையிலிருந்து இரவு வரை ஒவ்வொரு ரியூசனாக ஏற்றியிறக்கினார். ஒரு கட்டத்தில் பிள்ளையுடன் ஓடித்திரிவதா, வீட்டு வேலைகள் செய்வதா, உழைக்கும் வழியை பார்ப்பதா என்ற தடுமாற்றம் ஏற்பட்டது.

ஒருகட்டத்தில் பணப்பிரச்சனை தலைக்கு மெல் சென்றது. நகைகளிற்கு வட்டி கட்ட முடியாமல் அவை அறுதியில் சென்றன. பின்னர் புலமைப்பரிசில் பிள்ளையும் கோட்டை விட்டது. மற்றைய கடன்களும் கழுத்தை பிடிக்க, இன்று அந்தரித்து திரிகிறார்.

கல்வி, பணம் எல்லாம் வாழ்;க்கையை கொண்டு நடத்தவே. முலீறாக வாழ்க்கையை அழிப்பதற்கல்ல. குழந்தைகளில் தமது விருப்பங்களை ஈடுவைக்கும் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதெனில் பெண்கள் மத்தியிலேயே விழிப்புணர்வு அவசியம். ●






▶ முன்னாள் எம்.பி தர்மலிங்கத்தின் நினைவுதினம் கடந்தவாரம் தாவடியில் அனுட்டிக்கப்பட்டது. இதில் எதிர்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# நீரிழிவு நோயிலிருந்து பாதுகாப்பது எப்படி? - 2

டொக்ரர்
இ.சுரேந்திரகுமாரன்
சமூக வைத்திய நிபுணர்,
சிரேஸ்ட விரிவுரையாளர்.
சமுதாய மற்றும் குடும்ப
மருத்துவத்துறை
மருத்துவபீடம், யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்.






வெளியிலிருந்து இரத்தத்தினுள் குளுக்கோசானது பொதுவாக உணவுக் கால்வாயினூடாக உள்ளெடுக்கப்படுகின்றது. இதனை விட தீவிர கடுமையான நோயாளிகள் வாயினாலோ அல்லது மற்றயை குழாய் மூலமான உணவையோ எடுக்க முடியாதுவிடின் ஊசிமூலம் இரத்தத்தினுள் நேரடியாக குளுக்கோஸ் ஏற்றப்படுகின்றது. இது மிகவும் அரிதான செயல். எனவே எமது உடலில் குருதியினுள் வெளியில் இருந்து உணவின் மூலமாக உணவுக்கால்வாயில் சமிபாடடையச் செய்யப்பட்டு அகத்துறிஞ் சப்படுவதன் ஊடாக இரத்தத்தினுள் குளுக்கோசு விடப்படுகின்றது.


ஒருவரின் குருதியில் குளுக்கோசு விடப் படுவது ஒருவர் உணவை உட்கொண்ட சில நிமிடங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் மட்டுமே நடைபெறுகின்றது. ஒருவர் உணவை எடுக்காது சில மணி நேரம் விடுகின்ற போது குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு உடலிலுள்ள கலங்களினால் குருதியினுள் விடப்படும். குளுக்கோசின் அமைப்பிலும் அதனைப் பாவிக்கின்ற தன்மையிலும் தங்கியுள்ளது. எனவே ஒருவர் இரவுநேரம் நித்திரை செய்யும் போது உணவை எடுக்காது இருக்கையில் இச் செயற்பாடே உடலில் நடைபெறுகின்றது. இதற்கு உடலில் இரண்டு செயற்பாடுகளின் ஊடாகவே குளுக்கோசானது இரத்த குழாய்களில் விடப்படுகின்றன.

ஒரு செயற்பாடானது கிளைக்கோஜன் பகுப்பு என்றும், மற்றையது குளுக்கோஸ் புத்துருவாக்கல் ஊடாகவும் நடைபெறுகின்றது. இச் செயற்பாடுகளில் ஈரல், சிறுநீரகம், என்புத்தசைகள் என்பன ஈடுபடுகின்றன. இவை பற்றி பிறிதொரு கட்டுரையில் ஆராயலாம். இவ் கட்டுரையிலும் தொடர்ந்து வரும் சில கட்டுரைகளிலும் உடலுக்கு வெளியில் இருந்து இரத்தத்தினுள் விடப்படுகின்ற குளுக்கோசின் அளவு எவ்வாறு பாதிக்கப்படுகின்றது என்பதை ஆராய்வோம்.

ஏற்கனவே குறிப்பிடப்பட்ட மாதிரி உணவு உள்ளெடுக்காத போது இரத்தத்தில் குருதியின் கட்டுப்பாடானது ஒரு நிலையில் பேணப்படுகின்றது. அனேகமான இரவு வேளையில் எங்கள் குருதியில் குளுக்கோஸ் அவ்வாறான நிலைகளில் பேணப்படுகின்றது. இதன் போது குருதியில் குளுக்கோசின் அளவானது ஓரளவு ஸ்திரமான நிலையில் கட்டுப்படுகின்றது. உணவின் பின்னரான குருதியில் குளுக்கோசின் அளவானது பல காரணிகளில் தங்கியுள்ளது. அவற்றில் முக்கியமானது உணவு உள்ளெடுக்கும் நேரம், உணவின் அளவு, உணவு அமைப்பு அதிலுள்ள காபோவைதரேற்று என்னும் உணவுச்சக்தியின் உள்ளடக்கம் என்பவையாகும்.

பின்னர் இவ் உள்ளெடுக்கப்பட்ட உணவிற்கு உடலினால் வெளிக்காட்டப்படும் குளுக்கோஸ் அனுசேபம் தொடர்பான வெளிக்காட்டலில் பிரதானமாகக் கருதப்படுவது, இன்சுலினும் குளுக்கோன் எனப்படும் சதையினால் சுரக்கப்படும் ஓமோன்கள், ஈரல், என்பு சதைகள், கலங்கள் என்பவற்றில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களாகும்.

இவ் மாற்றங்களில் உணவினால் ஏற்படும் மாற்றம் பற்றி முதலில் ஆராய்தல் மிகவும் பொருத்தமாக இருக்கும். இவ்வாறு நாம் உள்ளெடுக்கும் உணவு, உணவு உள்ளெடுத்த பின் உடலில் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்பதை அறிவதன் மூலமும் நாம் எவ்வாறான உணவினை எந்த அளவில் உள்ளெடுப்பது என்பதை அறிந்து வைத்திருப்பதன் மூலம் உடலில் சக்கரையின் மட்டத்தைப் பேணி நீரிழிவு நோயிலிருந்து பாதுகாப்பைப் பெற்று ஆரோக்கிய வாழ்வினை வாழலாம். ●







# பெண்களின் சுமை குறைய புதிய கண்டுபிடிப்பு


வன்னிமது

தமிழ் மக்கள் போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகளின் பின்னர் பல புதிய கண்டுபிடிப்புக்களை காலத்திற்கு காலம் கண்டுபிடிக்கப்பட்டாலும் பெண்களின் வீட்டு சுமைகளை குறைப்பதற்குரிய மிக அரிதாகவே காணப்படுகின்றது. இதனை தீர்க்கும் வகையில் நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியர் ஆறுமுகன் பொன்வாசன் அவர்களால் கத்தரிக்காய் வெட்டும் பொறி, மிளகாய் வெட்டும் பொறி என்பற்றை உருவாக்கி பெண்களின் வீட்டுச்சுமைகளை குறைத்துள்ளார்.

அது என்ன கத்தரிக்காய் வெட்டும் பொறி, மிளகாய் வெட்டும் பொறி என்று நாம் மீண்டும் அவரிடம் சென்ற போது தனது கண்டுபிடிப்பை பற்றி விபரித்தார். பொதுவாக மக்களின் விசேட நிகழ்வுகளின் போது கத்தரிக்காய் வெட்டுவதற்கு நீண்ட நேரம்பிடிக்கின்றது, இவ்வாறு நடைபெறுவதை தடுப்பதற்காக என்ன செய்யலாம் என்று எண்ணிய போதுதான் இவ்வாறு ஒரு கருவியினை கண்டுபிடிக்க முடிந்தது என்றார். இதன் மூலமாக முப்பது நிமிடத்திற்குள் ஒரு மூடை கத்தரிக்காயினை வெட்ட முடியும்.

இக்கருவியில் எமது தேவைக்கு ஏற்றாற் போல் வெட்டுவதற்கு விதம் விதமான அச்சுக்கள் போடக்கூடியதாக இருக்கும்.

பொதுவாக மிளகாய் வெட்டும் போது கைகள் எரியும் இதனை தடுப்பதற்காகவே இந்த மிளகாய் வெட்டும் பொறி உருவாக்கப்பட்டது. இதுவும் பல்வேறு வகைகளில் எமக்கு எற்றாற் போல் மிளகாயினை வெட்டக்கூடியதாக உள்ளதுடன் கைகளில் எரிச்சல் இல்லாமல் இருக்கும். இதன் மூலம் இலகுவாக்கப்பட்டு நேரம் விரையமாகாமல் தடுக்கப்படும். ●




# நீங்களும் போட்டு பாருங்கள்

இந்த வகையான தலைமுடி அலங்காரம் செய்து கொள்வதற்கு மிக இலகுவானது. அத்துடன் பெண்கள் சாதாரணமாக பிறந்த தின கொண்டாட்டம் மற்றும் சொப்பிங் செல்லும் பொழுது இதனை போட்டு கொள்ளலாம். மிகவும் அழகாக இருக்கும். அத்துடன் பார்ப்பதற்கு எளிமையாகவும் அழகு ஜொலிப்பதாகவும் அமையப் பெறும்.



# தயிரின் பயன்கள்

1. தயிர் நம் உடலுக்கு ஒரு அரு மருந்து
2. தயிரில் உள்ள புரோட்டீன் பாலில் உள்ள புரோட்டீனை விட சீக்கிரமாகவே ஜீரணமாகிவிடும்.
3. ஒரு கை நிறைய தயிரை எடுத்து தலையில் நன்றாக தேய்த்தால் தூக்கம் நன்றாக வரும்
4. குளிர்ச்சியைத் தரும். நல்ல ஜீரண சக்தியை தருவது தயிர்தான்.
5. பால் சாப்பிட்டால் ஒரு மணி நேரம் கழித்து 32% பால்தான் ஜீரணமாகியிருக்கும். ஆனால் தயிர் சாப்பிட்ட ஒரு மணி நேரத்தில் 91% உடனே ஜீரணிக்கப்பட்டிருக்கும்.
6. பாலைத் தயிராக மாற்றும் பக்டீரியா குடலில் உருவாகும் நோய் கிருமி பக்டீரியாவின் வளர்ச்சியை தடுக்கிறது.
7. தயிரில் இருக்கும் பக்டீரியா ஜீரண சக்தியை அதிகரிக்கும் நன்மை செய்யும் பக்டீரியாவை உருவாக்குகிறது.
8. பாலில் LACTO இருக்கிறது. தயிரில் இருப்பது LACTOBACIL.. இது ஜீரண சக்தியை தூண்டி வயிற்றின் உபாதைகளை சரி செய்கிறது.
9. வயிறு சரியில்லாத பொழுது வெறும் தயிர் சோறு மட்டுமாவது உணவாக உட்கொள்ளச் சொல்லி மருத்துவர்கள் சொல்வார்கள்.
10. அதிகமாக வயிற்றுபோக்கு ஏற்படும் பொழுது வெந்தயம் 10 தயிர் 1 கப் சாப்பிட்டால் வயிற்று பொருமல் அடங்கும்.
11. பிரியாணி போன்று உடலுக்கு சூடு தரும் உணவுவகைகளை சாப்பிடும்பொழுது வயிற்றுக்கு அதிகம் கேடு விளைவிக்காமல் இருக்கத்தான் தயிர் சாப்பிடுகிறோம்.
12. உடலுக்குத் தேவையான அதிக கால்சியத்தை தயிர் வழங்குகிறது.
13. வெண்ணெய் காய்ச்சி இறக்கும் பொழுது சிறிது தயிர் சேர்த்தால் நெய் வாசமாக இருக்கும்.
14. புளித்த தயிரை தலையில் தேய்த்து சுத்தம் செய்தால் தலை முடி மிருதுவாக இருக்கும்.
15. தயிர் புளிக்காமல் 23 நாள் இருக்க தேங்காய் சிறிய துண்டாக்கி சேர்த்தால் புளிக்காது.
16. வெண்டைகாய் வதக்கும் பொழுது ஒரு ஸ்பூன் தயிர் சேர்த்தால் நிறம் மறாமல் பிசுபிசுக்காமல் இருக்கும்.
17. வாழைப்பூ வாழைத்தண்டு இவற்றை தயிர் கலந்த நீரில் போட்டு வைத்தால் நிறம் மாறாது.
18. மண்ணெண்ணெய் வாசம் போக தயிர் கொண்டு கை கழுவலாம்.
19. மோராக கடைந்து உப்பு மல்லி கறிவேப்பிலை பெருங்காயம் சேர்த்து நீர் மோராக்கி குடிக்கலாம்.
20. தயிருடன் சர்க்கரை சேர்த்து கலக்கி குழந்தைகளுக்கு கொடுத்தால் விரும்பி உண்பார்கள்.


# பெண்களின் மாதவிடாய் காலத்தில் ஆண்கள் கவனிக்க வேண்டியவை

காலம் மாறி விட்டது. இந்த காலத்தில் பெண்கள் எல்லாம் மாதவிடாய் என்றாலும் சாதார்ணமாக திரிகிறார்கள். முன்னர் போல் 3 நாட்கள் வீட்டுக்குள் இருந்து முட்டை இடுவதில்லை. எனவே நீயும் இப்படி படுத்து கிடக்காமல் வேலையை பார் என்று சொல்லும் கணவர்மாரும் இருக்கதான் செய்கின்றனர். ஆனால் எல்லா பெண்களும் ஒரே மாதிரி இல்லை சில பெண்களுக்கு இயற்கையான மாதவிடாய் வாழ்க்கை பூராக வேதனையை கொடுப்பதாகவும் இருக்ககூடும். எனவே தன் மனைவியை கவனமாக பார்த்து கொள்ள வேண்டும் என்று நினைக்கும் ஆண்களும் இருக்கின்றனர்.

எது எப்படியோ மாதவிடாய் காலத்தில் ஒவ்வொரு கணவனும் தன் மனைவியை நன்கு பார்த்துக் கொள்ள வேண்டிய நாட்கள் இவை. ஆனால், சில வீடுகளில் அப்போது அருவருப்பு பார்வை எட்டிப் பார்க்கும். இது எவ்வளவு கொடுமையான செயல்பாடு என்பது பெண்களுக்கு மட்டும்தான் தெரியும். முக்கியமாக திருமணம் செய்துக் கொள்ள போகும் ஆண்கள், மாதவிடாய் காலத்தில் தங்கள் எதிர்கால மனைவியை எப்படி பார்த்துக் கொள்ள வேண்டும் என தெரிந்து வைத்துக் கொள்ளவது அவசியம்.

### அருவருப்பு

முன்னர் மாதம் மூன்று நாட்கள் பெண்களை வீட்டுக்கு வெளியே இருக்க கூறினார்கள் என்றால் அன்று நாப்கின் போன்ற உபகரணங்கள் இல்லை. இன்று முழுக்க பாதுகாப்புடன் இருப்பதற்கான அனைத்து வழிவகைகளும்இருக்கும்போதும் அவர்களை மூன்று நாட்கள் நெருங்க தயங்குவது அருவருப்புடன் காண்பது எல்லாம் மனிதத்தன்மை அற்ற செயல்.



### வலி

பெண்களுக்கு ஏறத்தாழ 15-45 வயதுக் குட்பட்ட 30 வருடங்கள் மாதவிடாய் மாதாமாதம் ஏற்படும். இந்த காலத்தில் இரத்தப்போக்கு மற்றும் பிடிப்பு காரணமாக அவர்களுக்கு ஏற்படும் வலி சொல்லி மாளாது. எனவே வருடம் முழுக்க குடும்பத்தின் மீது அக்கறை எடுத்துக் கொள்ளும் அவர் மீது இந்த மூன்று நாட்களாவது நீங்கள் அக்கறை எடுத்துக் கொண்டு அன்பும் அரவணைப்புடன் கவனித்துக்கொள்ளுங்கள்.

### வேலைகள்

சில வீடுகளில் மாதவிடாய் காலத்தில் அவர்கள் பயன்படுத்திய உடைகளை போர்வைகளை எல்லாம் அவர்களையே துவைக்க கூறுவார்கள். இதுவும் ஒரு வகையில் கொடுமை படுத்தும் செயல்தான். குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் நோய்வாய்ப்பட்டு போகும் போது கழிவறை வரை வந்து உதவும் பெண்களுக்கு கணவன்மார்கள் இந்த உதவியை கூட செய்யக் கூடாத என்ன?

### ஓய்வு

இந்த மூன்று நாட்களும் அவர்களேதான் சமைக்க வேண்டும். வீட்டை சுத்தம் செய்ய வேண்டும். துணிகளை துவைக்க வேண்டும் என எல்லா வேலைகளையும் அவர்கள் மீது திணிக்க வேண்டாம். அவர்களை குறைந்த பட்சம் அதிக இரத்தப் போக்கு ஆகும் முதல் நாளாவது அவர்களுக்கு ஓய்வளியுங்கள்.

### தாம்பத்தியம்


மாதவிடாய் காலத்தில் உடலுறவில் ஈடுபடுவதில் தவறில்லை என மருத்துவர்கள் கூறினும் தொற்றுகள் ஏற்படும் வாய்ப்புகள் இருக்கிறது. ஆனால் இதை எல்லாம் தாண்டி பெண்களின் வலி மிகுந்த அந்த மூன்று நாட்களிலும் தாம்பத்தியத்திற்கு அழைப்பது தாம்பத்தியத்தில் ஈடுபட விருப்பத்தை வெளிப்படுத்துவது மனிதமற்ற செயல்.

### மனக்கசப்பு

பெண்கள் உடல் ரீதியாக வலி அனுபவிக்கும் அந்த மூன்று நாட்கள் அவர்கள் மனம் ரீதியாகவும் புண்படும்படி நடந்து கொள்ள வேண்டாம். அவர்கள் தவறே செய்திருந்தாலும் கோபப்பட்டாலும் மாதவிடாய் நாட்களில் ஆண்கள் பொறுமையாக இருக்க வேண்டும். ஏனெனில் மாதவிடாய் நாட்களில் பெண்களுக்கு மூட்ஸ்விங் ஏற்படும். இதனால் அவர்களால் கட்டுப்படுத்த முடியாத மனமாற்றங்கள் கோபம் வெளிப்படலாம். இது இயல்பு. இதை ஆண்கள் புரிந்துக் கொள்ள வேண்டும்.

முடிந்தவரை மாதவிடாய் நாட்களில்பெண்களை அவர்கள் போக்கில் ஓய்வாக விட்டு விடுங்கள். கணவர்கள் அவர்கள் வேலையை அவர்களே முடிந்த வரை செய்துக் கொள்ளுங்கள். அது செய்யவில்லை இது செய்ய வில்லை என குறை கூற வேண்டாம்.

# ஆண்களுக்கு பொருந்தும் ரீசேட்ஸ்



ஆண்களுக்கு விதம் விதமான ரீசேட்டுக்கள் வருகின்றன. ஆனால் எல்லா ஆண்களுக்கும் எல்லா ரீசேட்களும் பொருந்துமா என்றால் சந்தேகம் தான். ஒவ்வொருவருடைய உடல்கட்டமைப்பிற்கும் ஏற்பவே ரீசேட்டுக்கள் பொருத்தமானதாக அமையப் பெறும். சரி யார் யாருக்கு எப்படி எப்படியான ரீசேட்டுக்கள் பொருந்தும் என்று பார்க்கலாம்.

உயரமானவர்களுக்கு

நீங்கள் உயரமான ஆண்களாக இருப்பின் உங்களுக்கு கொலர் வைத்த தடித்த துணிகளில் ஆன இடுப்புவரையில் ஜீனஸ் பெலிற்றுடன் நிற்கும் அளவான ரீசேட்டுக்கள் மற்றும் முழுக் கையுடைய ரீசேட்டுக்கள் மிகவும் பொருத்தமானவை ஆகும். ஆனால் இவை உங்கள் இளமையை கொண்டு தெரிவு செய்யப்பட வேண்டும். நீங்கள் மிகவும் மெல்லிய தொப்பை இல்லாத இளமை தோற்றம் உடையவர் என்றால் முழுக்கை ரீசேட் பொருத்தமானதாகும். இல்லை கொஞ்சம் இளமை குன்றி விட்டதென்றால் மற்றய அரை கை கொலர் வைத்த ரீசேட்டுக்கள் பொருந்தும்.

### கட்டையானவரா

நீங்கள் கட்டையான தோற்றம் உடையவர் என்றால் உங்களுக்கு கொலர் இல்லாத மெல்லிய துணியினால் ஆன ரீசேட்டுக்கள் கூட பொருந்தும் ஆனால் உங்கள் உடல் அகலத்தை பொறுத்து அணிதல் வெண்டும். நீங்கள் குண்டான தோற்றம் இருந்தால் தடித்த துணியும் மெல்லய தோற்றம் இருந்தால் மெல்லய துணியும் தெரிவு செய்யலாம்.

### நடுத்தர உயரமானவரா

உங்களுக்கு எல்லா வகை வடிவ ரீசேட்டுக்களும் பொருந்தும் ஆகால் நீங்கள் சரிவான கோடுகள் போட்ட சரிவான படங்கள் போட்ட ரீசேட்டுக்களை தவிர்த்தால் இன்னம் அழகாக திகழ்வீர்கள்.



# ஆபரணங்கள் சொல்லும் அர்த்தம்

பெண்களின் ஆபரணங்கள் வெறும் அலங்காரங்கள் அல்ல. அவை ஒவ்வொன்றின் பின்னாலும் ஒவ்வொரு அர்த்தம் உள்ளது. இன்றைய நவீன காலத்தில் பெண்கள் நாகரிகம் என்ற பெயரில் இவற்றையெல்லாம் கைவிட்டுவிட்டு, வேறு ஆபரணத்தேர்விற்கு செல்கிறார்கள். நமது பாரம்பரிய ஆபரணங்கள் ஒவ்வொன்றின் பின்னாலும் காரணகாரியங்கள் உள்ளன.

### கொலுசு

பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம் காலில் அணியும் நகைகளை வெள்ளியில் தான் அணிகின்றோம். இதற்கு காரணம் தங்கத்தில் மஹாலட்சுமி இருப்பதால் நாம் காலில் அணியும் நகைகளை தங்கத்தில் அணிவதில்லை. அத்துடன் வெள்ளி நம் உடல் சூட்டை அகற்றி குளிர்ச்சியாக்கி சருமத்தை ஆரோக்கியமராக்கும். வெள்ளி கொழுசு குதிக்கால் நரம்பினை தொட்டு கொண்டிருப்பதால் குதிக்கால் பின் நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்ச்சிகளைக் குறைத்து கட்டுப்படுத்துகின்றது.

### மெட்டி

மெட்டி என்பது திருமணம் ஆன பெண்கள் மட்டும் அணியும் ஆபரணம். பெண்களின் கருப்பைக்கான முக்கிய நரம்புகள் கால் விரல்களிலேயெ இருக்கின்றது. வெள்ளியில் இருக்கும் ஒருவித காந்த சக்தி கால் நரம்புகளில் ஊடுருவி நோய்களை தடுக்கும் ஆற்றல் உள்ளது. மெட்டியும் கட்டாயம் வெள்ளியில் தான் அணிய வேண்டும்.

### மோதிரம்

விரல்களில் அணியப்படும் மோதிரம் ரென்சனை குறைக்கவும், இனிமையான பேச்சுதிறன், அழகான குரல் வளத்திற்கும் உதவுகின்றது. அதிலும் மோதிரம் விரல்களில் அணியப்படுவதன் முக்கிய காரணம் ஆண் பெண் இனவிருத்தி உறுப்புகளை ஸ்திரப்படுத்தவும் பாலுணர்வுக்கும் உதவுகின்றது. விரல்களில் மோதிரம் அணிவதால் இதயக் கோளாறுகள் மற்றும் வயிற்று கோளாறுகள் நீங்கவும் உதவுகின்றது. சுண்டு விரலில் மோதிரம் அணியக் கூடாது.

### மூக்குத்தி

மூக்குத்தி அணிதல் என்பது தமிழ் பண்பாட்டில் காலம் காலமாக இருந்து வரும் விடயம். இன்றும் கூட நவீன ஸ்ரைல் உலகிற்கு ஏற்றபோல் விதம் விதமான வடிவில் வருகின்றது. பருவப் பெண்களுக்கு மண்டை ஓட்டு பகுதியில் சில வாயுக்கள் காணப்படுகின்றன. இந்த வாயுக்களை உடலில் இருந்து அகற்றுவதற்குதான் மூக்கில் துளை இடும் பழக்கம் உருவானது. இதனால் பெண்களுக்கு மூக்கு தொடர்பான பிரச்சினைகள் நிவரத்தியாகும். காற்றை வெளியேற்றுவதில் ஆண்களுக்கு வலப் புறமும் பெண்களுக்கு இடப் புறமும் பலமான வலுவான பகுதிகள் ஆகும். முறையான சுவாசப் பரிமாற்றத்திற்கு மூக்குத்தி உதவுகின்றது. இடப்புறம் அணிவதால் சிந்தனை சக்தி மனம் ஒருநிலைப்படுகின்றது.

### காதணி

தோடு பெண்களுக்கே உரிய காதுக்குரிய ஆபரணம் ஆயினும். இதனை ஆண்களும் அணிவார்கள். காது குத்துதல் என்பது இன்றும் சமூகத்தில் சிறப்பு வாய்ந்த சடங்காகும். காதில் துவாரம் இட்டு தொடு அணிவிப்பதன் முக்கிய காரணம் பார்வையை வலுப்படுத்துவதற்கே. ●

# வீட்டில் செய்து கொள்ளுங்கள் மாம்பழ யூஸ்



***மாம்பழம் 1 லீற்றர் யூஸ்க்கு தேவையான அளவு:*** *சீனி 1லீற்றர் யூஸ் செய்ய 1 அரை கிலோ, தண்ணீர் 1அரை லீற்றர், கே.ஸ்.எ பவுடர் முக்கால் டிஸ் பூன் (பூட் சிட்டியில் வாங்கலாம்), சிற்றிக் அசிட் 4 டிஸ் பூன்*

**செய்முறை**

பழுத்த மாம்பழத்தை தோல் நீக்கி சிறு சிறு துண்டாக்க வேண்டும். பின்னர் மாம்பழத்தை மிக்சியில் போட்டு நன்றாக அடித்து கொள்ள வேண்டும். அடிக்கும் பொழுது கட்டி தன்மை இன்றி கூல் பதமாக அடித்து கொள்ள வேண்டும். பின்னர் சீனியை தாச்சியில் போட்டு தண்ணீரையும் விட்டு அளவான சூட்டில் கொதிக்க விட வேண்டும். மாம்பழ கூல் இல் கே.ஸ்.எ பவுடர் சேர்த்து கொள்ள வேண்டும். பின்னர் மாம்பழத்தை அடுப்பில் உள்ள சீனி கரைந்ததும் அதற்குள் ஊற்றி சிற்றிக் அசிட்டையும் போட்டு நன்றாக கொதிக்க விட வேண்டும். கொதிக்கும் பொழுது கறண்டியால் கிளற வேண்டும். கொதித்ததும் அடுப்பை நிப்பாட்டி ஆற விட்டு வடிகட்டி போத்தலில் சேமித்து வைத்து தேவைப்படும் பொழுது எடுக்கும் மாம்பழ யூஸ்ற்கு அளவா நீர் கலந்து பாவிக்க முடியும். (யூஸ் நன்றாக ஆற விட்டியே போத்தலில் அடைக்க வேண்டும்.)

# முடி வளர கற்றாலை சிறந்த மருந்து

முடி வளர வேண்டும், இளநரை போக்கி கருமையான முடி வேண்டும் என்று விரும்புவோர் கற்றாழையை வீட்டிலேயே வளர்க்க துவங்கலாம். கற்றாழையின் சிறந்த நன்மைகளில் ஒன்று முடியை கருமை ஆக்குதலும், முடி உதிர்வதை நிறுத்தி, முடி வளர உதவுவதும் ஆகும். ஆண்கள் மத்தியில் மன அழுத்தம் அதிகரிப்கீபதற்கு ஒருவகையில் முடி உதிர்தலும் காரணமாகும்.

### கருமையாக முடி வளர

கற்றாழை சாறுடன், நெல்லிக்காய் சாறு மற்றும் தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்சி கூந்தலில் தடவி வந்தால் முடி கருமையாக வளரும்.

### தலை முடி வளர

தலை முடி வளர கற்றாழை சதை பகுதியை எடுத்துக் கொண்டு அதன் மீது படிகார பொடியை தூவுங்கள். இப்போது, கற்றாழை சோற்றுப் பகுதியில் இருந்து நீர் பிரிந்து வந்து விடும். இந்த நீருக்கு இணையாக தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்சுங்கள். காய்ச்சிய அந்த தைலம் போன்ற திரவத்தை தினமும் தலையில் தேய்த்து வந்தால் முடி நன்றாக வளரும். ●






# கவனம்... கைத்தொலைபேசி காதலர்கள்!

பி.சியா

பதினாறு வயது சிறுமி பிரவீனா (பெயர் மாற்றப்பட்டுள்ளது). யாழ்ப்பாணத்தின் புறநகரொன்று வாழ்விடம். சற்றுத் தொலைவில் பாடசாலை. பாடசாலை, தனியார்கல்வி நிலையம், வீடு என குறுகியது அவளது உலகம். மிகச்சில நண்பிகள்.

அவளது குடும்பம் மத்தியதர வர்க்க குடும்பம். பெண்பிள்ளைகளின் எதிர்காலத் தில் பெற்றோர் அதிக அக்கறை வைத்திருந் திருக்கிறார்கள். அவளுக்கும், சகோதரிக்கும் வங்கி கணக்குகள் ஆரம்பித்து அதில் குறிப்பிட்ட தொகை பணம், நகை வைப்பு செய்திருந்தனர்.

திடீரென பிரவீனாவின் அக்காவிற்கு ஒரு திருமணம் முற்றானது. வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்திருந்த ஒருவனிற்கு பத்துநாளில் அவசரமாக பெண்பார்த்ததில் பிரவீனாவின் சகோதரி மனைவியானாள். அவசர அவசரமாக பதிவு திருமணம் நடந்தது.

இருபதுநாளில் அந்த வீட்டில் ஒரு புதுஉறவு நுழைந்தது. வீட்டிலுள்ள எல்லோருக்கும் ஐரோப்பிய மாப்பிள்ளை ஏதோ ஒரு பரிசுப்பொருள் கொடுத்தார். பிரவீனாவிற்கு ஒரு கைத்தொலைபேசி கொடுத்தான்.

பதினாறு வயது பிரவீனாவிற்கு கைத்தொலைபேசி புதியதொரு உலகத்தை அறிமுகப்படுத்தியது. பாடசாலை, தனியார் கல்வி நிலையம், வீடு, மிகச்சில நண்பர்கள் என இதுவரை இருந்த உலகத்திற்கு அப்பாலான புதியதொரு உலகம். மகிழ்ச்சி, கிளர்ச்சி, ஆச்சரியம், புதுமை என விரிந்தது அது.

இணையம், மொபைல் கேம் என இரண்டுநாள் தொலைபேசியுடனேயே வாழந் தாள். இரண்டாம்நாள் மாலை தொலை பேசியை மேசையில் வைத்துவிட்டு சில நிமிடங்கள் பக்கத்தில் எங்கேயோ போய்விட்டு வந்தாள். ஒரு மிஸ்ட் கோல் இருந்தது. அறிமுகமற்ற இலக்கம்.

அவளது நண்பிகள் யாரிடமும் தனி இலக்கம் கிடையாது. வீட்டிலுள்ளவர்களின் இலக்கமும் கிடையாது. தனது தொலை பேசிக்கு வந்த முதலாவது தவறிய அழைப்பை விட்டுவிடவும் மனமில்லை. அந்த தவறிய அழைப்புத்தான் அவளது மனதை நீண்ட நேரம் ஆக்கிரமித்திருந்தது. என்ன செய்யலா மென்ற நீண்ட குழப்பத்தின் பின், அந்த இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தினாள்.

## மறுமுனையில் ஒரு ஆண்குரல்.

முதன்முதலில் தொலைபேசி பயன் படுத்தும், பருவக்கவர்ச்சிமிக்க பதினாறு வயது மாணவி ஒருமுனையில்.. தொலைபேசியில் பெண்களை வசியம் செய்யும் அத்தனை வித்தைகளையும் தெரிந்து வைத்திருந்த இளைஞன் ஒருவன் மறுமுனையில்.

பிரவீனா புதியதொரு உலகத்திற்குள் நுழைந்தாள். காலையில் நித்திரையிலிருந்து எழுப்புவது முதல் இரவு நித்திரைக்கு அனுப்புவது வரை அனைத்தையும் முகம் தெரியாத தொலைபேசி காதலன் செய்தான். வேளைக்குவேளை நேரம் தவறாமல் 'சாப்பிட்டாச்சா' என்ற குறுந்தகவலை தட்டிவிட்டு கொண்டிருந்தான். தொலை பேசியும் அன்பாக உறவை தேடித்தரும் என்று பிரவீனா நம்பினாள். நம்பிக்கைதானே காதலின் முதல்படி. முகம் தெரியாமலே இருவரும் காதலித்தனர்.

அவன் இல்லாமல் தன்னால் வாழ முடியாதென அவள் உணர்ந்தாள். அவனும் அப்படியேதான் சொன்னான்.

மிஸ்ட் கோல் வந்து இரண்டு மாதங்களின் பின் இருவரும் வீட்டைவிட்டு ஓடுவதாக முடிவுசெய்தனர். தனது வங்கிக்கணக்கிலிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு அவனுடன் ஓடிச்சென்றாள்.

முதல்நாள் ஒரு விடுதியில் அவளுடன் தங்கினான். ஓரிருநாள் அவளுடன் தங்கி, அவள் கொண்டு வந்த பணத்தையெல்லாம் பறித்தெடுத்தான். அவளது வீட்டுக்கு அருகில் கொண்டுசென்று இறக்கி, அவளது தொலைபேசியிலிருந்தே அவளது பெற்றோ ருக்கு அழைப்பையேற்படுத்தி விடயத்தை சொல்லிவிட்டு தலைமறைவாகிவிட்டான்.

பின்னர் நடந்த வைத்திய பரிசோதனை களில் அவள் genital warls என்ற பால்வினை நோயால் தாக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இது ஒரு உதாரணம். வடக்கில் இப்படி நிறைய கதைகள் உள்ளன என்பதுதான் அதிர்ச்சியளிப்பது.

இளம் வயதுக்காரர்கள் மத்தியில் கைத்தொலைபேசி பாவனை அதிகரிப்பது எதிர்மறை விளைவுகளைத்தான் ஏற்படுத்து கிறது என தொடர்ந்தும் எச்சரிக்கப் பட்டு கொண்டிருந்தாலும், பிரவீனாக்கள் தொடர்ந்து உருவாகிக் கொண்டுதானிருக் கிறார்கள். இதற்கு என்ன காரணம்?

முழுமுதற் காரணம் பெற்றோர்கள்தான். குழந்தைகளை குறிப்பாக பெண்பிள்ளை களை வளர்க்கும்போது அதிக சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டும். பெண்பிள்ளை களின் பின்னாலேயே நாள் முழுவதும் சுற்றிவ ருவதல்ல இதன் அர்த்தம். மனிதர்களையும், சூழலையும் எதிர்கொள்ளும் வல்லமையுடன் அவர்களை வளர்க்க வேண்டும். வயதிற்கு வரும் பெண்பிள்ளைகளிற்கு தன் உடல்பற்றி மர்மங்களோ, பரபரப்புக்களோ நீடிக்ககூடாது. அனைத்தையும் பிள்ளைகளிற்கு பக்குவமாக புரிய வைக்க வேண்டும். புலம்பெயர்வு

---

யாழில் தொலைபேசி மூலமாக சிறுமிகளை ஏமாற்றி துஷ்பிரயோகம் செய்பவர்களில் உணவகங் களில் வேலை பார்ப்பவர்கள், மேசன் வேலை செய்பவர்கள்தான் அதிகமானவர்கள் என்கிறது புள்ளிவிபரங்கள்.

1518 வயதிற்குட்பட்டவர்களில் வருடாந்தம் 30 பேர் வரையில் பாலியல் நோய்த் தாக்கத்திற்குள்ளாகி சிகிச்சை பெறுகிறார்கள். இது யாழ்மாவட்ட புள்ளிவிபரம் மட்டுமே. இவர்களில் அனேகர் அறிமுகமற்ற, சிலநாள் பழக்கமுடையவர்களால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு, நோய்த் தாக்கத்திற்குள்ளாகுபவர்கள்தான் அதிகமா னவர்கள்.

புலம்பெயர் தேசங்களில் வசிப்பவர்கள் வைபர், ஸ்கைப் வழிகளில் தொடர்புகொள்ள வசதியாக ஊரிலுள்ள தமது உறவுகளிற்கு நவீன தொலைபேசிகளை அனுப்பி வைக்கிறார்கள். அதை யார் யார் பயன்படுத்தப் போகிறார்கள் என்ற அக்கறை அவர்களிற்கு இருப்பதில்லை. அதுதான் அதிக விபரீதத்தை ஏற்படுத்துகிறது.

---

### உதயநிதி

சிறுவர் பெண்கள் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி
யாழ்.மாவட்ட செயலகம்



பெற்றோர் 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு தனிப்பட்ட பாவனைக்கு போன் கொடுப்பது தவறு. ஆனால் போன் பாவிப்பதற்கே தடை விதிப்பதும் தவறு. அவர்களின் பொழுதுபோக்கு, தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்ய போன் தேவையாக உள்ளது. ஆனால் அவற்றை பிள்ளைகளின் கைகளில் கொடுக்கும் முன்னர் அந்த தொழில்நுட்பம் பற்றி பெற்றோர் பூரண அறிவை பெற்று கொள்ள வேண்டும். அதன் பின்னர் பிள்ளைகளின் போன் பாவனையை பெற்றோர் கண்காணிக்க வேண்டும். தொலைபேசியை பாவிப்பதனால் வரும் நன்மை தீமைகள் பற்றிய பூரண அறிவை பிள்ளைகளுக்கு எடுத்துரைக்க வேண்டும். சந்தேக கண்ணோடு அவர்களின் போன் பாவனையை அவதானிக்காமல் நண்பர்களாக பழகி அவதானிக்க வேண்டும். 18 வயதுக்கு மேற்பட்டாலும் அவர்களுக்கு பூரண விளக்கம், அறிவு வரும் வரைக்கும் அவர்கள் போக்கில் விடுவதுதவறாகும்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் சிறுவர்களிற்கு தொலைபேசிகளை பரிசில்களாக கொடுக்கிறார்கள். மாமா தந்தது, சித்தப்பா தந்தது, தனக்குத்தான் தந்தது என்று உரிமை கொண்டாடி இரகசியமாக பாவிக்க ஆரம்பிப்பார்கள். ஆனால் அவற்றிற்கு இடமளிக்காது 'இது இப்போதைக்கு தேவையில்லை. வைத்துவிட்டு பின்னர் உங்களக்கு பாவிக்கும் வயது வரும் பொழுது நாங்களே கொடுக்கின்றோம். இப்பொழுது பொதுவாக உள்ள தொலைபேசியை பாவியுங்கள்' என்று அன்பாக பிள்ளைகளிடம் எடுத்து கூறலாம். அவர்கள் ஏற்க மறுப்பின் தொலைபேசியை கொடுத்து விட்டு வீட்டில் வைத்து பாவிக்க சொல்லாம். ஒரு கண் அவர்கள் மீது எப்பொழுதும் இருக்கட்டும்.



HIV , HEP B , HEP C, Genitel herpes, genital warls போன்ற பாலியல்நோய்கள்தான் இலங்கையை அதிகம் பாதித்துள்ளன. அதிலும் யாழ்ப்பாணத்தில் அதிக அச்சுறுத்தலாக இருப்பது Genitel herpes (கொப்பளிப்பான்) genital warls (பால்உண்ணி) என்பனதான். இந்த பாதிப்பிற்குள்ளான ஒருவருடன் உறவில் ஈடுபடுபவரிற்கு தொற்றலாம். கொப்பளிப்பான் என்பது ஆண், பெண் பாலுறுப்புகளில் கொப்பளமாக ஏற்படும். பால்உண்ணி பிரச்சனை தானாகவே ஏற்படலாம். இந்த இரண்டு நோய்களும் orl sex (வாய்வழி உறவு), anal sex (குதவழி உறவு) vaginl sex (யோனி உறவு) போன்ற மூன்றுவகை உறவாலும் ஏற்படலாம். இந்தநோய்கள் ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியம். சிலருக்கு சிலநாள் சிகிச்சையிலேயே குணமாகிவிடும். சிலருக்கு ஆறுமாதங்கள் வரை சிகிச்சை தேவைப்படலாம்.

### யாழ்மாவட்டத்தில்

| ஆண்டு | Genitel herpes | genital warls |
|---|---|---|
| 2011 | 06 பேர் | 04 பேர் |
| 2012 | 18 பேர் | 07 பேர் |
| 2013 | 05 பேர் | 04 பேர் |
| 2014 | 20 பேர் | 17 பேர் |
| 2015 | 20 பேர் | 21 பேர் |
| 2016 (இதுவரை) | 20 பேர் | 15 பேர் |

கலாசாரம் நம்மவர் வாழ்வில் சடுதியான மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. எல்லா வீடுகளிற்கும் தாராளமாக பணமும், மேற்கத்தைய நாகரிகமும், நவீன தொழில்நுட்ப சாதனங்களும் வருகின்றன. பக்குவப்பட்டு வளர்ச்சியடைந்த சமூகம் ஒன்றின் வாழ்க்கை முறையையும், தொழில் நுட்ப சாதனங்களையும் வேறொரு இடத்தில் பாவிக்கும் பொழுது ஏற்படும் விபத்துக் களைத்தான் நாம் தினமும் சந்திக்கிறோம்.

பேஸ்புக் மூலம் யுவதிக்கு தொல்லை, அந்தரங்கப்படம் வெளியீடு என்ற செய்திகள் இன்று நம்மத்தியில் தாராளம். இணையத்தளங்கள், சமூகவலைத்தளங்களின் மூலம் பெண்களிற்கு ஏற்படும் அபாயம் வடக்கில் மிக அதிகமாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. வடக்கு குறும்பட நடிகைகளின் அந்தரங்க படங்கள் என நிறைய பெண்களின் அந்தரங்கபடங்கள் அண்மைநாட்களில் வெளியானது. ஆனால் அதை வெளியிட்ட குற்றவாளிகள் யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. நவீன தொழில்நுட்ப சாதனங்களை பெண்கள், சிறுவர்களிற்கு எதிராக பயன்படுத்துபவர்கள் இந்த சமூகத்தில் உள்ளார்கள் என்பதே அச்சம் தருவதுதான்.

கைத்தொலைபேசி, பேஸ்புக் போன்ற வற்றை ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு பயன்படுத்துவது எப்படி, அவற்றால் வரும் விளைவுகள் என்னவென்பதை பிள்ளை களிற்கு சொல்லிக்கொடுப்பது அவசியம்.

சிறுவர்கள் இளவயதில் திசைமாறி செல்வதற்கு குழந்தைகள் மீதான பெற்றோரின் கவனக்குறைவும், பெற்றோரின் சீரற்ற நடத்தையும்தான் காரணம்.

எந்தெந்த வீடுகளில் சிறுவர்கள், சிறுமிகள் துஷ்பிரயோகப்படுத்தப்படுகிறார்களோ, அதை செய்த காமுகனைவிட அவர்களின் பெற்றோரே அதிக பொறுப்பேற்க வேண்டிய முதன்மை குற்றவாளிகள்! ●



# காரைநகர்: அகதியாகும் கடவுள்!

வன்னிமது

'முன்னைய காலத்தில் ஊரில் ஒரு பிரச்சனை என்றால் கோவிலில் பேசி தீர்ப்பார்கள்.

தற்காலத்தில் கோயிலை மையமாக கொண்டு ஊருக்குள் பிரச்சனைபடு கிறார்கள்'

இது ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதிவான் எம்.எம்.றியாழ் கூறியது. காரைநகர் ஆலடிவீதியில் நூற்றாண்டு பழமையான முருகன் ஆலயம் இடிக்கப்பட்ட விவகாரம் நீதிமன்றத்திற்கு சென்றபோது, நீதிவான் சொன்ன கருத்து அது.

புத்தர் சிலைகள் முளைக்கின்றன, அத்து மீறிய சிங்கள குடியேற்றம் என தமிழர் வாழ்வு நெருக்கடியில் சிக்கியுள்ள இந்த காலத்தில், நம்மவர்களே இந்து ஆலயங்களை இடிக்கிறார்களா? அந்த பிரச்சனையின் பின்னணி என்ன என்பதை அறிய அங்கு சென்றோம்.

நாம் சென்றதும் அந்தப்பகுதி மக்கள் ஒன்று திரண்டு நிறைய பேசினார்கள். அவர்கள் பேசியதிலிருந்து சில தகவல்கள் இவை.

200 - 300 வருடங்கள் பழமையானது அந்தக் கோயில் என்கிறார்கள். 1918 தொடக்கம் கதிரவன் சீனியன், சீனியன் சடையன், சடையன் இளையவி,இளையவி சுப்ரமணியம், சுப்ரமணியம் நாகராசா, முருகேசு தேவராசா என ஆறு தலைமுறையாக கோவிலின் தர்மகர்த்தாவாக இருந்தார்கள்.

கடந்த சில மாதங்களின் முன் சுப்ரமணியம் நாகராசா என்பவர் கோவிலும், காணியும் தனக்கென உரிமை கோரியுள்ளார். அதன்பின் வழிபாட்டில் ஈடுபடும் மக்களுடன் முரண்பட்டும் கொண்டுள்ளார்.

இதனையடுத்து வழிபாட்டில் ஈடுபட்ட மக்கள் நம்பிக்கை சொத்து என்ற அடிப்படையில் (உறுதியில்லாமல் தொடர்ந்து ஆட்சி செயததன் அடிப்படையில்) பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்து, நீதிமன்றத்தையும் நாடியுள்ளனர்.

அதன்பின் சிறிதுநாட்கள் எல்லாம் அமைதியாக இருந்தது. அது சிலநாட்கள்தான். இந்துக்களின் முக்கிய விரததினங்களில் ஒன்றான ஆவணி ஞாயிறன்று, ஆலயத்தை வழிபடுபவர்கள் விசேடபூசை வழிபாட்டிற்கு தயார்படுத்தல்கள் செய்திருந்தனர்.

அப்பொழுதுதான் விவகாரம் உச்ச மடைந்துள்ளது. ஆலயத்தை உரிமைகோரு பவர் திடீரென வந்து, பூசை வழிபாடுகளை தடுத்து நிறுத்தியிருக்கிறார். ஆலயத்தில் இருந்த பொருட்களை வெளியில் வீசி, மூலமூர்த்தியான முருகனின் வேலையும் பிடுங்கி எறிந்ததாக மக்கள் கூறுகின்றனர். பின்னர் நூற்றாண்டு பழமையான முருகன் ஆலயத்தை இடித்தும் அழித்தாராம்.

26.08.2016 அன்று சிறுகுழுவாக ஆலயத்திற்கு வந்து பூசை செய்பவரையும், ஒரு பெண்ணையும் தாக்கியுள்ளனர். சை செய்பவர் மருத்துவமனை கொண்டு செல்லப்படுமளவிற்கு நிலைமை சென்றது. இவ்வளவு நடந்தும் ஊர்காவற்துறை பொலிசார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்பது மக்களின் கொதிப்பு.

இறுதியில் இப்பொழுது நீதிமன்றத்தின் கவனத்திற்கு விடயம் சென்றுள்ளது. இந்த காணி உறுதியின் சொந்தக்காரன் நானென்பதால் கோயில் எனக்குத்தான் உரிமை என ஒருவரும், பாரம்பரிய வழிபாட்டு தலமான அது நமது நம்பிக்கை சொத்து என கிராமத்தவர்களும் எதிரும் புதிருமான நிற்கிறார்கள்.


பிரச்சனை முற்றமுற்ற கோயிலை உரிமை கொண்டாடுபவரை தொடர்பு கொள்ள முடியவில்லை. கோயிலை பெரிதாக்கி, கோயிலுக்கு பின்னால் உள்ள தனது காணியையும் இணைத்து ஆலயம் கட்ட முயன்றவரை சிலர் தவறாக சித்தரிக்க முயல்கிறார்கள் என ஆதங்கப்பட்டு கொண்டார் அவருக்கு நெருக்கமான ஒருவர்.

காலம்காலமாக ஆலயத்தையும், கிராமத்தையும் பராமரித்து ஆலய அடையாளம் கொடுத்தவர்கள் ஒருபக்கம் நிற்க, அவர்களை ஒதுக்கிவிட்டு யாருக்கு ஆலயம் கட்டுகிறீர்கள்? மக்களின் நம்பிக்கை சொத்தை பாதுகாக்க வேண்டாமா என கேட்கிறார்கள் அவர்கள்.

கோயிலை உரிமை கொண்டாடுபவரை தொடர்பு கொள்ள முயன்றபோதும், அதுமுடியாமல் போய்விட்டது.

எப்படியோ, நமது அடையாளங்களை பேணிப்பாதுகாப்பது அவசியம். அதற்கான பொறுப்பு ஒவ்வொருவரிற்கும் உள்ள தென்பதை நினைவில் வைத்திருப்போம். ●





## மொக்க காமடி

எங்கள் பாடசாலை ஆண்டுவிழாவில் அனார்கலி நாடகம் போட முடிவாயிற்று. ஹீரோவுக்கு தமிழ் தெரியாது. அதனால் அவனுக்கான ஓரிரு தமிழ் வசனங்களை ஆங்கில எழுத்துக்களில் டைப் அடித்து மனப்பாடம் செய்யக் கொடுத்துவிட்டனர். (உம்... அப்பா... appa) தந்தையிடம் போராடுகிறான் ஹீரோ 'நான் மணந்தால் அனார்கலியைத்தான் மணப்பேன்!' என்பது வசனம். ஆனால் டைப்பிங்கில் ANARKALI ஐ என்பதில் முதல் எழுத்தான A சற்று அழிந்து போயிருந்தது. எனவே இவன் மேடையில் 'நான் மணந்தால் நாற்காலியைத் தான் மணப்பேன்!' என்று முழங்கினான். இதைக் கேட்டு அரங்கமே சிரிப்பலையில் மூழ்கியது. சோக நாடகம் காமெடியில் முடிந்தது.

## விபுலானந்தா என்ன சொன்னார்?

அமெரிக்க நாட்டிலுள்ள நியூயோர்க் நகர வீதியில் சுவாமி விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். கையிலே ஒரு தடியுடன் உடலின் மீது ஒரு சால்வையை மட்டும் போர்த்தியபடி சுவாமிஜி சென்றார். அப்போது எதிரில் வந்த ஒரு ஆங்கிலேயப் பெண்மணி சுவாமிஜியின் தோற்றத்தைக் கண்டு சிரித்ததோடு மட்டுமின்றி கேலியாகவும் பேசினார். சுவாமிஜிக்கு கோபம் வரவில்லை. புன்முறுவல் தவழும் முகத்துடன் "அம்மா எங்கள் இந்திய நாட்டில் ஒருவர் அணியும் உடைகளை வைத்து அவரை மதிப்பிடும் வழக்கம் இல்லை. நாகரீகம் என்பது மனிதனுடைய நன்னடத்தையில் தான் அடங்கியிருக்கிறது" என்று அப்பெண்ணிடம் சொல்லி விட்டு அங்கிருந்து அகன்றார். "ஆடையை வைத்து ஒருவனை மதிப்பிடாதே"

## விடுகதைகள்

1. மரத்திற்கு மரம் தாவுவான்; குரங்கு அல்ல பட்டை தீட்டியிருப்பான்; சாமியார் அல்ல அவன் யார்?
2. கறுத்த ரோஜா மொட்டு, கனத்த மேகம் கண்டு கணத்தில் இதழ் விரித்திடும், காத்திடும் பின் சாய்ந்திடும் அது என்ன?
3. நெஞ்சிலே ஒரு கல், வீட்டிலே ஒரு கல், வானத்திலே ஒரு கல் அவை எவை?
4. பார்த்தவர் இருவர், எடுத்தவர் ஐவர், உண்டவரோ ஒருவர் அவர்கள் யார்?
5. வாயிலிருந்து நூல் போடுவான் மந்திரவாதியும் இல்லை கிளைக்குக் கிளை தாவுவான்; குரங்கும் இல்லை வலைவிரித்துப் பதுங்கியிருப்பான்; வேடனும் இல்லை அவன் யார்?
6. ஊளையிட்டாலும் ஊரைச் சுமந்து செல்வான் அவன் யார்?
7. கல்லிலே காய்க்கும் பூ; காய்ந்தால் மலரும் பூ: பூவிலே இது வெள்ளைப்பூ. என்ன பூ?
8. எண்ணெய் இல்லை; திரியும் இல்லை ஏற்றி வைக்க ஆளும் இல்லை ஆனாலும் தெரியுது வெளிச்சம். அது எது?
9. கருப்பு நிறமுடையவன் கபடம் அதிகம் கொண்டவன் கூவி அழைத்தால் வந்திடுவான்கூட்டம் சேர்த்தும் வந்திடுவான் அவன் யார்?
10. அரிசி போல் பூ பூக்கும். அம்மாடி எனச் சொல்லும் காய் காய்க்கும் அது என்ன?

விடைகள்:

*1. அணில், 2. குடை 3. விக்கல், உப்புக்கல், கறுக்கல். 4. கண்கள், விரல்கள், நாக்கு.*
*5. சிலந்தி 6. ,தொடருந்து 7. சுண்ணாம்பு ,8. சூரியன் ,9. காகம், 10. மிளகாய்*




ஒரு காட்டிலுள்ள மாமரத்தில் ஏராளமான பச்சைக் கிளிகள் வசித்து வந்தன.

ஒருநாள் அந்தப் பக்கமாக குரங்கு ஒன்று வந்தது. அந்தக் குரங்கு பச்சைக் கிளிகளைப் பிடிக்க நினைத்தது.

கிளிகள் எதுவும் தன்னை அறிந்து கொள்ளாதவாறு மெல்ல மெல்ல மரத்தை நோக்கி ஏறியது குரங்கு. கிளிகளைப் பிடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் கவனிக்காமல் காய்ந்த மரக்கிளை ஒன்றினைப் பற்றி ஏறியது.

உடனே அந்தக் கிளை ஒடிந்து விடவே மரத்தின் மேலிருந்து 'பொத்'தென்று தரை யில் விழுந்தது.

'பொத்'தென்று குரங்கு கீழே விழவே அந்த சத்தத்தைக் கேட்ட கிளிகள் எல்லாம் உடனடியாக மரத்தை விட்டுப் பறந்து சென்றன.

இது குரங்குக்கு மிகவும் அவமானமாக இருந்தது. கோபத்துடன் மரத்தைப் பார்த்தது.

"மரமே! நீ என்ன காரியம் செய்து விட்டாய்! உன் காய்ந்து போன கிளையைப் பிடித்ததால் நான் இந்த நிலைக்கு ஆளாகி விட்டேன். உன்னையும் இந்தக் கிளிகளையும் சும்மா விடமாட்டேன்" என்று கூறியது.

பின்னர் கோபத்துடன் தன் இருப்பிடத்திற்கு வந்த குரங்கு தனக்கு நேர்ந்த கொடுமையை தன்னுடைய நண்பர்களுக்கு தெரியப்படுத்தியது. அதை கேட்டு எல்லாக் குரங்குகளும் ஆத்திரமடைந்தன.

"நண்பனே! உனக்கு நேர்ந்த இந்த அவமானத்தை எங்களுக்கு நேர்ந்ததாக கருதுகிறோம். இது நம் இனத்திற்கு பெரிய அவமானத்தை ஏற்படுத்தி விட்டது. இதை நாம் சும்மா விடக்கூடாது. இதற்கு இப்போது ஒரு முடிவு கட்ட வேண்டும். உன்னை தரையில் விழ வைத்த மரத்தை அழிக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என நாம் கூட்டமாக அமர்ந்து ஆலோசனை செய்யலாம்" என்றது ஒரு குரங்கு.

நன்கு கொழுத்து வாட்ட சாட்டமாக இருக்கின்ற அந்த இளம் குரங்கின் பேச்சை எல்லா குரங்குகளும் ஏற்றுக் கொண்டன.

"நண்பனே! நீயே ஒரு யோசனையை உடனே தெரியப்படுத்து! நாங்கள் எல்லாரும் அதனை அறிய ஆவலாக இருக்கிறோம்" என்றன.

"நண்பர்களே! காட்டில் ஏராளமான வேடர்கள் குடிசை போட்டு தங்கியிருக்கின்றனர். அவர்களிடம் விஷ அம்புகள் இருக்கிறது. அந்த விஷ அம்பில் ஒன்றை நாம் எடுத்து வரவேண்டும். அதனை மாமரத்தின் அடிப் பகுதியில் ஆழமாகக் குத்தி வைக்க வேண்டும். அம்பில் இருக்கின்ற விஷமானது மரத்தில் இறங்கி நாட்பட நாட்பட மரமானது பட்டு விடும். பின்னர் பட்ட மரமாக காய்ந்து விடும். அதன் பின்னர் கிளிகள் அந்த மரத்தில் தங்காது" என்றது அந்த குரங்கு.

"நண்பனே! அற்புதமான யோசனையை வழங்கினாய்! இதனை செய்கின்ற ஆற்றல் உன்னிடம்தான் இருக்கிறது. நீதான் வாட்ட சாட்டமாகவும் திடகாத்திரமாகவும் இருக்கிறாய். உன்னால்தான் மாமரத்தில் ஆழமாக அம்பினை குத்தி வைக்க முடியும்" என்றன மற்ற இளம் குரங்குகள்.

"உங்கள் விருப்பம் அதுவானால் நானே இந்த வேலையை கச்சிதமாக செய்து முடிக்கிறேன்" என்றது அந்த குரங்கு.

அந்த கூட்டத்தில் இருந்த வயதான குரங்கு ஒன்று இதனையெல்லாம் கவனமுடன் கேட்டுக் கொண்டிருந்தது. உடனே அது மற்ற குரங்குகளை நோக்கியது.

"நண்பர்களே! என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள்! நாம் இவ்வாறு செய்வதால் பெரும் துன்பத்தை விலை கொடுத்து வாங்கப் போகிறோம்" என்றது.

வயதான குரங்கின் பேச்சு மற்ற குரங்குகளுக்குப் புரியவில்லை.

"பெரியவரே! நீர் என்ன சொல்கிறீர்! சற்றுப் புரியும்படியாகக் கூறுங்கள்" என்றன இளைஞர் குரங்கு கூட்டம்.

"நாம் இப்போது வாழைத் தோட்டத்தை நம்பியே இதுநாள் வரையிலும் வாழ்ந்து கொண்டிருந்தோம். தோட்டத்தில் கிடைக்கும் வாழைப் பழங்களை சாப்பிட்டு பசியைப் போக்கி வருகிறோம். இதுநாள் வரையிலும் நாம் வசிக்கின்ற வாழைத் தோட்டத்திற்கு காவலாளிகள் யாருமே கிடையாது. ஆனால் நேற்று இரண்டு காவலாளிகள் வந்து வாழைத் தோட்டத்தை சுற்றிப் பார்த்து சென்றதை நாம் கவனித்தோம்.

"அந்தக் காவலாளிகளும் கூட்டமாக இருக்கின்ற நம்மைப் பார்த்து விட்டனர். நாளை முதல் அவர்கள் இருவரும் இங்கு தங்கி காவல் காக்க ஆரம்பித்து விடுவர். அதன் பின்னர் நமக்கு இங்கே இருப்பிடமில்லை. நாம் இந்த வாழைத் தோட்டத்தை விட்டு ஓட வேண்டியதுதான்.

"நாம் தங்குவதற்கு வேண்டுமானால் வேறு இடத்தை தேடிக் கொள்ளலாம். ஆனால் உண்பதற்கு எங்கேச் செல்வது? இந்த நேரத்தில் நாம் மாமரத்தில் இருக்கின்ற மாம்பழங்களை சாப்பிடலாமே! அதனை விட்டு விட்டு அந்த மரத்தைப் பாழாக்க நினைத்தால் அந்த மரமானது யாருக்கும் பயன்படாமல் போய் விடும்" என்றது.

வயதான குரங்கின் பேச்சைக் கேட்ட மற்ற குரங்குகள் எல்லாம் தெளிவடைந்தன.

"பெரியவரே! தக்க நேரத்தில் சரியான அறிவுரையை வழங்கினீர்! இல்லையென்றால் நாங்கள் எல்லாரும் சேர்ந்து அநியாயமாக அந்த மரத்தினைப் பாழாக்கியிருப்போம்!" என்றது.

"நண்பர்களே! நாம் எந்தப் பொருளையும் பாழாக்கக் கூடாது. அதனை நமக்கு தக்க நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்பதை யோசித்துப் பார்த்து செயலாற்ற வேண்டும்" என்றது வயதான குரங்கு.

வயதான குரங்கின் அறிவுரையை மற்ற எல்லா குரங்குகளும் ஏற்றுக் கொண்டன.




# அறிவின்மை கேவலமா?

அறிவின்மை கேவலம். அதைவிடக் கேவலம் அறிய மனமில்லாமை.

*-செஸ்டர்பீல்டு.*

மனித வாழ்வு என்பது தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது.

*- தாகூர்.*

நாம் கற்றுக் கொண்டதைப் போற்ற வேண்டும். நமக்குத் தெரிந்தவற்றை முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

*-மூர்.*

சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு செய்தால் எந்த வேலையும் மிக்க் கடினமானதாக இருக்காது.

*-ஹென்றி போர்ட்.*

கொஞ்சம் கொஞ்சமாக நான் தேர்ந்தெடுத்துத் திரட்டிய நூல்களே என் அறிவுக்கு அடித்தளம் அமைத்தன. எனக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் அளிப்பவை புத்தகங்களே.

*- கிப்பன்.*

உங்களுக்கு உதவக்கூடிய கரங்கள் வேறெங்குமில்லை. அவை உங்கள் தோள்களின் மீதுதான் இருக்கின்றன.

*- லிடர்மென்.*

நீ ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் கவலையே வராது. நீ அறிவாளியாக இருந்தால் குழப்பம் வராது. நீ துணிவுள்ளவனாக இருந்தால் அச்சம் வராது.

*- கன்ஃபூஷியஸ்.*

துன்பம் ஒரு பழம் போன்றது. தாங்க முடியாத மெல்லிய கிளையில் கடவுள் அதை வளரச் செய்வதில்லை.

*- உய்கோ.*

நான் துப்புரவுத் தொழிலாளியாக இருந்தாலும்கூட அந்த வேலையிலும் நானே சிறந்த துப்புரவுப் பணியாளனாக இருப்பேன்.

*- சுவாமி விவேகானந்தர்.*

நம்பிக்கையே மனிதனுக்கு நேரும் எல்லா நோய்களுக்கும் ஒரே மலிவான மருந்து.

*- கௌலி.*

கடமையைச் செய்யும்போது மகிழ்ச்சியாகச் செய்யவில்லையென்றால், அதன் முடிவும் மகிழ்ச்சியாக இருக்காது.

*- நெப்போலியன் ஹில்.*

உங்களைவிட உயர்ந்தவர்களிடமும்,உங்களுக்கு சம்மானவர்களிடமும் நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். ஆனால், அதைவிட முக்கியம் உங்களை விடக்கீழான நிலையில் இருப்பவர்களிடம் காட்டும் நேர்மைதான்.


*- சாக்ரடீஸ்.*

மனிதன் தன் பெரும்பாலான துன்பங்களைத் தன் பேச்சின் மூலமாகத்தான் தேடிக் கொள்கிறான்.

*-ரேபியா.*

புத்தகங்கள் மிகவும் விந்தையானவை. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்பவரிடமும் நூற்றாண்டுக்கு முன்னால் வாழ்ந்தவர்க்ளிடமும் நாம் நேரிடையாக உரையாடி இன்பமுறச் செய்பவை புத்தகங்களே.

*- கிங்ஸ்லி.*



உலகிலேயே மிகப்பெரிய சைக்கிளை ஜேர்மனியை சேர்ந்த 49 வயதான பிரேங் டோஸ் என்பவர் உருவாக்கியுள்ளார். இந்த சைக்கிளின் நிறை 940 கிலோகிராம். இதனை உருவாக்கிய பிரேங் டோஸ் 500 யார் தூரத்திற்கு இதனை செலுத்திச் சென்று கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.



மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை முறையை கண்டுபிடித்துள்ளார் பிரிட்டனில் வசிக்கும் கிர்தின் நித்தியானந்தம். புற்றுநோயை தொடக்கத்திலேயே கண்டறிந்துவிட்டால், புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை டமோக்சி பென் என்ற மருந்துகள் மூலம் கட்டுப்படுத்த முடியும். முற்றிலும் குணப்படுத்த முடியாது. இந்நிலையில் இதற்கான சிகிச்சை முறையை இந்திய வம்சாவளியை சேர்ந்த கிர்தின் நித்தியானந்தம் கண்டுபிடித்துள்ளார்.

இந்தியாவின் திருச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலையொன்றின் மாணவர்கள் கின்னஸ் சாதனை முயற்சியொன்றில் ஈடுபட்டுள்ளனர். 7100 மாணவ, மாணவிகள் 'அ' வடிவில் நின்று அசத்தினர். சுமார் 5 நிமிடம் அட்டையை கையில் பிடித்தபடியே கின்னஸ் சாதனைக்காக நின்றனர். இதற்கு முன்பாக 2,100 பேர் 'வி' என்ற எழுத்தில் நின்றது தான் அதிகபட்ச சாதனையாக இருந்தது. ஆனால் தமிழின் முதல் எழுத்தான 'அ' வடிவிலான எழுத்தில் 7,100 மாணவமாணவிகள் கலந்து கொண்டனர்.





இந்தோனேசியாவின் உள்ளூர் உணவான டெத் நூடுல்ஸ், உலகின் மிக காரமான உணவாக திகழ்கிறது. இந்த நூடுல்ஸில் மம்பஸ் என்ற அதிபயங்கர காரம் கொண்ட மிளகாய் பயன்படுத்தப்படுகிறது. மம்பஸ் என்றால் மரணம் என்று அர்த்தம். அதனால் இந்த நூடில்ஸை டெத் நூடுல்ஸ் என்று பெயரிட்டுள்ளனர். அந்நாட்டில் டெத் நூடுல்ஸ் சாப்பிடும் போட்டியும் நடைப்பெறுவது வழக்கம். அந்த போட்டியில் கலந்துக்கொண்டு டெத் நூடுல்ஸை சாப்பிட்ட பிரிட்டன் சமையல்காரர் ஒருவர் காது கேட்கும் சக்தியை இழந்து செவிடானார்.



மலேசியாவில் ஒரு விசித்திர திருமணம் நடந்துள்ளது. 18 வயது மணமகனும், 42 வயது மணமகளும் திருமணம் செய்துள்ளனர். பெண்ணுக்கு ஏற்கனவே திருமணமாகி 5 பிள்ளைகளும் உள்ளனர். இருவீட்டார் சம்மதத்துடன் மணமக்கள் மோதிரம் மாற்றி திருமணம் செய்துள்ளனர்.



ஒஸ்திரேலியாவை சேர்ந்த எமி சார்ப் என்ற இளம்பெண், சொத்து தொடர்பான குற்ற வழக்கில் கைது செய்யப்பட்டார். அவர் பொலிஸ் காவலில் இருந்து தப்பித்துச் சென்றதாக கூறப்படுகின்றது. அவரின் புகைப்படத்தை பொலிசார் வெளியிட்டு தேடுவதாக அறிவித்தனர். சமூகவலைத்தளமொன்றில் வெளியான அந்தப்படம், சோகமான தோற்றத்தில் உள்ளது, நல்ல படமாக வெளியிடுங்கள் என அந்த இளம்பெண் அதன் கீழ் கருத்திட்டுள்ளார். தன்னை அழகாக காட்டுவதில் அக்கறையுள்ள அந்த பெண்ணிற்கு பொலிசார் வெளியிட்ட படம் கடுப்பை கிளப்பியுள்ளது. சிரித்தபடி உள்ள படமொன்றை அனுப்பி இதை வெளியிடுங்கள் என்றும் அலப்பறை பண்ணியுள்ளார். இறுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த தங்குமிட வசதிகள் கொண்ட ஹோட்டல்

Bright Inn
BRIGHT INN
பிறையிட் இன் ஹோட்டல்




அங்கீகாரம் பெற்ற அனுபவம் வாய்ந்த சமையல் கலை நிபுணர்கள், தரமான சேவையாளர்கள் பணியாற்றும் நிறுவனம் பிறையிட் இன் ஹோட்டல்....

| உணவுகள் | தங்குமிடம் | திருமண மண்டபம் |
| --- | --- | --- |
| தரமான சுவையான உணவுகள் | Luxury Room | திருமணம், பதிவுத் திருமணம் |
| பாரம்பரிய யாழ்ப்பாண உணவுகள் | Semi - Luxury Room | பிறந்தநாள் நிகழ்வுகள் |
| கடல் உணவுகள் | A/C Room | பூப்புனித நீராட்டு விழா |
| வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவுகள் | Non A/C Room | கலந்துரையாடல்கள் |
| ஓடர் மூலம் உணவுகளை பெற்றுக்கொள்ளலாம் | இவை அனைத்திற்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் BRIGHT INN | |

யாழ் பிறையிட் இன் ஹோட்டலின் தலைமை ஸ்தாபனம் - இல. 214/2, மெசன்சர் ஸ்ரீட், கொழும்பு என்ற முகவரியில் இயங்குகின்றது. மேற்கூறப்பட்ட அனைத்து வசதிகளும் கொழும்பில் செய்து தரப்படும். விமான நிலையத்திலிருந்து பிரயாண ஒழுங்குகள் மற்றும் இலங்கை முழுவதுமான சுற்றுலா செல்வதற்கு சொகுசு வாகன ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்...

தொடர்புகளுக்கு
0112 329664, 0117 242233, 0117 242244
E-mail : brighten@eureka.lk | brightenrest@yahoo.com



No. 51, Sivan Road, Thirunelveli, Jaffna.
Tel : 021 222 1889 | E-mail : brightinnjaffna@yahoo.com
HOT LINE 0777 983933

யாழ் மண்ணில் தன்னிகரில்லாத பிரபல கட்டிடப்பொருள் விற்பனையாளர்

சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ் CITY HARDWARE AND STORES

இல. 55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (இலங்கை வங்கிக்கு முன்பாக) Tel : 021 222 2901 | Fax : 021 222 4869




Cement contact
021 222 4466 | 076 767 6256

கடந்த தசாப்தங்களாக யாழ் மக்களுக்குத் தேவையான தரமிக்க அனைத்து கட்டிடப்பொருட்கள் மற்றும் ஹாட்வெயார் பொருட்களையும் வழங்கி வரும் ஸ்தாபனமான யாழ் மண்ணில் பிரசித்திப் பெற்ற நல்லூர் கந்தனின் மகோற்சவ பெருவிழாவிற்கு தமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றார்கள்...

டியுரஷயின் BLUESCOPE LYSAGHT LANKA

சீகிரி

"உப்பிலா பண்டம் குப்பையிலே"

அதி தூய்மையும் உயர்தரத்திலான அயடீன் கலந்த உப்பினை யாழ் மக்களிற்கு விநியோகம் செய்யும் ஏகவிநியோகஸ்தர்கள்...

JP ENTERPRISES

D1/1, Central Road, Colombo - 12.
Tel : 011 4869428 | 011 2444303 | Fax : 011 2444717

ලක්ලුණු லக்லுனு LAKLUNU
தூய்மை மிக்க உயர் தரத்திலான உப்பு

வட இலங்கையில் புகழ்பூத்த, முன்னனி ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரியான ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் புதிய ஆங்கில டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பமாகின்றன...

E-CITY கல்லூரியின் ஏனைய பாடநெறிகள்

IELTS (INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM )

வெளிநாடுகளில் உயர்கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் குடியேற விரும்புபவர்கள் சித்தியடைய வேண்டிய பரீட்சையாகும்.


ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியானது உயர்ந்த சித்தி வீதங்களை வழங்கி வருவதுடன் BRITISH COUNCIL இன் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவும் உத்தியோகபூர்வ பரீட்சை பதிவுப் பிரதிநிதியாகவும் இருக்கிறது.

E-CITY IS AN OFFICIAL IELTS REGISTRATION CENTRE FOR BRITISH COUNCIL



IELTS LIFE SKILLS A1/B1

U.K நாட்டவரை திருமணம் புரிந்தவர்கள் கணவன்/மனைவி (SPOUSE VISA ) விசாவில் UK செல்வதற்கான ஆங்கிலப் பரீட்சையாகும்.



இலகுவான முறையில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டு 100 வீதம் சித்தி அடைய உத்தரவாதம்.

வட இலங்கையில் அதிக மாணவர்களைப் பயிற்றுவித்து 100 % சித்திகளை பெற்றுக் கொடுக்கும் ஒரே கல்லூரி.

DIPLOMA IN SINHALA LANGUAGE

குறுகியகாலத்தில் மாணவர்கள் சிங்கள மொழியினைப் பயின்று எழுத, வாசிக்கப் பழகுவதுடன் சரளமாக சிங்கள மொழியினைப் பேசும் பாடநெறியாகும்.

E-CITY FEEL BRILLIANT FUTURE
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
Srilanka's NO.#1 English, Other Languages and Computer Training Centre

E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )
Website: www.ecityenglishcollege.com | EMAIL : ecitycollege@gmail.com
Facebook : E-City College of English
Tel : 0212217106 | 0770610271 | 0773400418 | 0774924166




No. 199A, 199B, Power House Road, Jaffna. | Tel : 021 221 9925 | Mobile : 077 262 8933
Web : www.isharanewdressmart.com | E- mail : senura@isharanewdressmart.com

சுப நன்நாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட
சிறுவர்கள், பெரியவர்களுக்கான ரெடிமெட் ஆடைகள், அனைத்து விதமான ஆடைத் தெரிவுகள் என்பவற்றை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்...




No. 44,42, Grand Bazaar, Jaffna.
Tel : 021 222 8847
E-Mail : tkumarasamy@sltnet.lk

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 11.09.2016 அன்று வெளியிடப்பட்டது.